www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

UK PRICE 90 P

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

ரூபா 11/00

ஓக.20–26,1995

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY 115



# யுத்தப் பிசாசு! நெருங்கும் அபாயம்!

## மின் கம்பத்தில் மனித உடல்கள்



ஹலோ டாக்டர்

குமுறுகிறார் கவிஞர் வாலி

அபு ஜிகாத்

குச்சி - குச்சி ராக்கம்மா

சினி விசிட்



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## குதூகலித்து... கூத்துமாடி..

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

கொழும்பில் குண்டுவெடித்து
பொதுமக்கள்
கொல்லப்பட்டமை-
கண்டிக்கப்படவேண்டிய கோரம்.

இலக்கு பொதுமக்கள் என்றால்,
மனிதாபிமானத்துக்கு-
சாவுமணி என்றுதான் அர்த்தம்!

ஆனால், கொழும்பு குண்டு வெடிப்பை
வடக்கு-கிழக்கில் நடைபெறும்
சாதாரண மக்களின்
உயிரிழப்புக்களை நியாயப்படுத்த
இனவாதிகள் சிலர்
உபயோகப்படுத்த முற்படுகிறார்கள்.

பாருங்கள், பாருங்கள்
வடக்கு-கிழக்கில்
மக்கள் பலியென்று சொன்னீர்களே!
கொழும்பிலும் பலியாகிறார்கள் அல்லவா?
என்று கேட்பது
எவ்வகையிலும் நியாயமல்ல.

கொழும்பில் மக்கள் பலியாக்கப்பட்டதை
கண்டிக்க வேண்டும்:
காரணமானவர்களை
நிந்திக்க வேண்டும்.

ஆனால், அதற்காக
அங்கு நடந்ததை நியாயப்படுத்த
இங்கு நடந்ததைச் சொல்லி
ஒன்றும், ஒன்றும் இரண்டு
என்று கணக்குக் காட்டக்கூடாது.

அப்படிக் கணக்குக் காட்டுவதானால்
கொழும்பில் குண்டு வைத்தவர்களுக்கு
நன்றி சொல்வதாகிவிடும்.

அதே நேரத்தில்,
சாதாரண சிங்கள மக்கள்
இனப்பிரச்சனையின் தீவிரத்தை
புரிந்து கொண்டுள்ளார்கள்.

தமிழ் பேசும் மக்களது
அரசியல் அபிலாசைகளை
"இனவாதமல்ல,
இனத்தின் பிறப்புரிமை"
என்று உணர்ந்து வருகிறார்கள்.

சிங்கள மக்கள் மத்தியில்
ஏற்பட்டுவரும் புரிந்துணர்வை
குண்டுகளால் கெடுத்துவிட்டால்
இனவாத சக்திகளிடம்
மக்களை தள்ளிவிடுவதாக முடிந்துவிடும்.

குண்டுகளுக்கு கண்ணில்லை.....!
அது விமானக் குண்டுகளாக
இருந்தாலென்ன,
வெடி குண்டுகளாக இருந்தாலென்ன,
ஏவுகிறவர்களின் நோக்கம்
இலக்கற்றுப் போனால்
விளைவது விபரீதம்தான்!

மட்டக்களப்பு நகரிலும்
ஒரு குண்டுவெடித்து
குற்றமற்ற மக்களைக் கொன்று போட்டது.

குண்டுக்கு- குண்டு
என்ற பதிலடியோ அது
என்று சந்தேகம் வருகிறது.

அடிக்கு அடி திருப்பிக் கொடுக்கலாம்.
ஆனால், அடித்தது யார் என்று
தெளிவாகத் தெரியும் போது
அப்பாவிகளுக்கு அடிப்பது
வீரமுமல்ல, விவேகமுமல்ல!

சம்பந்தப்பட்ட சகலதரப்புக்கும்
நாம் சொல்ல வேண்டியது
அதுவே!

□□

அமைச்சர் பீரிஸ்
வடக்கு-கிழக்கு இணைப்பை
அரசு எதிர்க்கும் என்று
ஆணித்தரமாக அறிவித்திருக்கிறார்.

அமைச்சரின் அறிவிப்பை
வரவேற்க வேண்டும்.
உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசாமல்
உள்ளதைச் சொல்லியிருக்கிறார்.

ஐயா சிவசிதம்பரம் போன்றோர்
தீர்வு யோசனையில்
சமஷ்டி இருக்கிறது நம்புங்கள் என்று
குதூகலித்து, கூத்துமாடுகிறார்கள்!

நாங்கள் யாரை நம்புவது?
அமைச்சரையா? ஐயாவையா?
ஆக்கிப் போட்டவர் அமைச்சர்;
அவர் சொல்வதைத்தானே
நம்ப வேண்டும்!

பெரும்பான்மை மக்கள்
ஏற்றுக் கொண்டால் மட்டுமே
யோசனைகள் தீர்வுத் திட்டமாக மாறும்
என்று சொல்லியிருக்கிறார்
பிரதி பாதுகாப்பு அமைச்சர்.

ஆக, முரசு முன்கூட்டியே வெளியிட்ட
விமர்சனங்கள் மெத்தச் சரி.

□□

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும் வரை

என்றென்றும் அன்புடன்
-ஆசிரியர்-

# ஆன்மீகம்

## இயேசுவின் முன்மாதிரி

'உனது வலது கன்னத்தில் ஒருவன் அறைந்தால் அவனுக்கு இடது கன்னத்தையும் காட்டு.' இறைமகன் கிறிஸ்துவின் வாக்கு இது.

ஒருவன் நம்மை அடிக்க வந்தால் பதிலுக்கு அடிக்கத்தானே நம் மனது மூர்க்க வெறி கொள்கிறது. இயேசு சொன்னது ஏன் சாத்தியமாகவில்லை. அவருக்கு மட்டும் ஏன் இது சாத்தியமானது.

வேதாகமம் அவரைக் குறித்து இப்படிச் சொல்கிறது. "அவர் வாதிக்கப்பட்டபோது தம்மைத் தாழ்த்தி வாய் திறவாதிருந்தார். அடிப்பதற்குக் கொண்டுபோகப்படும் ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும், மயிர் கத்தரிக்கிறவன் முன் சத்தமிடாது இருக்கிற ஆட்டைப் போலவும் இருந்தார். அவர் தமது வாயைத் திறக்கவில்லை" (ஏசாயா 53: 7-8)



தவறே செய்யாத அவரைப் பொய்யாகக் குற்றம் சாட்டினார்கள். பிலாத்து முன்னிலையில் நடைபெற்ற விசாரணையின் போது அவர் எப்படி இருந்தார் என்பதை இவ்வார்த்தைகள் உணர்த்துகின்றன.

'யூதருடைய ராஜாவே வாழ்க' என்று கேலி செய்து அவரை அறை மேல் அறை அறைந்தார்கள்.

அத்துணை வேதனைக்கு மத்தியிலும், துயரத்தின் மத்தியிலும், 'பழிவாங்க முடியும்' என்ற நிலையிலும் இயேசு அமைதி காத்தார். வாய்திறக்கவில்லை. அதனால் தான் அவர் கடவுளின் வலது பக்கத்தில் வீற்றிருக்கும் தெய்வீக வரம் பெற்றிருக்கிறார். இயேசு பிறர்க்குச் சொன்னதை, தன் மனித வாழ்விலும் கடைப்பிடித்தார்.

இயேசுவின் பொறுமை, தாழ்மை நம்மில் எப்போது வருமோ அன்றே இறையருள் நமக்குக் கிடைக்கும்.

ஜி. டானியல், நீர்கொழும்பு.

## அண்ணல் நபியின் அபார சொத்துக்கள்

ஒரு நாள் கடைத் தெருவிற்கு சென்ற ஹஜ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அக்கடைத் தெருவில் கூடியிருந்த மனிதர்களைப் பார்த்து "நீங்கள் இங்கே கேளிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறீர்கள், பெருமானாரின் பெரும்பாலான சொத்துக்கள் மஸ்ஜிதில் பங்கு வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனவே" என்றார்கள்.

இதைக் கேட்ட மனிதர்கள் முண்டியடித்துக் கொண்டு குறிப்பிட்ட மஸ்ஜிதை நோக்கி ஓடினார்கள். அங்கு எதுவும் பங்கிடப்படாததைக் கண்ட அவர்கள் மிகக் கோபத்தோடு திரும்பி வந்து அப்படி ஒன்றும் அங்கு நடைபெறவில்லையே எனக் கூறினர்.

வேறென்ன அம் மஸ்ஜிதில் நடைபெறுகிறது என அபூஹுரைரா (ரலி) கேட்க அதற்கவர்கள் "அங்கு சில மனிதர்கள் அல்லாஹ்வை திக்ரு செய்வதிலும் வேறு சிலர் குர்ஆன் ஓதுவதிலும் ஈடுபட்டுள்ளார்கள்" என்றனர்.

அப்படியானால் அவைகள்தான் அண்ணல் நபியின் அபார சொத்துக்கள் என அபூஹுரைரா (ரலி) அவர்கள் பதிலளித்தார்கள்.

எம்.சி.கலீல்-கல்முனை-05

## கவிதைப்போட்டி இல-112

### பரிசுக்குரிய கவிதை

### நாளாகும்!

படியிறங்கி வாருங்கள்!
படியிறங்கி வாருங்கள்!!
மாடியிலே தெரியாத
மனுக்குலத்து அழிவெல்லாம்
வீதியிலே தெரிகிறது.
வாருங்கள்! பாருங்கள்!!
சிதைவுகளின்-அழிவுகளின்
சிற்பிகள் யார் புரிகிறதா?
தெரியாது! புரியாது!!
தெளிவாக நாளாகும்.

மடவளை -பஹூர்தீன்

### இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

**சொன்னால் கேளப்பா**

சொன்னால் கேளப்பா!
'ஷொட்' டொன்றும் எடுக்காதே!
பின்னால் விபரீதம்...!
பிடிப்பார்கள் உன்னை!
முன்னால் 'பிடித்த' வனின்
முகவரியைக் காணவில்லை!
பின்னால் உனைத் தேட
என்னால் முடியாது...

பொன். நவநீதன்-பாண்டிருப்பு-02

**இடறிவிடும் கவனம்!**

முன்னேறி நடத்தலா?!
பின்னேறி நடத்தலா!
எப்படியாயினும் -கால்
கவனம்-
இடறிவிடும் கவனம்!!

ஏ.எச்.ராஸீன்மொகமட்-ஏத்தாலை



**ஏமாற்றம்**

படிக்க ஆசை
பாடசாலை விடுமுறை...
'ஷெல்' விழுந்ததால்!!

கவிஜூட் ரொஷான்-கொழும்பு 13

**பாதுகாப்பு**

கொஞ்சம் நில்லடி!
கொழும்பில் பிடிபட்டு
பாணந்துறை ஆற்றில் மிதக்க
வழியெடுத்துக் கொடுக்காமல்
வழித்துணைக்கு வந்துவிடு!

சுரேஷ் ராஜநாயகம்-மட்டக்களப்பு

**எப்படித் தப்புவது?**

இம்முது வயதில் நாங்கள்
என்னப்பா செய்தோ மிங்கே?
ஒரு புறம் ஷெல்வீச் சிங்கே
மறுபுறம் குண்டு வீச்சு!
இன்னொரு புறமோ, மாறா
இனவாதக் கொலைகள் வேறு!
இத்தனை படியுந் தாண்டி
எப்படித் தப்பு வோமோ?

சி.வி.பி.மாணிக்கம்-தம்பிலுவில்.

**படி இறக்கம்**

சட்டத்தில் நிபுணரென
பட்டங்கள் பெற்று மென்ன?
நியாயங்கள் நித்திரைக்கு
நிரந்தரமாய் போனதனால்
வாட்டமுறும் மனங்களுக்கு
வகையேதும் இல்லை யென்றோ?
நாட்ட மற்ற மனத்தோடு
நடைதளர்ந்த படி இறக்கம்!

தர்ஷிக்கா கனகசிங்கம்-மட்டக்களப்பு

**ஆசை**

"படியிறங்க ஆசை - யுத்தம்
முடிவு பெற ஆசை
முடிவு பெற்று மீண்டும்
விடிவு பெற ஆசை"

திருமதி துளசிமணி மனோகரன்-அக்கரைப்பற்று 07

**பத்திரம்...!**

"பார்த்து படி இறங்குங்கள்-பையில்
அடையாள அட்டை பத்திரம்!

அமிர்த-சந்திரபாலன்-திருக்கோணமலை.

**காலனவன் காலடியில்**

அடிமேல் அடிவைத்து
ஆராய்ந்து நடப்பதென்ன-உயிரை
கவர்ந்திடும் காலனவன்
காலடியில் இருப்பானோ?

ஜி.முத்து-வெல்லம்பிட்டி.

## கவிதைப் போட்டி இல-115



### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 26.08.1995

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 115
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

**நாங்களும் அப்பாவிகள்**

அழகான இலங்கைக்கு
அடிவைத்த நாள் முதலாய்
அஞ்சுகின்றோம் நாங்களும்.

சுப்ரமணியம் வாணீஸ்வரி-அப்பர் கலஹா

**விடிவை எண்ணி**

துயரச் சிலுவையின்
சுமை குறைக்க
நடக்கின்றோம்....
இனவாதப்பாறைகள்
வழியில் தடையாக
இருந்தும் நடக்கின்றோம்-
விடிவை எண்ணி

இ.யோகநாதன்-வவு/சின்னப்புதுக்குளம்.




அன்பான முரசே!
நீ வாராவாரம் சுமந்துவரும்
சிறுகதைகள், அரசியல் அம்சங்கள், சினிவிசிட் அனைத்தும்
தித்திக்கும் தேன் 'அமுதாம்!
உனது சேவை சிறப்புற வாழ்த்துகின்றேன்.

லங்கேஸ்வரி தம்பிராஜா-திருகோணமலை

முரசு தரும் அம்சங்கள் அனைத்தும் சூப்பர் என்றாலும் முரசைக் கையில் எடுத்ததும், தாய் தொடரைத்தான் முதலில் படிப்பேன். ஒரு அருமையான கருத்துமிக்க அபூர்வ நாவல் ஒன்றை வாராவாரம் எமக்களிக்கும் முரசைப் பாராட்ட வார்த்தையே இல்லை. 'தாய்' தொடரைப் படிக்கும் போது எனக்கேற்படும் தாய்மை உணர்வை என்னவென்று சொல்வது. முரசுக்கு என் நன்றி!

திருமதி.றிஸானா ரவுப்-தர்கா நஹர்.

என் இனிய முரசே!
நீ தாங்கிவரும் அத்தனை அம்சங்களும் பிரமாதம். ரசிகன் தரும் இலக்கிய நயமும், அரசியல் கட்டுரைகளும் அசத்தலாக அமைந்திருக்கின்றன. ஷர்மிளா இஸ்மாயிலின், கைவண்ணத்தில் உருவான 'மறுபக்கம்' சிறுகதை பலே ஜோர். என்றும் இளமையில் குன்றாத அழகுடன் மிளிர வாழ்த்துகின்றேன்.

உன்னஸ்கிரிய எ.பி.சதாசிவம்-கொழும்பு 12

**சாயல்**

நீ வார முரசாக வந்தும் எமக்கு அடங்கவில்லை. போதவில்லை. தினமும் வாராயோ என பேராசைப்படுகின்றோம். பத்திரிகை வைரங்களிற்குள் நீ கோஹினூராக ஜொலிக்கின்றாய். நடிகர் திலகத்தின் சாயல் இல்லாது நடிக்கும் நடிகன் இனிவருவது எவ்வளவு தூரம் அரிதாக இருக்கப்போகின்றதோ, அதைப்போல் உன் சாயல் இல்லாத புதிய பத்திரிகைகள் இனி வருவது கடினம் போலும்.

எஸ்.டி.வித்தியா, கொட்டாஞ்சேனை.




அன்பின் முரசே!
ஆக்கங்கள் தந்து அறிவுகளை
வளர்த்து அமுதங்கள்
பொழியும் முரசே!
உன் புகழ் எங்கும்
பரந்திருக்கட்டும்!

அரிச்சந்திரன்-அக்கரைப்பற்று 06

தித்திக்கும் தேன் சுவையுடன் வாரம் தோறும் வீறு நடைபோட்டுப் பவனிவரும் தினமுரசே! உன்னில் என்னை மிகவும் கவர்ந்தது மகாபாரதம்.

செல்வன்.சீ.ஸ்ரீரவி-இரத்தினபுரி

முரசிற்கு எனது வணக்கம்,
அனைத்து ஆக்கங்களும் அருமையாக இருக்கின்றன, இலக்கிய நயம், அரசியல் கட்டுரை தொடர், சிறுகதைகள், மற்றும் அரசியல் அலசல் போன்றவை சிறப்பாக இருக்கின்றன. மேலும் ரசிகனின் தொடர்கதையை மீண்டும் எதிர் பார்க்கின்றோம். தினமுரசின் இப்பணி தொடர எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்

சி.பரமநாதன்-கந்தப்பளை

இனிய முரசே,
நீ சுமந்துவரும் அத்தனையும் அருமையிலும் அருமை. அதிலும் கிரைம் சக்கரவர்த்தியின் புதிய தொடர் ஆரம்பத்திலேயே அசத்துகிறது. முரசே இனியாவது 'ரசிகனை' நமக்கு அறிமுகப்படுத்த மாட்டாயா? நாரதரின் எக்ஸ்ரே ரிப்போர்ட், ஆசிரியரின் கருத்து ஆர்வமூட்டுகிறது. அப்பப்பா முரசுக்கு நிகர் முரசேதான்.

ரிஸ்வானா லதீப்-உக்குவளை

என் அன்பு முரசே!
வாரத்திற்கு வாரம் உமது முன்னேற்றம் கண்டு என்னுள்ளம் பூரித்து(ப்) போகின்றது. இன்று போல் என்றும் நீ (ர்) நிலைத்து நின்று இப் புவியினில் வாழ என் கோடான கோடி வாழ்த்துக்கள்.

செல்வன்.கே.வின்சன்ட்-சத்துருக்கொண்டான்.

என் இனிய முரசே
வாசகர் இதயத்தில் நீங்கா இடத்தை பிடித்துக் கொண்ட நீ தாங்கிவரும் இலக்கிய நயம் அரசியல் தொடர் எக்ஸ்ரே ரிப்போர்ட் மற்றும் அனைத்து அம்சங்களும் இனிமை. உன் சேவை வாசகர்களாகிய எங்களுக்குத் தேவை வளர்க உன் சேவை.

எ.மாக்கஸ் கனிசியஸ்-கொழும்பு 15

முரசு என்ற 3 எழுத்தே - இந்த
தரணி என்ற 3 எழுத்தில் - பெற்ற
கல்வி என்ற 3 எழுத்தைக் கொண்டு
பண்பு என்ற 3 எழுத்துடன்
பாசம் என்ற 3 எழுத்துடன்
வாழ்வு என்ற 3 எழுத்தில்
வெற்றி என்ற 3 எழுத்தைப் பெற்று
வாழ்க என்ற 3 எழுத்துடன்
முடிக்கும் அன்பு முரசு

ரோசான் பைரூஸ்-பேருவளை


படிப்பகம்

www.padippakam.com

● யுத்தத்தை நிறுத்த வேண்டும் ● சமாதான சூழல் ஏற்படுத்த வேண்டும் ● அன்றாட பிரச்சனை தீர்க்கப் படவேண்டும்.

# அரசோடு மீண்டும் பேச்சு நடத்த புலிகள் நிபந்தனை

# கூட்டணி மீது புலிகள் துரோகக் குற்றச்சாட்டு!

(யாழ் நிருபர் வர்மா)

- தமிழ் மக்களது தலைவிதியை பிறிதொரு இனம் தீர்மானிக்க முடியாது.
- இந்தியா தோல்வி கண்ட பாதையில் இன்றைய அரசு.
- புலிகளுக்கு கூட்டணி அரசியல் விவேகம் போதிப்பதா?

"அரசாங்கம் அறிவித்துள்ள அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் தமிழ் மக்களுக்கோ, அவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் புலிகளுக்கோ முன்வைக்கப் பட்டதல்ல. எனவே இது பற்றி கருத்து வெளியிடும் அவசியமில்லை. ஆயினும் இந்த யோசனைகள் தற்போது ஏன் முன்வைக்கப் பட்டுள்ளன? இதன் அந்தரங்க நோக்கம் என்பவை பற்றி எமது மக்களுக்கு விளக்க வேண்டியுள்ளது." இவ்வாறு புலிகளது அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அன்ரன் பாலசிங்கம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்த கருத்துக்களில் சில முன்னரே பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன. ஆயினும் முழுமையாக வெளியிடப்படவில்லை. அன்ரன் பாலசிங்கத்தினால் கூறப்பட்ட முக்கிய கருத்துக்கள் மட்டும் இங்கு தரப் படுகின்றன.

### இராணுவத் தீர்வில் அக்கறை

சமாதான வழிகளில் தமிழரின் தேசியப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணும் உன்னத நோக்கு சந்திரிகா அரசுக்கு இருந்திருக்குமானால் புலிகளோடு பேச்சு நடத்திய போது தமிழர்களின் அன்றாடப் பிரச்சனைகளை தீர்த்துவைத்து, ஒரு தீர்வுத் திட்டத்தையும் புலிகளின் பரிசீலனைக்கு முன்வைத்திருக்கலாம். ஆனால், சந்திரிகா அரசு அப்படிச் செய்யவில்லை. இராணுவ நலன்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து பேச்சுக்கள் முறிவடைவதற்கான புறநிலைகளை உருவாக்கியது.

அன்றும் சரி, இன்றும் சரி இராணுவத் தீர்விலேயே அரசாங்கம் நம்பிக்கை வைத்திருக்கிறது. இராணுவரீதியாக புலிகளை அழித்துவிட்டால், தான் விரும்பியவாறு ஏதாவது அரைகுறையான தீர்வுத் திட்டத்தை தமிழ் மக்கள் மீது திணித்துவிடலாம் என்று அரசு நினைக்கிறது.

புலிகள்தான் மக்கள். மக்கள்தான் புலிகள் என்ற உண்மையைப் புரிந்து கொள்ளாத அரசு, புலிகளை ஓரங்கட்டி விட்டு தமிழ் மக்களை வென்றெடுக்கலாம் என்று நினைக்கிறது. இந்த வரலாற்றுத் தவறையே முந்தைய அரசும், இந்திய அரசும் செய்தன என்பதை சந்திரிகா அரசு உணர்ந்து கொள்ளாதது எமக்கு வியப்பாக இருக்கிறது.

இராணுவரீதியில் புலிகளை நசுக்கி விட்டு, மாகாணசபைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முயன்றது இந்திய அரசு. ஆனால் படு தோல்விகண்டது. இந்தியாவின் தவறான அணுகுமுறையையே இந்த அரசும் இப்போது கடைப்பிடிக்கத் தீர்மானித்திருக்கிறது.

### இந்தியாவின் பாதையில்

உலகத்தின் மிகப்பெரிய இராணுவத்தைக் கொண்டு இந்திய வல்லரசால் நிறைவேற்ற முடியாது போன திட்டத்தையே இந்த அரசு செயற்படுத்த நினைக்கிறது.

சந்திரிகா அரசு ஆபத்தான விஷப் பரீட்சையில் இறங்கியுள்ளது. இதன் பாரதூரமான விளைவுகளுக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும்.

விடுதலைப் புலிகளை இராணுவரீதியில் வெற்றி கொண்ட பின்னர் அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தை செயற்படுத்தப் போவதாக அரசு கூறியிருக்கிறது. பெளத்த மகா சங்கத் தலைமைக்கு இப்படியான ஒரு உறுதி மொழியையும் சந்திரிகா அரசு வழங்கியிருக்கிறது.

இதுதான் அரசின் நிலைப்பாடு என்றால் இந்த யோசனைகள் ஒருபோதும் நிறைவேற்றப்படமாட்டாது. ஏனென்றால் புலிகள் இயக்கத்தை இராணுவத்தால் தோற்கடிக்கவும் முடியாது; அழிக்கவும் முடியாது. அப்படித்தான் புலிகள் அழிக்கப் பட்டாலும் இத்தீர்வு யோசனைகளை செயற்படுத்த வேண்டிய தேவையோ நிர்ப்பந்தமோ அரசாங்கத்திற்கு இருக்கப்போவதில்லை.

இன்னொரு விடயத்தையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த அதிகாரப் பரவலாக்கம் என்பது முழுமையான தீர்வுத்திட்டமாக அல்லாமல், வெறும் யோசனைகளாகவே சிபார்சு செய்யப் பட்டுள்ளன.

இந்த யோசனைகள் பற்றி முக்கிய அமைச்சர்கள் சிலர் நாளுக்கு நாள் வெவ்வேறு விளக்கங்களையும், வியாக்கியானங்களையும் அளித்துவருகிறார்கள். வடக்கு-கிழக்கு இணைந்திருக்காது என்றும், வடக்கு-கிழக்கில் உள்ள பெருநிலப் பகுதிகளை துண்டாடும் வகையில் எல்லை நிர்ணயம் செய்யப்படும் என்றும், தமிழருக்கு விசேட அதிகாரங்கள் எதுவும் வழங்கப் படவில்லை, இது முழு இலங்கைக்குமான ஒரு நிர்வாக ஒழுங்கமைப்பு என்றும் அந்த அமைச்சர்கள் விளக்கங்கள் அளித்து வருகிறார்கள்.

இந்த யோசனையின் முக்கிய அம்சங்கள் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் திருத்தப் பட்டு, இறுதியாக சிங்களப் பெரும்பான்மை பாராளுமன்றமும், சிங்களப் பொது மக்களுமே இறுதி முடிவை எடுப்பார்கள்.

ஆகவே, இந்த யோசனைகள் குறித்து நாம் இப்பொழுது கருத்துக்களை தெரிவிப்பதில் அர்த்தம் இல்லை.

### சுயநிர்ணய உரிமை

தமிழரின் தேசிய பிரச்சனைக்கான தீர்வை தீர்மானிப்பது தமிழ் மக்களாகவே இருக்க வேண்டும். சுயநிர்ணய உரிமையின் அர்த்தமும் அதுதான். எமது அரசியல் தலைவிதியை தீர்மானிக்கும் உரிமை எமக்குண்டு. எமது அரசியல் தலைவிதியை மற்றொரு இனம் தீர்மானிக்க முடியாது. நாம் ஒரு சிறுபான்மைக் குழு அல்ல.

இந்த அதிகாரப் பரவலாக்க யோசனைகள் எதிர்காலத்தில் எவ்வித மாற்றத்தைக் காணும், எவ்வித வடிவம் எடுக்கும் என்ற தீர்க்கதரிசனப் பார்வையின்றி கொழும்பிலுள்ள தமிழ் கட்சிகள் எடுத்த எடுப்பில் இந்த யோசனையை வரவேற்றுள்ளன.

இவர்களில், 40 ஆண்டுகளுக்கு மேலாக ஏமாற்றப்பட்டு, அரசியல் பாலைவனத்தில் அலைந்து திரிந்த முதிர்ந்த பழம் அரசியல் வாதிகளும் இருக்கிறார்கள். இவர்கள் சந்திரிகா அரசின் குடையின் கீழ் குளிர்காய்ந்து வருகிறார்கள்.

சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை கைவிட்டு பின்னர் மாவட்ட சபைகளையும், மாகாண சபைகளையும் பிரமாதமான தீர்வுத் திட்டங்களாக புகழ்ந்துரைத்த பழம் அரசியல் வாதிகள் இப்போது சந்திரிகா அரசின் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை முற்போக்கானவை என்று பாராட்டுகிறார்கள். இவர்கள் அரசியல் விவேகம் பற்றி புலிகளுக்குப் போதிக்கிறார்கள். இவர்களது அரசியல் ஞானம் பற்றி எமது மக்களுக்கு நன்கு தெரியும்.

அதிகாரப் பரவலாக்கம் என்ற ஆசை வலைவீச்சுக் பலியாகி, மீண்டும் ஒரு தடவை தமிழ் மக்களுக்கு துரோகம் இழைக்க முனைகிறார்கள்.

இவர்களை நாம் மன்னித்தாலும், எமது இனத்தின் வரலாறு ஒருபோதும் மன்னிக்கப் போவதில்லை.

### கதவுகளை மூடவில்லை.

நாம் சமாதானக் கதவுகளை மூடிவிட வில்லை. போரை நிறுத்தி சமாதான சூழலை ஏற்படுத்தி, எமது மக்களின் அன்றாடப் பிரச்சனைகளை அரசாங்கம் தீர்த்து வைக்குமானால், நாம் மீண்டும் பேச்சுக்களில் பங்கு கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

ஆனால், அரசு யுத்தத்தை தீவிரப்படுத்துமானால் நாம் சமாதானக் கதவுகளை மூடிவிட்டு தனியரசை நிர்மாணிப்பதற்கு போராடுவதைத் தவிர வேறு வழியில்லை.

இவ்வாறு அன்ரன் பாலசிங்கம் 11.08.95 மாலையில் யாழ்ப்பாணத்தில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார். அவர் கூறிய ஏனைய கருத்துக்களில் சில வேறு பத்திரிகைகளில் முன்னரே வெளிவந்தமையால் அவை மட்டும் இங்கு தவிர்க்கப் பட்டுள்ளன.

## பாரிய பாய்ச்சலுக்கு புலிகள் திட்டம்!

### காட்டுப் பகுதிகளில் தாக்குதல் தயாரிப்புக்கள்!

### புலிகள் விதித்துள்ள புதிய 'காலக்கெடு'

கிழக்கு மாகாணத்தில் பாரிய தாக்குதல் நடவடிக்கை ஒன்று மேற்கொள்ள புலிகள் அமைப்பின் தாக்குதல் பிரிவுகள் திட்டமிட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

காட்டுப்பகுதிகளில் தாக்குதல் நடவடிக்கைக்கான தயாரிப்புக்களில் புலிகள் அமைப்பினர் ஈடுபட்டுள்தாகவும் அறியப்படுகிறது.

'சிறீலங்கா அரசின் ஆயுதப்படைகள் மற்றும் காவல்துறையில் பணிபுரியும் தமிழ் சகோதர சகோதரிகளுக்கு' என்ற தலைப்போடு புலிகளின் துண்டுப்பிரசுரமொன்று கிழக்கில் விநியோகிக்கப்பட்டது.

20.08.95ம் திகதிக்கு முன்னர் படைகளிலும், பொலிஸ்துறையிலும் பணியாற்றும் தமிழர்கள் விலகிவிடவேண்டும். இல்லாவிட்டால் துரோகிகள் பட்டியலில் அவர்கள் பெயர் இடம்பெறும் என்று புலிகளது பிரசுரத்தில் காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது.

தமிழிலும், சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் தனித்தனியாக அச்சிடப்பட்டு அப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

புலிகளது தாக்குதல் கிழக்கில் நடக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படும் பகுதிகளில் உள்ள தமிழ் குடும்பங்கள் இரவில் தமது வீடுகளில் தங்காமல் வேறு பகுதிகளுக்குச் சென்று தங்கிவிடுகின்றனர்.

கிழக்கிலும் ஷெல் தாக்குதல்களும், விமானக்குண்டுவீச்சுக்களும் பரவலாக ஆரம்பித்துள்ளதை அடுத்து இராணுவ, பொலிஸ் நிலைகளை அண்டியுள்ள பகுதிகளில் உள்ள மக்கள் பீதியோடு காணப்படுகின்றனர்.

கிழக்கில் இராணுவ முகாம்கள் மூடப்பட்ட பகுதிகள் புலிப்பகுதிகள் என்ற கண்ணோட்டத்தோடு நோக்கப்படுவதால் அங்குள்ள மக்களும் பல துயரங்களை அனுபவிக்கவேண்டியுள்ளது.

குறிப்பாக, மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரைப்பிரதேசம், திருமலை மாவட்டத்தில் மூதூர் பிரதேசம் அகியவை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. அத்தியாவசியத்தேவைகளைக்கூட அங்குள்ள மக்கள் நிறைவேற்ற முடியாமல் அவதிப்படுகின்றனர்.

## தமிழ் மக்கள் மீது குண்டர்கள் தாக்குதல்!

### கிழக்கில் தமிழர்கள் மத்தியில் அச்சம்

(மட்டக்களப்பு நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் தமிழர்களுக்கு சொந்தமான வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டு, இருவர் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் மத்தியில் அச்சமும், பதட்டமும் ஏற்பட்டுள்ளன.

13.08.95 அன்று அம்பாறை மாவட்டத்தில் 4ம் கொலனியில் தமிழர்கள் மீது வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டதையடுத்து 300 தமிழ் குடும்பங்கள்வரை அகதிகளாக வெளியேறியுள்ளனர்.

கடந்த 90ம் ஆண்டு நடைபெற்ற வன்செயல்களின்போது இடம்பெயர்ந்த 4ம் கொலனி மக்கள் சென்ற வருடமே மீளக் குடியமர்த்தப்பட்டனர். தற்போது மீண்டும் அகதிகளாகியுள்ளனர்.

அகதிகளாக இடம்பெயர்ந்த 4ம் கொலனி மக்கள் சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை, மணற்சேனை, பாண்டிருப்பு, கல்முனை போன்ற இடங்களில் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

4ம் கொலனியில் நடைபெற்ற வன்செயல் திட்டமிட்டு நடத்தப்பட்டது என்றும், பாரபட்சமற்ற விசாரணைகள் உடன்நடத்தப்பட்டு குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறும் ஈ.பி.டி.பி. மட்டு-அம்பாறை பொறுப்பாளரும், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான திரு. இராசமாணிக்கத்தால் ஜனாதிபதிக்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் உள்ள எல்லைப் புறக் கிராமங்களில் இருந்து தமிழ் மக்களை விரட்டும் நோக்கம் வன்செயல்களின் பின்னால் இருப்பதாக சந்தேகம் தெரிவிக்கப் படுகிறது.

வீடுகள் எரிக்கப்பட்டும், மக்கள் தாக்கப்பட்டும், வன்செயல் தலைவிரித்தாடிய போது அதனைத் தடுக்கும் நடவடிக்கை தாமதப்பட்டது ஏன் என்றும் பாதிக்கப்பட்ட மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

## கொடுப்பனவை குறைத்தனர் புலிகள்

### எடுப்பனவை மட்டும் குறைக்கவில்லை

யாழ்-குடாநாட்டுக்கு அரசாங்கம் அனுப்பிவைக்கும் உணவுப் பொருட்களில் பத்துவீதமானவை புலிகள் அமைப்பினரால் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

தனியார் வர்த்தகர்கள் கொண்டுசெல்லும் பொருட்களில் 50 வீதமானவற்றை கொழும்பில் அப்பொருட்கள் வாங்கப்பட்ட விலைக்கான பணத்தைக் கொடுத்து புலிகள் பெற்றுக் கொள்ளுகின்றனர். ஏற்றுக்கூலி, இறக்குக் கூலி யாவும் வர்த்தகர்களே பொறுப்பேற்க வேண்டும்.

இதனால், மீதி 50 வீதமான பொருட்களை விற்பனை செய்யும்போது தமது இழப்பீடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் வர்த்தகர்கள் விலைகளை உயர்த்துகின்றனர்.

தமது இயக்க உறுப்பினர்கள், பலியான உறுப்பினர்கள் ஆகியோரின் குடும்பங்களுக்கு புலிகளால் நிவாரணப் பொருட்கள் வழங்கப் பட்டு வந்தன.

தற்போது தமது உறுப்பினர்களின் குடும்பங்களில் வசதியான குடும்பங்கள் என்று அறியப்படும் குடும்பங்களுக்கான நிவாரணக் கொடுப்பனவுகளை புலிகள் நிறுத்தியுள்ளனர்.

எனினும், யாழ்-குடாநாட்டுக்கு அரசால் அனுப்பப்படும் நிவாரணப் பொருட்களில் இருந்து தாம் பெற்றுக்கொள்ளும் அளவை புலிகள் குறைக்கவில்லை.

## இந்திய-இலங்கை உளவாளிகள் ஊடுருவல்

### தகவல் தருமாறு புலிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணத்தில் 11.08.95 அன்று புலிகள் அமைப்பினரால் ஒரு அவசர அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: மறைமுக வழிகளைக் கையாண்டு, இரகசியமான முறைகளில் ஒரு உளவுப்போரை சிறீலங்கா, இந்திய உளவு நிறுவனங்கள் கட்டவிழ்த்துவிடும் இறுதி நேரம் இது.

இதனால் நாம் எல்லோரும் எச்சரிக்கை உணர்வோடு இருக்கவேண்டும். எனவே யாராவது உளவுபார்ப்பதாக ஏதாவது சந்தேகம் எழுந்தால் எமக்கு உடனடியாகத் தெரிவியுங்கள் என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

## முற்றுகையில் 24 கிராமங்கள்!

மூதூரில் இராணுவ முகாம்கள் மூடப்பட்டு அங்குள்ள இராணுவத்தினர் யாழ்-குடாநாட்டுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளனர்.

மூதூரில் இராணுவ முகாம்கள் மூடப்பட்ட பகுதிகளில் போக்குவரத்துக்கள் தடைப் பட்டுள்ளன. அத்தியாவசிய உணவுப் பொருட்கள் எடுத்துச் செல்லவும் தடைவிதிக் கப்பட்டுள்ளது.

வெருகல், ஈச்சிலம்பற்றை, பூநகர், கட்டைபறிச்சான், சம்பூர், கிளிவெட்டி, நல்லூர், வாழைத்தோட்டம், மாவடிச்சேனை, முத்துச் சேனை, வெருகல் முகத்துவாரம், சேனையூர், பள்ளிக்குடியிருப்பு, இலங்கைத் துறை முகத்துவாரம், பாட்டாளிபுரம், கூனித் தீவு, இலக்கந்தை, மேன்காமம், வீரமாநகர், மல்லிகைத்தீவு, மணற்சேனை, சகாயபுரம், கங்குவேலி, கறுக்காமுனை ஆகிய 24 கிராமங்கள் முற்றுகையிடப்பட்ட பகுதிகள் போல ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளன.

## முல்லையில் மருந்துத் தட்டுப்பாடு

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க மருந்தகங்களில் இன்னும் ஒரு வாரத்திற்கு போதுமான மருந்துகளே கையிருப்பில் இருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் வைத்தியர்கள் முல்லைத்தீவு-கிளிநொச்சி மாவட்டங்களில் கடமையாற்ற அனுமதி வழங்குவதை அரசு தாமதப்படுத்துவதால் வைத்தியர்கள் பற்றாக் குறையும் தொடருவதாக தெரிவிக்கப் படுகிறது.

## கையிருப்பு முடிகிறது

யாழ் குடாநாட்டில் கையிருப்பில் உள்ள மாவு 18.08.95ம் திகதியோடு தீர்ந்துவிடும் என்று யாழ் அரச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதனால் பாணுக்கும் தட்டுப்பாடு ஏற்படும் என்று தெரிவிக் கப்படுகிறது. 56 ஆயிரம் குடும்பங்களுக்கு 2மாத கால உலர் உணவுப் பொருட்கள் கொடுக்கப்படவேண்டிய பாக்கி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்-குடாநாட்டில் சம்பத்திய இராணுவ நடவடிக்கையின் பின்னர் அகதிகளான மக்களில் ஒரு பகுதியினர் 12 பாடசாலைகளில் தற்போதும் தங்கியுள்ளனர்.

## ஆறாயிரம் மக்கள் அவதி

(திருமலை நிருபர்)

மூதூர் ஈச்சிலம்பற்றை பிரதேச மக்கள் வைத்திய வசதிகள் இன்றி பெரும் அவதியை எதிர்நோக்கியுள்ளனர்.

பதினொரு கிராமங்களைச் சேர்ந்த சுமார் ஆறாயிரம் மக்கள் சாதாரண காய்ச்சலுக்குக்கூட உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு மூதூர் ஆஸ்பத்திரிக்கே வர வேண்டிய நிலையில் இருக்கிறார்கள்

இவர்களது தேவைகளுக்கென இருந்த மத்திய மருந்தகம் வன்செயல் காரணமாக உடைக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்த அவலம் தோன்றியது.

மருந்தகம் இல்லாக் குறையைத் தீர்க்க வாரத்தில் மூன்று நாட்கள் மூதூரிலிருந்து வைத்தியர் ஒருவர் பலவருடங்களாக அனுப்பப்பட்டு வந்தார். அந்த சேவையும் கடந்த சில மாதங்களாக நிறுத்தப்பட்டு விட்டது.

## பிரசவ வேதனையில் மனைவி துடிப்பு!

### "புலிகளுக்கு உதவ முடியாது" என்று டாக்டர் தெரிவிப்பு!

(திருமலையிலிருந்து சஞ்சீவன்)

யாழ்பாணத்தைச் சேர்ந்தவர் எஸ். செல்லவராஜா. இவர் தனது மனைவியை பிரசவத்திற்காக குருநாகல் வைத்திய சாலையில் அனுமதிக்கச் சென்றார். அனுமதி தரவேண்டுமானால் 7 பைந்து இரத்தம் தர வேண்டும் என்று அங்கு கடமையில் இருந்த டாக்டர் கூறினார். தன்னால் இரத்தம் தர முடியாத கஷ்ட நிலையை செல்வராஜா விளக்கினார். அதற்கு அந்த டாக்டர், "புலிகளுக்கு உதவ முடியாது" என்று கூறினாராம். இது பற்றி பாதிக்கப்பட்ட செல்வராஜா ஈ.பி.டி.பி. திருமலை மாவட்ட பொறுப்பாளர் மு.சந்திரகுமார் பா.உவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

அனலைதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட நான் எனது மனைவியின் மகப்பேற்றுக்காக, மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில "நரோமா" கப்பல் மூலம் திருக்கோணமலைக்கு கூட்டிவந்து திருக்கோண மலை தளவைத்தியசாலையில் கடந்த 5.08.95 அன்று அனுமதித்தேன். இரவுப் பிரசவம் நடைபெறாமல், வருத்தம் கடுமையானதால் குருநாகல் ஆஸ்பத்திரிக்கு எனது மனைவி அம்புலன்ஸ் மூலம் கொண்டு செல்லப்பட்டார். 06.08.95 அன்று நான் எனது உறவினருடன் அங்கு சென்றேன். அங்குள்ள வைத்தியர் (டாக்டர்) ஒருவர் 7 பைந்து இரத்தம் தரும்படி கூறினார். இந்நிலையில் இரத்தம் தரமுடியாத எமது கஷ்ட நிலமையை விளக்கினேன். அதற்கு டாக்டர் "புலிகளுக்கு உதவ முடியாதெனக் கூறினார். கடுமையாகவும் தகாத வார்த்தையினாலும் ஏசினார். அதேவேளை பிறந்த குழந்தையும் இறந்துவிட்டது.

குழந்தையை புதைப்பதற்கென என்னால் 100 ருபாவுக்கு மேல் செலவு செய்யப்பட்டது. பின்னர் குருநாகல் ஆஸ்பத்திரியில் 1 பைந்து இரத்தமும், திருமலையில் 2 பைந்து இரத்தமும் என்னால் ஒழுங்கு பண்ணிக் கொடுக்க முடிந்தது. இதற்கு 1500/- ருபா செலவு ஏற்பட்டது. மீண்டும் நான் 14.08.95 குருநாகல் ஆஸ்பத்திரிக்கு எனது மனைவியை அழைத்து வரச்சென்றேன். அங்குள்ள டாக்டர் இன்னும் 10 பைந்து இரத்தம் தரும்படியும் தராவிட்டால் மனைவியை கூட்டிக்செல்ல முடியாதெனவும் கூறினார். வேறுவழியில்லாமல் மீண்டும் திருமலைக்கு திரும்பினேன். எனது நிலமையை தங்கள் கவனத்திற்கு எடுத்து, தங்கள் பூரண உதவியை நல்குமாறு தாழ்மையுடன் வேண்டுகிறேன். நான் கடற்தொழில் செய்து கஷ்டநிலமையில் வாழ்பவன். எனது மனைவியை மீண்டும் கூட்டிச் செல்ல உதவுமாறு வேண்டுகிறேன்" இவ்வாறு செல்வராஜா தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

# கனடாவில் துப்பாக்கிச் சண்டை!

## முன்னாள் புலி உறுப்பினர் கைது!

(கனடா நிருபர்)

கனடா-மொண்ட்றியல் பொலிசார் இம்மாத ஆரம்பத்தில் இலங்கைத் தமிழர் ஒருவரை மெற்றோவில் கைது செய்தனர். இரு பொலிஸ் அதிகாரிகளைக் கியூபெக்கில் கொலை செய்ய முயன்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் ஏற்கனவே இரு கொலை முயற்சிகளில் ஈடுபட்டதையும், பொலிஸ் அதிகாரிகளைக் கொலை செய்ய முயற்சித்தையும் சேர்த்து மொத்தம் 3 குற்றச்சாட்டுகளுக்காக நாடு தழுவிய பிடி விறாந்து உத்தரவு இவர்மீது பிறப்பிக்கப்பட்டிருந்தது.

தலைமறைவாகியிருக்கும் குற்றவாளிகளைப் பிடிப்பதற்கான கனடாவிலுள்ள விஷேச பொலிஸ் பிரிவைச் சேர்ந்த 42 அதிகாரிகள் இந்நபரை தேடி வளைத்துப் பிடிப்பதில் ஈடுபட்டிருந்தனர் என்று தெரியவருகிறது.

ரொறொன்ரோ மற்றும் மொண்ட்றியல் ஆகிய இடங்களில் இலங்கைத் தமிழர்களான 3 குழுக்ளுக்கிடையில் ஏற்பட்ட பிணக்குகளே இத்தகைய மோதல்களுக்கான காரணம் என்று புலனாய்வுத்துறை அதிகாரி போல் கிளார்க் தெரிவித்தார். அவர் மேலும் தகவல் தருகையில், இக்குழுக்களுக கிடையில் போதைப் பொருள் மற்றும் ஆயுதங்கள் தொடர்பாகவே அடிக்கடி மோதல் ஏற்பட்டு வருவதாகக் கூறினார். அத்துடன் உதைபந்து விளையாட்டு மைதானம் ஒன்றில் ஒரு குழுவைச் சேர்ந்த ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்கான மையினாலும் சண்டைகள் வலுவடைந்துள் ளன என்றும் கிளார்க் குறிப்பிட்டார்.

ரொறொன்ரோவின் மேற்கு முனையைச் சேர்ந்த 'வல்வெட்டித்துறை குழு'வினர் மற்றோரிடத்திலுள்ள 'தம்பியின் குழு' வினரைத் தேடித் தீர்ப்பதற்காகச் சென்றுள்ளனர். மொண்ட்றியலிலுள்ள தமது அலுவலகம் முன்பாக நின்றிருந்த தம்பியின் குழு மீது இவர்கள் எம்-16 துப்பாக்கி மூலம் 36 தடவைகள் சுட்டனர். இதில் இருவர் காயமடைந்ததாக கிளார்க் சொன்னார். "தம்பியின் குழுவினருக்குச் சொந்தமான மோட்டார் வண்டியில் காணப்பட்ட துப்பாக்கிச் சூட்டு அடையாளங்களைப் பார்க்கும் போது இது ஒரு வகை 'யுத்தம்' என்பது சந்தேகத்துக்கு இடமில்லாத வகையில் தெளிவாகிறது" என்று அதிகாரி கிளார்க் குறிப்பிட்டார்.

அன்றிரவு மொண்ட்றியலைச் சேர்ந்த இரு பொலிசார், வல்வெட்டித்துறை குழுவினர் வீதியில் வேகமாகச் சென்ற மோட்டார் வண்டியை நிறுத்துமாறு பணித்த போது, பொலிசார் மீது துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்த வண்ணம் அதே வண்டியில் ஓடி மறைந்தனர். பொலிசார் இருவரும் காயங்களுடன் தப்பினர்.

சம்பவம் நடைபெற்ற இடத்தில் நேரடியாக கண்ட பலரிடம் பொலிசார் விசாரணை நடத்தியபோது எவரும் தகவல் தரமறுத்துவிட்டதாக பொலிஸ் சார்ஜன் பியரி மார்சன் கூறினார். இந்த துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் ஈடுபட்டவரெனக் கருதப்படும் மற்றுமொரு நபர் நாட்டைவிட்டு வெளியேறியிருக்கக்கூடும் என்று பொலிசார் தெரிவித்தனர். "துப்பாக்கியால் சுட்டுவிட்டு ஓடி மறையும் முறையினைக் கொண்ட போர் ஒன்று நடைபெற்று வருகிறது என்று எண்ணத் தோன்றுகிறது; ஆனால் இதற்கான காரணம்தான் என்னவென்று தெரியவில்லை" என்று சார்ஜன் மார்சன் மேலும் சொன்னார்.

மொண்ட்றியலிலும் ரொறொண்ரோவிலும் வசித்துவந்த நஞ்சிதபாதம் வடிவேல் என்ற 23 வயது இளைஞரே கைதானவர். பொலிசாரைக் கொலை செய்ய முயன்றார் என்ற குற்றச்சாட்டு உட்பட மொத்தம் 3 வழக்குகள் இவர் மீது பதிவாகியிருப்பதனால் இவர் மொண்ட்றியல் நீதிமன்றம் கொண்டு செல்லப்பட்டார்.

கைதுசெய்யப்பட்டுள்ள நஞ்சிதபாதம் வடிவேலு முன்னர் புலிகள் இயக்க உறுப்பினராக இருந்தவர். கனடாவில் புலிகளின் ஆதரவாளராக செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கைகொடுக்கிறது கனடா பல்கலைக்கழகம்

இலங்கையில் யுத்தத்தாலும் வன்செயல் சூழ்நிலைகளாலும் பாதிப்பிற்குள்ளான சிறுவர்களுக்கும் அவர்களது குடும்பத்தாருக்கும் உதவ கனடாவின் மக்-மாஸ்டர் பல்கலைக்கழகம் திட்டமிட்டுள்ளது.


இப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த உளநல மருத்துவர்கள், வைத்திய நிபுணர்கள், சமூக சேவைவல்லுநர்கள், சூழல் பாதுகாப்பு அதிகாரிகள், சமூகவியலாளர்கள், கலைஞர்கள் ஆகியோரைக் கொண்ட 'ஹெல்த் றீச்' எனப்படும் ஆய்வுக்குழுவினர் இவ்வருட ஆரம்பத்தில் இலங்கையில் யுத்த அநர்த்தத்தினால் மிக மோசமான பாதிப்பிற்குள்ளான தமிழ்-முஸ்லிம்-சிங்கள சமூகங்களைச் சேர்ந்த சிறார்களிடமும் அவர்களது உறவினர்களிடமும் ஆய்வுகளை மேற்கொண்டு முடிவுகளைப் பெற்றுள்ளனர்.

பாதிப்பிற்குள்ளான சிறுவர்களதும், அவர்களது உறவினர்களதும் மனநிலையில் கடந்த கால யுத்தங்களும், வன்செயல்களும் ஏற்படுத்தியிருக்கும் தாக்கங்களைக் கண்டறிவதும், அத்தகைய தாக்கங்களின் பிடியிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்குமான வழிவகைகளைத் திட்டமிடுவதுமே மேற்படி நடத்தப்பட்ட ஆய்வின் நோக்கமாக இருந்தது. மட்டக்களப்பு, அம்பாறை, பொலன்னறுவை, குருநாகல் ஆகிய மாவட்டங்களிலிருந்து பாதிக்கப்பட்ட பகுதிகளில் இந்த பரீட்சார்த்த ஆய்வுகள் நடாத்தப்பட்டன.

இவ்வாய்வுகளின் பெறுபேற்றின் அடிப்படையில் பாதிக்கப்பட்டுள்ள சிறார்களுக்கும் அவர்களது குடும்பத்தாருக்கும் தொடர்ந்து உதவும் திட்டங்களை அமுல்படுத்தும் பயிற்சி பெறுவதற்காக இலங்கையிலிருந்து நால்வர் கனடாவின் மக்-மாஸ்டர் பல்கலைக் கழகத்திற்குச் செல்கின்றனர். மட்டக்களப்பு உளநல உதவி நிலையத்தின் பணிப்பாளர் பிதா போல் சற்குணநாயகம், வைத்திய நிபுணர் எஸ். சிவயோகன், 'ஹெல்த் றீச்' திட்டத்தின் இலங்கைக்கான இணைப்பதிகாரி திருமதி. இந்திரா காந்தி பெரேரா, மட்டக்களப்பு இணைப்பதிகாரியும் கிழக்கிலங்கை ஐக்கிய சமூக நல அபிவிருத்தி அமைப்பின் செயலாளருமான ஏ.எச்.ஏ.ஹுஸைன் ஆகியோர் இந்தப் பயிற்சி நெறிக்காக கனடா சென்றுள்ளனர்.

கனடாவின் மக்-மாஸ்டர் பல்கலைக்கழகம் இதுபோன்ற பல்வேறு ஆய்வுகளையும், உதவித்திட்டங்களையும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட யூகோஸ்லாவியா, பாலஸ்தீனம், காஸா, மேற்குக்கரை, தென்னாபிரிக்கா போன்ற இடங்களில் அமுல்படுத்தியுள்ளது.

# கார்ட்டூன் மூலை




தியாகம்

# வாகரைப் பகுதியில் உணவுப் பஞ்சம்

## அகதி நிவாரணப் பொருட்களுக்காக அலையும் மக்கள்!

(ஏறாவூர் நிருபர்)

செங்கலடி-பதுளை வீதியில் இராணுவம் வெளியேறிய பகுதிகளில் இருந்த கூட்டுறவுச் சங்கக் கிளைகள் அனைத்தும் செங்கலடி நகர்ப் பகுதிக்கு கொண்டு வரப்பட்டுள்ளதால் கோப்பாவெளி, உறுகாமம், மரப்பாலம், கரடியனாறு, இலுப்படிச்சேனை, பங்குடாவெளி, வேப்பவெட்டுவான் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் 15-20 மைல் தூரம் நடந்து செங்கலடிக்கு வந்து தமது அகதி நிவாரணப் பொருட்களையும் உணவு முத்திரைப் பொருட்களையும் பெற வேண்டியுள்ளது. இவ்வீதியில் வாகனப் போக்குவரத்து இல்லாததால் மக்கள் தாம் பெறும் உணவுப் பொருள் மூட்டை முடிச்சுகளை தலையில் சுமந்து கொண்டு நீண்ட தூரம் நடந்து செல்வதை காண முடிகிறது. சென்ற 10.07.95 அன்று செங்கலடி ப.நோ.கூ.தலைமைச் சங்கம் புலிகளால் கொள்ளையடிக்கப்பட்டது தெரிந்ததே.

இதேவேளை வாகரைப்பகுதியில் உள்ள உணவு முத்திரை பெறும் வறிய குடும்பங்கள் தமது உணவு முத்திரைக்குரிய பொருட்களின் கால்பங்கையே கொண்டு செல்ல கோழிப்பண்ணை இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர். பலமுறை பாதுகாப்பு அதிகாரிகளுக்கு வேண்டுகோள்களை விடுத்ததின் பயனாகவே இந்த அனுமதியை கடந்த 24.07.95 தொடக்கம் வழங்கியுள்ளார்கள்.

உணவு முத்திரை பெறும் குடும்பங்களின் உணவு முத்திரைக்கு கொடுபட வேண்டிய மீதமுள்ள முக்கால் பங்கு உணவுப்பொருட்களும் கடந்த மே, ஜுன், ஜுலை ஆகிய மாதங்களில் வழங்கப்படாதிருக்கிறது. வறிய மக்கள் பெற வேண்டிய மீதமுள்ள உணவுப் பொருட்களை கொண்டு செல்ல அனுமதிக்குமாறும், வாகரைப் பகுதிக்கு ஒழுங்கான போக்கு வரத்து ஏற்பாடுகளை செய்துதர நடவடிக்கை எடுக்குமாறும் நாம் உயரதிகாரிகளைக் கேட்டிருக்கிறோம் என்று வாகரை பிரதேச செயலாளர் திரு.எஸ்.பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.




## அற்புத மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக ஆவி உச்சாட்டங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவைபென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்ஷமி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்ஷமி இயந்திரம் தேவையா? ஞான திருஷ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464,434831,344832.
FAX 00941342463 EXT 25

கிளைமையகம்

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
P.K. SAAMY ASSOCIATE (PVT)LTD
இல 31,32,33
தினச்சந்தை கட்டிடம்
நுவரெலியா.
T.P. 052 2508 3093,3335.
FAX 0094523093 EXT 28



## ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையில் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 175/=,95/=
தங்க பஸ்பம் கலந்தது 975/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 875/=

ஞான சுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398


# நகர சபைக்குள் நாற்காலிப் போட்டி!

திருக்கோணமலை நகரசபைக்குள் தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் இடையே பிரச்சனைகள் ஏற்பட்டுள்ளன.

நகரசபைத் தலைவர் திரு.சூரியமூர்த்தி முன்பு ஈ.என்.டி.எல்.எவ். என்னும் இயக்கத்தில் இருந்தவர். பின்னர் அந்த இயக்கத்தில் இருந்து விலகி ரெலோ அமைப்பில் சேர்ந்து நகரசபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

தற்போது திருமலை மாவட்ட ரெலோ அமைப்போடு நகரசபைத் தலைவருக்கு பிரச்சனை ஏற்பட்டுள்ளது.

சமீபத்தில் திருமலை மாவட்ட ரெலோ பொறுப்பாளரை கொலை செய்ய முயன்றவர் நகரசபைத் தலைவருக்கு வேண்டப்பட்டவர் என்று சந்தேகிக்கப்படுகிறது.

நகரசபைத் தலைவர் பதவியில் இருந்து திரு.சூரியமூர்த்தியை தூக்குவதற்கு திருமலை மாவட்ட ரெலோ தீவிரமாக இறங்கியுள்ளது. அதனை முறியடிக்க திரு.சூரியமூர்த்தியும் களத்தில் குதித்திருக்கிறார்.

சூரியமூர்த்தியை அகற்றிவிட்டு யார் தலைவராக வருவது என்பதில் ஒருமித்த கருத்தை ஏற்படுத்த முடியாமல் பலத்த போட்டி நிலவுகிறது.

## தமிழ் விண்ணப்படிவம் தட்டுப்பாடு

கண்டி உதவி பிறப்பு, இறப்பு, விவாக பதிவாளர் திணைக்களப்பிரிவில் தமிழில் விண்ணப்பப் படிவங்கள் கிடைப்பதில்லை.

அங்குள்ள ஒரு விண்ணப்பப்படிவத்தை போட்டோ பிரதி செய்தே பிரதிகளைப் பெறவேண்டியிருப்பதாக புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன. இதே போன்ற நிலைதான் கேகாலை, மாத்தளை, நுவரெலியா போன்ற இடங்களில் இயங்கும் பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் காணப்படுவதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறான நிலையினால் உரிய வேளைக்கு பதிவுப் பத்திரங்களைப் பெற முடியவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கண்டி நிருபர்


## நூறாண்டு காலம் வாழ்க

எனது பெயர் கே.திருகுமார். சொந்த இடம் கிளிநொச்சி. நான் கடந்த 27 ஆண்டுகாலமாக திக்குவாய் பாதிப்பினால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தேன்.

வவுனியா, வாரிக்குட்டியூ-6ம் யுனிட்டைச் சேர்ந்த ஏ.தர்மசீலன் அவர்கள் எனது திக்குவாய் கோளாறினை குணமாக்கிவிட்டார். நான் இப்போது மிகவும் நன்றாகப் பேசுகிறேன். முன்னர் கிண்டல் செய்தவர்கள் என்னைப் பார்த்து வியக்கிறார்கள். அவ்வளவு நன்றாகப் பேசுகிறேன்.

எனது வாழ்வில் ஒளிவிளக்கேற்றி என்னைப் புதிய மனிதனாக்கிய திரு. ஏ.தர்மசீலன் அவர்கள் நூறாண்டு காலம் வாழப் பிரார்த்திக்கின்றேன்.

இப்படிக்கு, கே.திருகுமார், கிளிநொச்சி.

## ஜோதிடம்

எத்தகைய தீராத பிரச்சனைகளுக்கும் தீர ஆலோசனைகள் வழங்கப்படும். சாதகத்துடன் நேரில் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம்.

## விவாக சேவை

உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ வசிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மணமக்கள் பட்டியல் கைவசமுண்டு- பொருத்தமானவர்களைத் தெரிவு செய்யலாம்.

V.S.S GURUKKAL
18,STATION ROAD,
WELLAWATTA
COLOMBO-06.


# முஸ்லிம் விவசாயிகள் கவலை

## மீனவர் வள்ளங்களும் அபகரிப்பு

(வாழைச்சேனை நிருபர்)

நிரந்தர சமாதானம் ஏற்படும் என்ற நம்பிக்கையில் பெரும் தொகையான வாழைச்சேனைப் பிரதேச முஸலிம் விவசாயிகள் பலர் தமது கைகளிலிருந்த பொருட்களையும் நகைகளையும் அடகு வைத்ததுடன், கடன் பட்டும் விவசாயத்திற்கு இட்ட முதல் வீணாகிவிடுமோ என்ற அச்சத்துடன் வாழ்வதைக் காணமுடிகிறது.

தற்போது அறுவடைக்காலம். இப்பிரதேசத்தில் நடைபெறும் மோதல்களால் வெளியூர்ப்பகுதி வாசிகள் நெல் அறுவடைக்கு வருவதற்கு தயக்கம் காட்டுகின்றார்கள். சிலர் அறுவடையை முடித்து, சூடு போட்டு வருகின்றார்கள். இந்தப் பிரதேசம் மூக்கர் கல் இராணுவ முகாமைச் சுற்றியே அமைந்துள்ளதால் எந்நேரமும் மோதல் நிகழலாம் என்ற அச்சத்துடனேயே விவசாயிகள் வாழவேண்டியுள்ளது. வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்த கதையாகத்தான் ஆகிவிடுமோ என இப்பகுதி விவசாயிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற வாழைச்சேனை வாசிகளுக்குச் சொந்தமான இரண்டு மீன்பிடி வள்ளங்களை கடலில் மறித்த புலிகள் வள்ளங்களைப் பெற்றுக் கொண்டு முஸ்லிம் மீனவர்களை மட்டும் சனியன்று (05.08.95) திருப்பி அனுப்பிவைத்துள்ளனர்.

## புகைத்தல் விலக்கப்பட்டுள்ளது

குவைத்தில் தற்போது வீதிகளிலோ,கார் பேருந்து (பஸ்), ஹோட்டல்களிலோ சிகரெட் குடிப்பது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. காரணம்-குவைத் பாடசாலை மாணவர்களின் நன்மை கருதியேயாகும். அத்துமீறி சிகரெட் பிடித்தால் தண்டமாக குவைத் தினார் ஐந்து (05) கட்ட வேண்டும் என்று விளம்பரம் செய்துள்ளார்கள்.

ஜே.ஹபீப்-குவைத்.


## நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா | 557/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் ரூபா | 284/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் ரூபா | 145/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுய முகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

THINAMURASU VARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதம் அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.




படிப்பகம்

www.padippakam.com

# நெருங்கிவரும் யுத்தப்பிசாசு

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

**"அரசியல் தீர்வு யோசனைகளை புலிகள் நிராகரித்திருக்கிறார்களே, உங்கள் அபிப்பிராயம் என்ன?"** நிருபர் கேட்டிருந்தார்.

**"நிராகரித்திருப்பது துரதிஷ்ட வசமானது"** என்று பதிலளித்திருக்கிறார் கூட்டணியின் தலைவர் சிவசிதம்பரம்.

இவ்வாண்டின் மிகச் சிறந்த அரசியல் ஜோக்குகளில் ஒன்றாக கூட்டணித் தலைவரின் பதிலையும் சேர்த்துக் கொள்ளலாம்.

'புலிகளுக்கு எதிரானது, புலிகளை தமிழ் மக்களிடமிருந்து தனிமைப் படுத்துவதற்குமானது.' என்ற அறிவிப் போடுதான். 'தீர்வு யோசனைகள்' அரசால் முன்வைக்கப்பட்டுள்ளன.

நல்லதோ, கெட்டதோ என்பதெல்லாம் ஒரு புறம் இருக்கட்டும், தமக்கெதிரானது என்று முன்வைக்கப்பட்ட ஒரு யோசனையை எந்தவொரு அமைப்புத்தான் ஏற்றுக்கொள்ள முன்வரும்?

எனவே, புலிகள் நிராகரிப்பார்கள் என்பது எதிர்பார்க்கப்பட்ட விடயம்தானே.

அதனை எதிர்பார்த்துத்தான் ஜனாதிபதிகூட பத்திரிகையாளர் மகாநாட்டில் 'புலிகளது அபிப்பிராயம் தேவை இல்லை' என்று தெரிவித்திருந்தார்.

இவை எதனையும் கண்டும் காணாதது போல, கேட்டும் கேளாதது போல, தொலைக்காட்சிகளிலும், வானொலிகளிலும் தோன்றி 'கல்யாண சமையல் சாதம், காய்கறிகளும் பிரமாதம், இதுவே எமக்குப் போதும்' என்ற தோரணையில் சிவாவும், சம்பந்தனும் மாறி மாறிப் புகழ்ந்து கொண்டிருந்தனர்.

இத்தனைக்கும் சமையலே இன்னும் நடக்கவில்லை என்பதுதான் வேடிக்கை.

அரிசி இருக்கிறது. எத்தனை கிலோ போடுவது என்பது முடிவாகவில்லை. காய் கறிகள் இருக்கின்றன. எவற்றைச் சமைப்பது, எவற்றைக் கழிப்பது என்பதெல்லாம் இன்னும் முடிவாகவில்லை.

பிராந்திய சபையை ஜனாதிபதி கலைக்க முடியாது என்று முதலில் சொல்லப்பட்டது. அதனை மாற்றி ஜனாதிபதிக்கு கலைக்கும் அதிகாரத்தை வழங்கும் யோசனையை முன்வைக்கப் போவதாக 13.8.95 அன்று அமைச்சர் பீரிஸ் அறிவித்திருக்கிறார்.

ஆக, அரிசியின் அளவு பாதியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

இனி, பாராளுமன்றத் தெரிவுக்குழு எதை எதையெல்லாம் கழிக்கச் சொல்கிறதோ தெரியவில்லை.

ஆனால், கூட்டணியோ குழந்தை பிறக்க முன்னர் பெயர் வைக்க துடிக்கிறது. சமையல் நடக்கு முன்னர் 'ஆஹா பிரமாதம் இதுவே போதும்' என்று புகழ்ந்து தள்ளிவிட்டது.

சமைக்கும் முன்பாகவே 'உன் கைப் பக்குவமே தனி' என்று மனைவியரைப் பாராட்டும் கணவன்மார்கள் இருக்கிறார்கள்.

தீர்வு யோசனை விடயத்தில் காய்கறிகளை தெரிவு செய்த சமையல்காரர்களில் ஒருவர் நீலன் திருச்செல்வம்.

அவரது மனம் நோகாமல், 'கைப்பக்குவம் மணக்கிறது.' என்று சமைக்கமுன்னரே 'புகழ்ந்துவிட்டார்கள் கூட்டணித் தலைவர்கள்.

ஜனாதிபதியோடு நடந்த சந்திப்பில் கூட அவரிடம் நேரிடையாகவே புலிகளுக்கும் இந்த யோசனையை அனுப்ப வேண்டும், அவர்களது கருத்தே முக்கியமானது என்று ஒரு வார்த்தைகூட கூட்டணித் தலைவர்களால் சொல்லப்படவில்லை.

இத்தனை தூரம் தூங்குவதுபோல பாசாங்கு செய்துவிட்டு, "என்னது புலிகள் நிராகரித்து விட்டார்களா, துரதிஷ்டமாக இருக்கிறதே" என்று சொன்னால் என்ன அர்த்தம்.

ஒரு பக்கம் ஆசை, மறுபக்கம் அச்சம். இரண்டுக்கும் நடுவில் புளித்துப்போன பழைய தந்திரங்களோடு கூட்டணி அரசியல் நடத்தப் பார்க்கிறது.

புலிகளைப் பொறுத்தவரை கூட்டணியின் அரசியல் அவர்களுக்கு ஒரு விடயத்தை தெளிவாக உணர்த்தியுள்ளன. 'எதிரியைவிட நண்பனாக நடிக்கும் எதிரி நம்ப முடியாதவன்' என்பதுதான் அது.

அதனால் தான் தீர்வுயோசனைகளை நிராகரித்து கருத்து வெளியிட்ட புலிகளது அரசியல் ஆலோசகர்அன்ரன் பாலசிங்கம், **"கூட்டணியை நாம் மன்னித்தாலும் வரலாறு மன்னிக்காது."** என்று காட்டமாகக் கூற வேண்டி ஏற்பட்டது.

கொழும்பின் பிரபல ஆங்கிலப் பத்திரிகை ஒன்று, தீர்வு யோசனை பற்றிச் சொல்லும்போது 'பீரிஸ்-நீலன் ஒப்பந்தம்' என்று தெரிவித்திருக்கிறது.

கூட்டணிக்கு இரண்டு பக்கமும் அடி விழுகிறது என்பதுதான் வேடிக்கை.

கிழக்கில் புலிகளது பிடி இறுகுவது கூட்டணிக்கும் ஆபத்தான விஷயம். புலிகளது முடிவுக்கு மாறாக எதுவும் செய்ய முடியாமல் போய்விடும்.

அடுத்த பொதுத்தேர்தலில் அம்பாறையில் யார் போட்டியிடுவது என்பதில் இப்போதே கூட்டணிக்குள் போட்டி ஆரம்பித்து விட்டது.

ஏற்கனவே அங்கு போட்டியிட்டு சொற்ப வாக்குகளால் தோல்விகண்ட மாவை சேனாதிராசாவை எப்படி ஓரம் கட்டலாம் என்று ஓரக் கண்ணால் கவனித்துக் கொண்டிருக்கிறார் நீலன் திருச்செல்வம்.

மாவை சேனாதிராசாவுக்கு ஒரு அரசியல் வரலாறு இருக்கிறது. அடிபட்டு உதைபட்டு வளர்ந்த கதை இருக்கிறது.

தமிழர் பிரச்சனை பற்றி இன்றுவரை ஆங்கிலத்திலேயே சிந்திக்கும் நீலன்திருச்செல்வத்திற்கு சொல்லிக் கொள்ள கூடிய வரலாறு எதுவும் இல்லை என்பது மட்டுமே பெரிய குறை.

இதற்கிடையே கிழக்கில் விழுந்த வாக்குகள் தனது முகத்துக்காகவே தவிர, கூட்டணியின் செல்வாக்கால் அல்ல என்பது ஜோசப் பரராஜசிங்கத்தின் ஆழமான கருத்து.

ஜோசப்புக்கு நீலனைப் பிடிக்காது. தீர்வு யோசனைகளை கூட்டணித் தலைமை விழுந்து விழுந்து ஆதரிப்பது கிழக்கின் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களில் இருவருக்குப் பிடிக்கவில்லை.

'அண்ணாச்சி வரட்டும்' என்று சொல்கிறார்கள். அவர்கள் அண்ணாச்சி என்று சொல்வது ஜோசப் பரராஜசிங்கத்தை.

முக்கியமான பிரச்சனைகள் அலசப்பட்ட நேரத்தில் அண்ணாச்சி லண்டனுக்குப் போய் அங்கிருந்து கனடாவுக்குப் போய் வெளியுலக வலம் செய்து கொண்டிருந்தார்.

சந்தடி எல்லாம் அடங்கிய பின்னர் வருவதே சிக்கலில் மாட்டிக்கொள்ளாமல் இருக்க ஏற்ற வழி என்று நினைத்துத்தான் வெளிநாடுகளில் இருந்துவிட்டு திரும்பியிருக்கிறார்.

ஏற்கனவே- ஒருமுறை ஜோசப் பரராஜசிங்கத்தை நேரில் அழைத்து அன்போடு எச்சரித்துவிட்டு திருப்பியனுப்பினார் கரிகாலன்.

இனி எப்படி இருக்குமோ என்று நினைத்துப்பார்க்கவே செய்வார் ஜோசப்பரராஜசிங்கம்.

அதே சமயம், கிழக்கில் புலிகளது சுதந்திரம் விரிவாகிவருவதால், அடுத்த தேர்தலில் புலிகளது உத்தரவை மீறிப் போட்டியிடும் வாய்ப்பை பறித்துவிடுமோ என்ற கவலையும் இருக்கவே செய்யும்.

தம்மைத் தொட்டுவிடும் தூரத்தில் புலிகள் இல்லை என்ற நம்பிக்கை கிழக்கில் பொய்த்துவிட்டால் பொதுக்கூட்டங்கள் நடத்தி வாக்குகள் சேகரிப்பது கஷ்டமாகிவிடலாம்.

கடந்த தேர்தலில் கிழக்கில் பெருவாரியான வாக்குகளை கூட்டணி அள்ளிக் கொண்டமைக்கு பிரதான காரணம் அங்கு இயக்கங்கள் மீதிருந்த வெறுப்புத்தான்.

அந்த நிலையில் தற்போதும் பெரிய மாறுதல் ஒன்றுமில்லை.

புலிகளின் பலம், புலிகளின் சுதந்திரமான நடமாட்டம் கிழக்கில் அதிகரித்து வருவதுதான் கூட்டணியின் மடியில் கைவைக்கும் விஷயமாகிவருகிறது.

இதனை மெல்லவும் முடியாமல்,



விழுங்கவும் முடியாமல் கிழக்கின் கூட்டணித் தலைமை திண்டாடுவதுமட்டும் உண்மை.

கூட்டணி தப்பிப் பிழைத்து அரசியல் நடத்தவும் கிழக்கில் பெற்ற வாக்குகளே காரணம். இது கூட்டணிக்கும் தெரியும். அது புலிகளுக்கும் தெரியும் என்பதுதான் கூட்டணிக்குள்ள பெரிய தலையிடி.

□□

**தீ**ர்வு யோசனைகளை அடுத்து வெளியுலக ஆதரவை திரட்டுவதில் அரசு மேலும் ஒரு படி முன்னேறியிருக்கிறது.

பிரசார களத்தில் அரசின் 'முன்னேறிப் பாய்ச்சல்' நடவடிக்கையாக தீர்வு யோசனைகளைக் குறிப்பிட முடியும்.

இதே வேளையில் அரசு மீது கண்டனம் விமர்சனம் என்று இனவாதிகள் சுறுசுறுப்பாகி இருக்கிறார்கள்.

கொழும்பின் சிங்கள, ஆங்கில




பத்திரிகைகளில் பெரும்பாலானவை தீர்வு யோசனை என்பது நாட்டைப் பிரித்துக் கொடுப்பது போன்றது என்று கருத்தோவியங்களை (கார்ட்டூன்) வரைந்து பிரசுரித்துத் தள்ளுகின்றன.

இலங்கையை பிரபாகரனிடம் ஜனாதிபதி தூக்கிக் கொடுப்பது போன்று ஒரு கருத்தோவியமும், 'பிராந்திய சபை' என்ற புல்டோசர் மூலம் இலங்கை மாதாவை நசித்துவிட ஜனாதிபதி தயாராவது போல ஒரு கருத்தோவியமும் 'சண்டே லீடர்' பத்திரிகையில் வெளியாகியிருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சி வெளியே நல்ல பிள்ளையாக நடந்து கொள்கிறது.

ஆனால், உண்மையில் தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளிவிடுகிறது.

இனவாத சக்திகளது கூக்குரல்களின் பின்னால் ஐக்கிய தேசியக் கட்சி முக்கியஸ்தர்கள் இருக்கவே செய்கிறார்கள்.

நேரடியாக வெளியே வந்துவிடுவதில் அக்கட்சிக்கு உள்ள ஒரேயொரு பிரச்சனை, தமிழ் பேசும் மக்களது வாக்குகளும் தேவையாக இருக்கும் தேர்தல் முறைதான்.

தீர்வுயோசனைகளை புலிகள் நிராகரித்திருப்பது அரசுக்கு ஒரு வகையில் சாதகம்.

"நாட்டைப் பிரிக்கும் திட்டம் என்றால் புலிகள் நிராகரித்திருக்க மாட்டார்கள் அல்லவா?" என்று திருவாளர் சிங்களப் பொதுஜனத்திடம் கேட்கலாம்.

மறுபுறம் இனவாதிகளது துள்ளலும், அரசுக்கு ஒரு வகையில் உதவிதான்.

"இதற்கே இப்படித் துள்ளுகிறார்களே. வடக்கு-கிழக்கு முழுவதுமாக தமிழ் பேசும் மக்களிடமே இருக்கும் என்று சொல்லியிருந்தால் எப்படித் துள்ளுவார்கள். ஆகவே மெல்லக் கவனித்து ஆகவேண்டியதைப் பார்க்கலாம்." என்று தமிழ் கட்சிகளிடம் சொல்லிக் கொள்ளலாம்.

தீர்வு யோசனைகள் தமிழ் பேசும் மக்களின் ஆதரவைப் பெறுகிறதோ இல்லையோ என்பதைவிட, இனப்பிரச்சனை தீர்வுக்கு யோசனைகளை முன்வைத்துள்ளதாக வெளியுலக வரவேற்பைப் பெறுவதுதான் அரசின் முக்கிய நோக்கம்.

தீர்வு யோசனைகள் பற்றி விவாதங்கள் தொலைக்காட்சி-வானொலிகளில் நடத்தப்பட்டு வருகின்றன.

விவாதங்களின் போக்கு தமிழ் பேசும் மக்களுக்கு பிரச்சனைகளே இல்லை, இந்த நாட்டில் அவர்களுக்கு பாரம்பரிய பூமியே இல்லை என்ற ரீதியில் சென்று கொண்டிருக்கின்றன.

இந்த விவாதங்கள் ஒரு கட்டத்திற்கு மேலே சென்றால் அரசுமீதும் அதிருப்தியை ஏற்படுத்துவதாக மாறக்கூடும். அது கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதையாகிவிடும்.

எனவே-தீர்வு யோசனைகள் மீதான விவாதங்களை நிறுத்தவும் கூடாது. அதே சமயம் சூடாக தொடரவிடவும் கூடாது.

ஆகவே-தீர்வு யோசனைகளை முன்வைத்த நோக்கத்தை அரசு உடனே நிறைவேற்றியாக வேண்டும். அதாவது யாழ் குடாநாட்டைக் கைப்பற்றும் பாரிய நடவடிக்கைகளை ஆரம்பித்தாக வேண்டும்.

தீர்வு யோசனைகளை முன்வைத்த சூட்டோடு 4.8.95 அன்று யாழ்-குடாநாட்டில் மினி இராணுவ நடவடிக்கை ஒன்றை படைத்தரப்பு வெள்ளோட்டம் விட்டுப் பார்த்தது.

அளவெட்டியில் இருந்து சுன்னாகம் நோக்கி படைகள் முன்னேறின. 8 மணி நேரக் கடும் மோதலின் பின் படைகள் அளவெட்டிக்கு திரும்பின. புலிகள் தரப்பில் 6 பேர் பலியானார்கள். மூவர் பெண் புலிகள்.

இப்போது யாழ்-குடாநாட்டில் படைகளும், ஆயுததளபாடங்களும் குவிக்கப்பட்டு வருகின்றன.

கிழக்கில் மூடப்படும் முகாம்களில் இருந்து படைகள் வடக்கே நகர்த்தப்பட்டுள்ளன. சமீபத்தில் திருமலை மாவட்டத்தில் மூடப்பட்ட மூதூர் இராணுவ முகாம்களில் இருந்த இராணுவத்தினரும் யாழ்-குடாநாட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

திருமலை துறைமுகத்தில் இருந்து கப்பல்கள் மூலமாக பெருந்தொகையான ஆயுதங்கள் பலாலி இராணுவ தளத்திற்கும், ஆனையிறவு தளத்திற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு இறுதிக்குள் யாழ்-குடாநாட்டை கைப்பற்றியேயாக வேண்டும் என்பதுதான் படைத்தரப்பின் திட்டம் என்று தெரிகிறது.

யாழ்ப்பாணத்தை கைப்பற்றிவிட்டால் பின்னர் கிழக்கை பார்த்துக் கொள்ளலாம் என்பது அரசின் இராணுவ தந்திரோபாயமாக இருக்கிறது.

ஆனால், புலிகளோ கிழக்கில் ஒரு பாரிய தாக்குதல் நடத்தும் தயாரிப்புக்களில் ஈடுபட்டுவருகின்றனர்.

அதில் புலிகள் வெற்றி பெற்றாலும்கூட யாழ் குடாநாடு மீதான வியூகத்தை படைத்தரப்பு தளர்த்தப் போவதில்லை.

புலிகள் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்துவதில் முந்திக் கொண்டால்கூட, அந்த நடவடிக்கைக்குப் பதிலடி கொடுத்தேயாக வேண்டிய கட்டாயம் படைத்தரப்புக்கு மேலும் அதிகமாகி விடும்.

ஆனால், படைத்தரப்பு மீது புலிகளின் தாக்குதலின் தீவிரம் அதிகமாக இருந்தால் படையினரின் மனோபலம் வீழ்ச்சியடையும்.

படைத்தரப்புக்கு தற்போது சாதகமாக இருப்பவை.

1. வெளியுலக ஆதரவு. 2. ஆட்பலம், ஆயுத பலம் 3. வெலி-ஓயாவில் பெற்ற வெற்றியின் மூலமான உற்சாகம். மனோபலம்.

இதில் முதலாவது-இரண்டாவது அம்சங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு படைகள் பக்கம் சாதகமாக நீடிக்கக்கூடும்.

யாழ் குடாநாட்டில் எத்தகைய மூர்க்கமான தாக்குதல் நடந்தாலும் வெளியுலகக் கண்டனம்-குறைவாகவே இருக்கும்.

மூன்றாவது அம்சம் புலிகளது பதிலடியைப் பொறுத்து மாறுபடக் கூடியது. ஆனால் அதுதான் போரில் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும் பிரதான காரணியாகவும் இருக்கிறது.

புலிகளை தாக்கி வெற்றிகொள்ள முடியும் என்று வெலிஓயாத் தாக்குதல் முறியடிப்பு மூலம் படைத்தரப்பு உற்சாகம் கொண்டுள்ளது.

அந்த உற்சாகம் புலிகளுக்கு பாதகம். மறுதரப்பை உளவியல் ரீதியில் எந்தளவுக்கு எந்தளவு அச்சுறுத்த முடியுமோ அதுவே கெரில்லா அணிகளுக்கு பெரிய பலம்.

புலிகள் அந்தப் பலத்தை மீண்டுமொரு தாக்குதல் மூலம் பெறுவதற்கு இடையில் முந்திக் கொள்ளவே படைத்தரப்பு நினைக்கிறது.

அந்த வாய்ப்பை புலிகள் வழங்குவார்களா, என்பது சந்தேகம்தான்.

ஆனால், எது எப்படியிருந்தாலும் யாழ் குடாநாட்டில் யுத்த பிசாசு தனது கோரமுகத்தை வெகு உக்கிரமாக காட்டப் போவது நிச்சயம்.

யாழ்-குடாநாட்டின் மீது புலிகளை வெற்றி கொள்ளும் செய்தி ஒன்றுதான்

**நாரதர்**

தனது ஆட்சிக்கு ஆயுளை நீடிக்கச் செய்யும் என்பது அரசின் திட்டவட்டமான நம்பிக்கை.

தற்போதைய தீர்வு யோசனைகளில் எவையெல்லாம் தப்பிப் பிழைக்கும் என்பது ஒரு புறமிருக்க, இவ்வாறான யோசனைகளை முன்வைத்ததே ஒரு பெரிய குற்றம் என்று பிரதான எதிர்க் கட்சியும், இனவாதிகளும் நாளை சொல்லக்கூடும்.

குற்றமல்ல, புலிகளை வெற்றி கொள்ள முன்வைக்கப்பட்ட உத்தி என்று அரசு சொல்ல வேண்டுமானால் புலிகள் மீதான வெற்றியேஅரசுக்கு பிரதான தேவை. இதுதான் தீர்வுயோசனையின் பின்னர் எழுந்துள்ள நிலவரம்.

புலிகளது அபிப்பிராயம் தேவையில்லை என்று அரசு அறிவித்து விட்டது. தம்மைப் புறக்கணித்துவிட்டு இலங்கையில் அமைதி சாத்தியமில்லை என்பதை தமது பலத்தால் வெளிப்படுத்தும் தேவை புலிகளுக்கு ஏற்பட்டுள்ளது. இது புலிகள் தரப்பு நிலவரம்.

இவை புரியாமல் புலிகளோடு அரசு பேசுமா? பேசலாமே என்று கூறுவோர் முகத்தில் நெருங்கிவரும் யுத்தப் பிசாசு கரி பூசப்போகிறது. ஆனால், மக்களுக்கு அது வழங்கப்போவது துன்பங்களையும், துயரங்களையும் இழப்புக்களையும் மட்டுமே.

## அதிரடி அய்யாத்துரை



யாழ்ப்பாணத்திலிருந்து வயதான தம்பதி கொழும்புக்கு வருவதற்கு ரெண்டு எழுத்தாரிடம் பிணை நின்றவராம் ஒரு இளம் குடும்பஸ்தர். உடனடியாத் திரும்பிவருவதாக சொல்லி போட்டு வந்த வயதான தம்பதி திரும்பேல்லையாம். பிணை நிண்டவரைப் பிடிச்சு உள்ளுக்கை போட்டிட்டினமாம் ரெண்டு எழுத்தார். அவரின் மனைவி கொழும்புக்கு ஓடிவந்து தம்பதியைத் தேடிப்பிடிச்சு "வாங்கோ யாழ்ப்பாணத்திற்கு உங்களுக்காக என்ரை புருசன் சிறையில் இருக்கிறார்." எண்டு மன்றாடினவவாம். வயதான தம்பதி என்ன சொன்னவை தெரியுமோ? "உன்ரை பிரச்சனை விளங்குது பிள்ளை. ஆனால் நாங்கள் என்ன செய்யிறது, நாளைக்கு அவுஸ்ரேலியாவுக்கு ஃபிளைட் அல்லோ." எண்டவையாம். பார்த்தியளோ தலை போனாலும் பிணை நிக்கக்கூடாதல்லோ.

தலைநகரில் வாழும் ஏழைத் தமிழ் கலைஞர் அவர். செல்வமான அந்த ராஜன் கலையை செல்வமாக மதிப்பவர். அவரைக் குடியிருந்த வீட்டில் இருந்து துரத்த பொன்னா தலைவரின் புத்திரர் வழக்கு நடத்தியிருக்கிறார். வீட்டு உரிமையாளர் புத்திரரின் உறவினராம். வேணுமெண்டால் 20 வருசம் வாடகை கொடுத்து குடியிருந்த வீட்டை தாங்களே வாங்குகிறோம என்று கலைஞர் கூறினாராம். அதுக்கும் புத்திரர் உடன்படவில்லையாம். வெளிநாட்டில் செல்வச் செழிப்போடு இருக்கும் மைத்துனருக்கு வீட்டில் இல்லாத அக்கறை சட்டகுமாரருக்கு மட்டும் ஏன் வந்தது? பணத்தோடு பணம் சேருறதுதானே முதல் முக்கியம். தேர்தல் வந்தால் மட்டும் இனத்தோடு இனம் சேரவேணும் எண்டு பேசலாமாக்கும்.

**உ**ற்சாக பான விடுதி நடத்த வெகுஜனப்பிரதிநிதிகளுக்கு ஆளுக்கு மூன்று அனுமதிப்பத்திரம் கொடுக்கப்படதாம். கிழக்கின் சிங்கமானவர் மூன்று போதாது எண்டு ஒற்றைக்காலில் நிண்டு நாலு பேருக்கு வாங்கியிருக்கிறாராம். தராவிட்டால் கவிழ்த்துப் போடுவோம் எண்டு கர்ஜித்திருப்பாரோ?

**தி**ருவான மலையின் தங்கமானவர் மூட் அவுட்டாகியிருக்கிறாராம். அவரது வாக்கு வங்கி இருக்கிற பகுதி ரெண்டு எழுத்தார் கையிலையல்லோ போயிருக்குது. அவரோடு ஒப்பந்த சம்பந்தம் வைச்சவருக்கு உள்ளூர சந்தோசமாம்.

**இ**னிமேல் இளநீர் வண்டி வந்தாலும், குப்பை வண்டி வந்தாலும் 'ஓரம்போ ஓரம்போ' எண்டு சொல்லாமலேயே சனம் தூரநிண்டு பார்த்துப் போட்டே வேற வழியாலை போகப் போகுதுகள். ஏதோ ஒரு படத்திலை தேங்காய்க்குள் குண்டு எண்டு கதை கட்டிவிட தேங்காய் விலை பொசுக்கென்று இறங்கிப்போற மாதிரி ஒரு காட்சிவரும். செவ்விளநீருக்கும் அப்படி ஒரு நிலை வந்தால் ஒரே தடவையில் பத்து குலை வாங்கவும் சிலர் தயாராக இருந்தவையாம். காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளும் பழக்கமோ? 'ஓரம்போ, ஓரம்போ செவ்விளநி வண்டி வருகுது.'

**ந**டைபாதையில் இருந்து கைராசி பார்க்கிறவை பாடு இனிச் சங்கடம்தான். ஒரு கையிலை லைசன்ஸ் வைச்சுக் கொண்டுதான் மறுகையாலை பிடித்து ராசி பார்க்கவேணும். நடைபாதையில் குடை கட்டுறவை முதல் ஒரு குடுகுடுப்பைக்காரர் வரை பொலிசிலை தங்கடை சாதகத்தை கொடுக்க வேணும் எண்டு உத்தரவு. ஒரே ஒரு இளநி வண்டி எத்தனை பாடு படுத்திப்போட்டுது.

**ரெ**ண்டு எழுத்தாரில் ஒரு பிரிவு இருக்குதாம். அதிலை இருக்கிறவை எல்லாம் வாட்டசாட்டமான ஆட்களாம். தாடியும் வளர்த்திருக்கினமாம். ரெண்டு எழுத்து பாய்ச்சலில் அவைதான் முன்னின்று காரியம் பார்த்தவையாம். முல்லையில் இருந்து வந்தவை எண்டு கேள்வி. அவையை யாழ்ப்பாண சனம் 'காட்டுப்பார்ட்டி' எண்டு அழைக்கினமாம். யாழுக்கு வந்தவுடனை அங்கிருந்த தங்கடை ஆட்களை 'காட்டுப்பார்ட்டி' ஒரு பிடி பிடிச்சுப் போட்டுதாம். "என்ன பார்த்துக் கொண்டிருந்தனியள் பஜிரோவும் ஓடிக்கொண்டு, நல்லா சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறியளோ?" என்று கேட்டதாகத் தகவல்.

**த**லைநகர புகைவண்டி நிலையத்திலை பயணிகளை பிடித்து ஒரு ஆளுக்கு குறைந்தது இரு நூறு வாங்குறம் படலம் நடந்து கொண்டிருக்குதாம். வேலியே பயிர்களை இப்படிச் செய்யலாமோ? மேல் இடத்திற்கு புகார் கொடுக்கலாமோ எண்டு விஷயமறிஞ்சவை யோசித்துக் கொண்டிருக்கினமாம்.

இந்தவாரம் சித்தர் பாடல் ஒண்டு. பிடிக்குதோ பாருங்கோ.

*"மாமன் மகளடியோ மச்சினியோ நானறியேன்*
*காமன் கணையெனக்குக் கனலாக வேகுதடி*
*மாமன் மகளாகி மச்சினியும் நீயானால்*
*காமன் கணைகளெல்லாம் என் கண்ணம்மா*
*கண்விழிக்க வேகாவோ."*

(பாடியவர் அழுகணிச்சித்தர்)



படிப்பகம்

# புலிகளுக்கு எம்.ஜி.ஆர்-கொடுத்த பணம்

## அரசியல் தொடர்

### அற்புதன் எழுதுவது

### 40

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

### உளவுத்துறை தகவல்

புலிகள் அமைப்பு கட்டுப்பாடான ஒரு அமைப்பு. பிரபாகரன் தனிப்பட்ட ரீதியில் தனக்கென்று சில ஒழுங்கு முறைகளை வகுத்துச் செயற்படுபவர். அவரது உறுப்பினர்கள் கட்டுப்பாட்டை மீறினால் கடுமையாக நடந்து கொள்பவர். இவை போன்ற விபரங்களை மாநில உளவுத்துறை மூலம் எம்.ஜி.ஆர். பெற்றிருந்தார்.

கலைஞர் கருணாநிதி ரெலோ அமைப்பை கிட்டத்தட்ட தத்தெடுத்தது போலவே தனக்கு ஆதரவாக வைத்திருந்தார்.

'ரெலோ' அமைப்பு கட்டுப்பாடு விடயத்தில் ஓட்டைகள் நிறைந்தது. ஒவ்வொரு உறுப்பினரும் ஒரு விதமாக செயற்படுவார்கள். என்றெல்லாம் தமிழக உளவுத்துறை எம்.ஜி.ஆரிடம் சொல்லி வைத்திருந்தது.

இந்த இடத்தில் ஈழப்போராளி அமைப்புக்கள் விடயத்தில் இந்திய-தமிழக உளவுத்துறைகளது நடவடிக்கை பற்றி சுருக்கமாக கூறவேண்டியிருக்கிறது.

ஈழப்போராளிகள் அமைப்புக்கள் குறித்து இந்தியாவில் நான்கு உளவுத் துறை அமைப்புக்கள் கண்காணித்து வந்தன.

1. இந்திய ஆய்வு- பகுப்பாய்வுப் பிரிவான 'றோ'(RAW)

2. இந்திய மத்திய புலனாய்வு பிரிவு. (சி.பி.ஐ)

3. இந்திய இராணுவத்தின் உளவுப் பிரிவு.

4. தமிழக பொலிஸ் உளவுத்துறையின் விஷேச பிரிவான 'கியூ' பிரிவு.

இதில் 'றோ' மட்டுமே மத்திய அரசின் முடிவுகளுக்கேற்ப போராளி அமைப்புக்களோடு நேரடித் தொடர்பு கொண்டிருந்தது.

அது ஏன்? ஆயுதம் அதிகம் பெற வேண்டுமானால் உறுப்பினர் தொகையை உயர்த்தித்தானே காட்ட வேண்டும்!

### மோகன்தாஸ்.

தமிழ்நாடு பொலிஸ் உளவுத்துறை டி.ஐ.ஜி.யாக இருந்தவர் கே.மோகன்தாஸ். இவர்தான் பின்னர் தமிழக பொலிஸ் டி.ஜி.பியாகவும் இருந்தவர்.

மோகன்தாசுக்கும் இலங்கை உளவுத் துறைக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக ஈழப் போராளி அமைப்புக்களுக்கு சந்தேகம் இருந்தது.

அதனால் தமிழக உளவுத்துறைக்கு சரியான விபரங்கள் கிடைக்கக்கூடாது என்று விழிப்பாக இருந்தனர்.

ஆனால், மோகன்தாஸ் எம்.ஜி.ஆருக்கு வலதுகரம் போல இருந்தார். எம்.ஜி.ஆர். அவர் சொன்ன தகவல்களை பெரிதும் நம்பினார்.

### புலிகளுக்கு புகழாரம்

ஈழப் போராளி அமைப்புக்கள் குறித்து மோகன்தாஸ் எம்.ஜி. ஆருக்கு என்ன சொல்லியிருப்பார் என்பதை அறியவேண்டுமா?

பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் மோகன்தாஸ் ஒரு புத்தகம் எழுதியிருந்தார். 'எம்.ஜி.ஆர் நிழலும், நிஜமும்.' என்பது அதன் பெயர். (இப்புத்தகம் பற்றி முன்னரும் ஒரு முறை குறிப்பிட்டிருக்கிறேன்.)

அப்புத்தகத்தில் ஈழப்போராளி அமைப்புக்கள் பற்றி மோகன்தாஸ் கூறியிருப்பது இதுதான்:

"மத்திய அரச அமைப்புக்கள் செய்த முதல் தவறு, பயிற்சிக்கான கையாட்களாக அவை 'டெலோ' பிரிவினரைத் தேர்ந்தெடுத்ததே. அந்தப் பிரிவில் குற்றவாளிகளும் கொலைகாரர்களும் இருந்தனர். விடுதலைப் புலிகள், ஈ.பி.ஆர்.எல்.எவ்., ப்ளொட் (புளொட்) அமைப்புக்களுக்கு இருந்த தீவிர இலட்சியப் பிடிப்பு 'டெலோ' வுக்கு இல்லை. ஆனால், அவர்கள் மத்திய அரசைப் பொறுத்தவரை 'ஆமாம் சாமிகள்.' இந்தப் பாரபட்சம் மற்றப் போராளிகள் பிரிவுகளை வருத்தப்படுத்தியது.

எல்.ரி.ரி.ஈ.க்கு உயர்ந்த இலட்சிய ஈடுபாடு இருந்தது. கவர்ச்சிகரமான அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையில் போராளிகள் கட்டுப்பாட்டுடன் இயங்கினார்கள்.

அவ்வப்போது நான் எம்.ஜி.ஆரிடம் போராளிகள் பற்றிச் சொல்லிவந்தேன். போராளிகளது தலைவர்களை, குறிப்பாகப் புலிகளைச் சந்திக்க விரும்புவதாக ஒரு முறை அவர் என்னிடம் தெரிவித்தார்.

எம்.ஜி.ஆருக்கும், புலிகளது தலைவர் பிரபாகரனுக்கும் ஒரு பிணைப்பு ஏற்பட்டு விட்டது. தனக்கே உரித்தான உள்ளுணர்வு மூலம் எம்.ஜி.ஆர். புலிகளுக்கும் பிற அமைப்புக்களுக்கும் உள்ள வேறுபாடுகளைப் புரிந்து கொண்டார். அதன் விளைவாக எம்.ஜி.ஆர். பிற்காலத்தில் அந்த இயக்கத்திற்கு தனது சொந்தப் பணத்தில் இருந்தும், அரசு நிதியிலிருந்தும் வெவ்வேறு சமயங்களில் உதவி செய்தார்."

இவ்வாறு கூறியிருக்கிறார் மோகன்தாஸ். தனது உளவுத்துறை மூலம் பெற்ற விபரங்களை வைத்து புலிகளை அணைத்துக் கொண்டார் எம்.ஜி.ஆர்.

பயிற்சி, ஆயுதம், நிதி மூன்றும் 'றோ' மூலமாகவே இயக்கங்களுக்கு வழங்கப்பட்டமையால் இந்திய அரசின் பிரதிநிதி போலவே இயக்கங்களோடு 'றோ' நடந்து கொண்டது.

ஏனைய உளவுப் பிரிவுகள் போராளிகளோடு நட்பு ரீதியில் பழகி தமக்குத் தேவையான விபரங்களைப் பெற்றுக் கொள்வதோடு நின்று கொண்டன.

எங்கெங்கே இயக்க முகாம்கள் இருக்கின்றன; எத்தனை பேர் இருக்கிறார்கள் போன்ற விபரங்களை சேகரிப்பதோடு அவை இருந்துவிட்டன.

'றோ' வோடு தொடர்பு இருந்தமையாலும் தமிழக மக்களது பேராதரவு இருந்தமையாலும் ஏனைய உளவுப் பிரிவுகளை போராளி அமைப்புக்கள் பொருட்டாகக் கொள்ளவில்லை.

அவர்கள் கேட்ட விபரங்களைக் கூட சரியாக கொடுப்பதுமில்லை.

உதாரணமாக, ஒரு முகாமில் நூறு பேர் இருந்தால் 50 பேர் என்று முகாம் பொறுப்பாளர் சொல்லுவார்.

'றோ' பிரிவு கேட்டால் மட்டும் முகாமில் நூறு பேர் இருந்தாலும் இருநூறு பேர் இருக்கிறார்கள் என்று பொறுப்பாளர் சொல்லிவிடுவார்.

கலைஞர் கருணாநிதிக்கு மட்டும்தான் ஈழப் போராளி அமைப்புக்களிடம் செல்வாக்கு இருக்கிறது என்ற எண்ணத்தைத் தவறாக்குவதும் எம்.ஜி.ஆரின் திட்டமாக இருந்தது.

இந்த விடயத்திலும் எம்.ஜி.ஆரிடம் கலைஞர் கருணாநிதி தோற்றுத்தான் போனார். எம்.ஜி.ஆரின் மறைவின் பின்னர் ரெலோவைக் கைவிட்டு புலிகளை முற்று முழுதாக ஆதரித்தார் கலைஞர்.

எம்.ஜி.ஆர். பதவியில் இருந்தபோது ரெலோ உறுப்பினர்கள் பலரைக் கடுமையான சட்டங்களின் கீழ் சிறையில் தள்ளியிருந்தார். கலைஞர் பதவிக்கு வந்த பின்னரும் அவர்களில் சிலர் சிறையில்தான் இருந்தனர்.



# மின் கம்பத்தில் தொங்கிய சடலங்கள்

# 84 இல் ஒரு சங்கிலியன் பஞ்சாயத்து

### சமூக விரோதிகள் ஒழிப்பு

1984 இல் வடக்கில் சமூக விரோதிகள் ஒழிப்பு தீவிரமாக நடந்தது.

பொலிஸ் நிலையங்கள் பல மூடப்பட்டமையால் சமூக விரோதிகளுக்கு கொண்டாட்டமாகிவிட்டது.

வீடுகளில் புகுந்து கொள்ளை, பெண்களை பலாத்காரம் செய்தல், வீதிகளில் சங்கிலிப் பறிப்பு என்று சமூக விரோதிகளது அட்டகாசம் அதிகமாகியது.

சுழிபுரத்தைச் சேர்ந்தவர் சின்னையா சிவபாலன். 21 வயது. சுழிபுரம், பண்டத்தரிப்பு பகுதியில் பிரபலமான உள்ளூர் சண்டியர்.

5.03.84 அன்று சின்னையா சிவபாலன் பண்டத்தரிப்புச் சந்தியில் சூட்டுக் காயங்களோடு செத்துக் கிடந்தார்.

பிணத்தின் அருகே ஒரு துண்டுப் பிரசுரம் காணப்பட்டது.

வீடுகளில் நகைக் கொள்ளைகளில் ஈடுபட்டது; சண்டிலிப்பாய் இளம் பெண் ஒருவரை சுழிபுரத்தில் வைத்து பலாத்காரம் செய்தமை; இயக்கத்தின் பெயரில் வாகனக் கடத்தல்களில் ஈடுபட்டமை போன்ற குற்றச்சாட்டுகள் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தன.

பிரசுரத்தின் அடியில் தீர்ப்பு வழங்கியது யார் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தீர்ப்பு வழங்கியது: 'சங்கிலியன் பஞ்சாயத்து' என்று மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்தது.

சங்கிலியன் பஞ்சாயத்து என்ற பெயரில் தண்டனை வழங்கியது புளொட் இயக்கம்.

யாழ்ப்பாண இராச்சியத்தை கடைசியாக ஆண்ட மன்னனின் பெயர்தான் சங்கிலியன்.

கிளிநொச்சியில் கந்தசாமி சிறிஸ்கந்தராசா (வயது 33) என்பவரும் சமூகவிரோதி என்று குற்றம் சாட்டப்பட்டு 'புளொட்' அமைப்பால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

### மின் கம்பத்தில்

அச்சுவேலி பஸ் நிலையத்துக்குச் சென்றவர்களுக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. அங்கிருந்த மின் கம்பத்தில் ஒரு உடல் கட்டப்பட்டிருந்தது.

முகத்தில் சூட்டுக்காயம். கழுத்தில் வெட்டுக் காயம். கொலையானவர் இளைஞராகத் தெரிந்தார்.

மின் கம்பத்தின் அருகே ஒரு துண்டுப் பிரசுரம் காணப்பட்டது.

துப்பாக்கி முனையில் பொதுமக்களின் உடமைகளைக் கொள்ளையடித்தான். அதுக்காகவே தண்டனை என்று பிரசுரத்தில் கூறப்பட்டிருந்தது.

பிரசுரத்தில் புலிகள் தமது சின்னத்தையும் பொறித்திருந்தனர்.

கொல்லப்பட்டவரின் பெயர் பொன்னம்பலம் நடராஜா. வயது 28.

இத் தண்டனையை அடுத்து மின் கம்பத் தண்டனைகள் பரபரப்பாகப் பேசப்பட்டன.

திருடர்கள், கொள்ளையர்கள் பற்றி மக்கள் தமக்குள் பேசிக்கொள்ளும் போது, இவ்வாறு கூறுவார்கள்:

"போஸ்ரிலை (மின்கம்பத்தில்) தொங்கப்போறான்."

### குக்கூ

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டைச் சேர்ந்தவர் குமரத்தினம். 29 வயது. இவரும் ஒரு சண்டியர். சுருக்கமாக 'குக்கூ' என்று அழைக்கப்படுவார்.

'குக்கூ' வுக்கு மூன்று பெண்டாட்டி. அதுவும் போதாது என்று அங்கே இங்கே கைநீட்டி அட்டகாசம் வேறு.

என்றாலும் 'குக்கூ' கெட்டிக்காரன். 83 ஜூலைக் கலவரத்தின் போது வெலிக்கடைச் சிறையில் தமிழ் அரசியல் கைதிகள் கொல்லப்பட்டார்கள் அல்லவா?

அப்போது யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்த தமிழ் கைதிகளுக்கும் பயம். தாமும் கொல்லப்படலாம் என்று நினைத்தார்கள். 'குக்கூ' வும் ஏதோ திருட்டுக் குற்றத்துக்காக யாழ்ப்பாணச் சிறையில் இருந்தான்.

அநியாயமாக சாவான் ஏன் என்று சிறையிலிருந்து தப்பி ஓடி வந்து விட்டான்.

வெளியே வந்தவன் ஆங்காங்கே கைவரிசை காட்டினான். நவாலியில் ஒரு வீட்டில் புகுந்து அங்கிருந்த இளம் பெண்ணைத் தாக்கினான். ஒரு லட்சம் ரூபாய் பெறுமதியான நகைகளோடு கம்பி நீட்டினான்.

ஒரு நாள் 'குக்கூ' வை வழிமறித்தனர் சில இளைஞர்கள். 'குக்கூ' முதலில் முறைத்துப் பார்த்தான். பின்னர் என்ன நினைத்தானோ ஓடத் தொடங்கினான்.

இளைஞர்களில் ஒருவர் சுட்டார். 'குக்கூ' விழுந்தான். மல்லாகத்தில் ஒரு மின்கம்பத்தில் 'குக்கூ'வின் உடலைக் கட்டிவிட்டுப் போய்விட்டார்கள்.

"பல தடவை எச்சரித்தோம், கேட்கவில்லை, அதனால் சுட்டுவிட்டோம்" என்று சுன்னாகம், மல்லாகப் பகுதிகளில் சுவரொட்டிகள் காணப்பட்டன.

புலிகள் தான் குக்கூவைச் சுட்டனர். குக்கூ சிறையில் இருந்திருந்தால் செத்திருக்க மாட்டான்.

### ஜப்பானுக்கு குறி

இதேபோல மற்றொரு சம்பவம். முல்லைத்தீவைச் சேர்ந்தவர் மகேந்திரன். இவரை மகேந்திரன் என்று சொன்னால் தெரியாது. ஜப்பான் என்று சொன்னால் தான் தெரியும்.

தனியார் வீடுகளுக்குள் புகுந்து கைவரிசை காட்டுவதில் ஜப்பான் படு சூரன். அடி, பிடி விவகாரங்களிலும் கெட்டிக்காரன்.

ஜப்பானை தேடிவந்தனர் மூன்று இளைஞர்கள். ஜப்பானுக்கு விஷயம் விளங்கிவிட்டது. வந்தவர்களையும் ஓரளவு அவனுக்குத் தெரியும்.

ஓடித்தப்ப வழி பார்த்தான். சூடு விழுந்தது. தலையில் ஒரு சூடு; மார்பில் ஒரு சூடு; ஜப்பான் செத்துப் போனான்.

இதற்கு அன்டன் படைப்பிரிவு உரிமை கோரியது. இது புளொட் அமைப்பின் ஒரு பிரிவாகும்.

பிரபலமான மற்றொரு சண்டியருக்கு புலிகள் குறிவைத்தனர்.

குறிவைக்கப்பட்டவரும் லேசுப்பட்டவரல்ல.

(தொடர்ந்து வரும்)




28.6.95 அதிகாலை மண்டைதீவு இராணுவ முகாமை புலிகள் தாக்கி அங்கிருந்த ஆயுதங்களை கைப்பற்றினார்கள்.

முகாம் தாக்குதல் காட்சியே ( 1. 2. 3. ) மேலுள்ள படங்களில் காணப்படுகிறது.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை புலிகளது தலைவர் பிரபாகரன், கடற்புலித் தளபதி சூசை, புலிகளது மூத்த தளபதி சொர்ணம், யாழ் தளபதி பானு ஆகியோர் (3.4.5.) பார்வையிடுகின்றனர்.

□□

28.07.95இல் வெலிஓயா தாக்குதல் புலிகளிடம் கைப் பற்றிய ஆயுதங்களை புலிகளது பாணியிலேயே பார்வைக்கு வைக்க இராணுவத்தினருக்கு ஒரு வாய்ப்பு. (படம் 6) இராணுவ வெற்றிகளை பறைசாற்றுவதில் இரு தரப்பும் ஏட்டிக்குப் போட்டியாக செயற்படுகின்றன. ஆயுத பலத்திற்கே முதல் மரியாதை.



www.padippakam.com

## அலசுவது–இராஜதந்திரி

# நாட்டின் பிரிவினையைத் தடுத்து நிறுத்தும் முஸ்தீபு!

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இனப்பிரச்னை தொடர்பாக முன்வைத்துள்ள தீர்வு யோசனைகள் இலங்கையில் எவ்வளவு தூரம் வரவேற்கப்பட்டுள்ளன என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது.

ஆயினும் ஜனாதிபதி சந்திரிகாவின் தீர்வுயோசனைகள், வெளிநாடுகளில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

இலங்கை இனப்பிரச்னை குறித்து அக்கறை கொண்டுள்ள நாடுகளும், அந்நாடுகளிலிருந்து வெளிவரும் செய்திப்பத்திரிகைகளும் ஜனாதிபதியின் தீர்வு யோசனைகளை வரவேற்றுள்ளன.

பரவலாக்கம் மேற்கொள்ளப்பட்டு நாட்டு மக்கள் மத்தியில் பல்வேறு துறைகளிலும் அதிகார விடயங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

இதன் காரணமாகவே இன்று அரசியல் இஸ்திரப்பாட்டுடன் பொருளாதார ரீதியாக வளர்ச்சிகண்டுள்ள நாடுகள் பலவும் தம்மிடையே இன, பிரதேச ரீதியான சர்ச்சைகள் ஒரு தொடர்கதையாக இருப்பதை தவிர்த்திருப்பதைக் காண முடிகின்றது.

இலங்கையின் இனப்பிரச்னைக்கு கணிசமான அளவில் விரிவான அதிகாரப்பரவலாக்கத்தை

மாகாண சபையை ஏற்றுக்கொண்ட ஏனைய வடக்கு-கிழக்கின் அரசியல் கட்சிகள் கூட, காலப்போக்கில் மாகாண சபையை மையமாகக் கொண்ட அதிகாரப்பரவலாக்கம் வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு ஒரு நிரந்தரத்தீர்வாக அமையமாட்டாதென்பதனை உணர்ந்துகொண்டன.

எனவே, வடக்கு-கிழக்கில் மாகாணசபை ஆட்சிமுறை தோல்விகண்ட பின்னர், ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான புதிய ஆட்சியாளர்களால் பிராந்திய ரீதியில் அதிகாரப்பரவலாக்கல் விடயங்களை மையமாகக் கொண்டு

மேற்கொள்வதன் மூலமே அர்த்தமுள்ள தீர்வை காணமுடியும் என்று நீண்டகாலத்திற்கு முன்னரேயே உணரப்பட்டிருந்தது.

ஜனாதிபதியின் தீர்வுயோசனைகளை வடக்கு-கிழக்கு மக்கள் நிச்சயமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இலங்கை இனப்பிரச்னைக்கு இத்தீர்வு யோசனைகளே இறுதியும், முடிவுமானவை என்று வெளிநாடுகளும், மற்றும் சர்வதேச அவதானிகளும் குறிப்பிடவில்லை.

இருந்தபோதிலும் இலங்கையில் தொடர்ந்துகொண்டிருக்கும் அநாவசிய யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவரவும், வடக்கு-கிழக்கு மக்களின் அரசியல் அபிலாஷைகள் குறித்து மீண்டும் அரசியல் ரீதியான பேச்சுக்களை ஆரம்பிக்கவும் ஜனாதிபதி சந்திரிகாவின் தீர்வு யோசனைகள் விரிவான வாய்ப்புக்களை வழங்கி நிற்கின்றன என்றே சர்வதேச சமூகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதியின் தீர்வுயோசனைகள் உள்நாட்டவரின் வரவேற்பைவிட, வெளிநாட்டவரின் வரவேற்பினைப் பெரிதும் பெற்றவையாகவே விளங்குகின்றன.

இந்தியா உட்பட இன்று உலக நாடுகள் பலவும் தமது ஒருமைப்பாடு, ஐக்கியம், மற்றும் பொருளாதார மேம்பாடு என்பவற்றை பேணுவதற்கு, அரசியல் ரீதியாக காத்திரமான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதே முக்கிய காரணமாகும்.

அரசியல் ரீதியான உறுதிப்பாடு என்று குறிப்பிடும்போது, இன, மற்றும் பிரதேச ரீதியாக அதிகாரப்

ஆனால் அதிகாரப்பரவலாக்கம், மற்றும் அதனோடிணைந்த ஆட்சிமுறை பற்றி நாட்டு மக்களிடையே போதியளவு விளக்கமற்ற நிலையே காணப்பட்டது.

இதன் காரணமாகவே காலத்துக்குக்காலம் இலங்கை இனப்பிரச்னைக்கு தீர்வுகாண்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்ட போதெல்லாம், அம்முயற்சிகள் முறியடிக்கப்பட்டிருந்தன. அத்துடன் இனப்பிரச்னை தொடர்பாக முன்வைக்கப்பட்ட சில தீர்வுத்திட்டங்கள் அரைகுறையானவையாகவும் இருந்தன.

இலங்கை இனப்பிரச்னை தீர்வு தொடர்பாக கடந்த காலங்களில் கொண்டுவரப்பட்ட, பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம் மற்றும் கடந்த 17 வருடகால ஆட்சியில் ஐக்கியதேசியக் கட்சியினால் கொண்டுவரப்பட்ட தீர்வு முயற்சிகள் ஆகியன அனைத்துமே தோல்வியையே தழுவியிருந்தன.

இருந்த போதிலும் 1987ம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் மூலம் கொண்டுவரப்பட்ட மாகாண சபைகளை அடிப்படையாகக் கொண்ட தீர்வுத்திட்டம், இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தோல்வியை தழுவியுள்ள போதிலும், நாட்டின் ஏனைய பகுதிகளில் நடைமுறையில் இருப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

மாகாண சபைகளை அடிப்படையாகக் கொண்ட அரசியல் தீர்வுத்திட்டம் வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு ஒரு பரிகாரமாகக் கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் அத்தீர்வுத்திட்டம் நாடு தழுவிய ரீதியில் அதிகாரப் பரவலாக்கத்தை மேற்கொள்ளவேண்டியதன் அவசியத்தையே வலியுறுத்துவதாக இருந்தது.

எனவே-அதிகாரப் பரவலாக்கத்தின் அடிப்படை அம்சங்களை நாட்டுமக்கள் நடைமுறைச் சாத்தியமான முறையில் அறிந்துகொள்ளும் முதலாவது சந்தர்ப்பத்தை வழங்குவதாகவே மாகாண சபை ஆட்சி முறை விளங்கியிருந்தது.

ஆயினும், ஒரு முழு அளவிலான அதிகாரப்பரவலாக்கத்தையோ, அல்லது வடக்கு-கிழக்கு பிரச்னையின் அடிப்படை அம்சங்களை அழுத்தம், திருத்தமான முறையில் அணுகுவதாகவோ மாகாண சபை முறையிலான தீர்வுத்திட்டம் அமையவில்லை.

இதன் காரணமாகவே வடக்கு-கிழக்கில் மாகாண சபை நிர்வாகமுறை தோல்விகண்டிருந்தது. தமிழீழ விடுதலைப்புலிகள் மாகாண சபைமுறையை ஆரம்பத்திலேயே நிராகரித்திருந்தனர். தொடர்ந்து

## வெளியுலகின் வரவேற்பைப் பெற்றுள்ள



## சந்திரிகா அரசின் தீர்வு யோசனைகள்




புதிய தீர்வு யோசனைகள் வெளியிடப்பட்டுள்ளன.

எது எப்படி இருந்தபோதிலும் ஜனாதிபதி சந்திரிகா தாம் ஆட்சிப்பீடமேறி ஆண்டொன்று பூர்த்தியாவதற்கு முன்பதாகவே சிக்கல் நிறைந்த வடக்கு-கிழக்குப் பிரச்னையைத் தீர்க்கும்வகையில் தமது அரசின் தீர்வு யோசனைகளை வெளியிட்டிருப்பது வரவேற்கக் கூடியதே. அத்துடன் அத்தீர்வு யோசனைகளில் காணப்படும் பல்வேறு விடயங்களும் பரந்துபட்ட கருத்துப்பரிமாற்றங்களுக்குக் களம் அமைத்தவையாகவுமிருக்கின்றன.

வடக்கு-கிழக்குப் பிரச்னையை தீர்த்துவைக்கும் வகையிலேயே ஜனாதிபதி சந்திரிகா அரசியல் தீர்வு யோசனைகளை முன்வைத்துள்ள போதிலும் நாடுதழுவிய ரீதியில் விரிவான அதிகாரப்பரவலாக்கத்தை வலியுறுத்துவதாக அந்த யோசனைகள் காணப்படுகின்றன.

இந்நிலையில் ஆட்சியாளர்கள் வடக்கு-கிழக்கு மக்கள் மத்தியிலும் அப்பிரதேசங்களின் அரசியல் கட்சிகளிடையேயும் புதிய தீர்வுயோசனைகளை விளக்கிக்கூறுவதைவிட, தென்னிலங்கையின் பேரினவாத சக்திகளிடையே இத்தீர்வு யோசனைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்து வதே இன்றியமையாததாகின்றது.

இனப்பிரச்னையை தீர்ப்பதற்கான அரசியல் தீர்வுயோசனைகள் என்று குறிப்பிடுவதைவிட, நாடு பிரிந்து செல்வதை தடுத்து நிறுத்துவதற்கான அரசியல் முஸ்தீபுகளே அந்த யோசனைகள் என்பதனையே ஆட்சியாளர்கள் நாட்டுமக்களிடையே எடுத்தியம்பவேண்டியவர்களாகின்றனர்.

புதுடில்லி ஜவஹர்லால்நேரு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அரசியல் துறை பேராசிரியர் முனி ஓரிரு வருடங்களுக்கு முன்னர் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஸ்தாபகர் பத்மநாபா ஞாபகார்த்தமாக கொழும்பில் நினைவுப் பேருரையொன்றை வழங்கியிருந்தார்.

அப்போது பேராசிரியர் முனி, "ஒருநாட்டில் பெரும்பான்மை இனத்தவர்கள் சிறுபான்மை இனத்தவர்களுக்கு சமஉரிமைகள் மற்றும் கூடுதல் அதிகாரங்களைக் கொடுப்பதில் தயக்கம் காட்டுவதற்கு, சிறுபான்மை மக்கள் குறித்த அச்சமே முக்கிய காரணமாக இருக்கின்றது. சிறுபான்மை இனமக்கள் தம்மீது முழு அளவில் ஆதிக்கஞ் செலுத்தமுற்பட்டு விடுவார்களோ? என்ற உள்ளார்ந்த அச்சம் பெரும்பான்மையினரிடையே நிலவுவதனாலேயே சிறுபான்மையினர் உரிமைகள், அதிகாரங்களை பெரும்பான்மை சமூகத்தவர்கள் நிராகரித்து விடுகிறார்கள்" என்று குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையின் இனப்பிரச்னை குறித்த அரசியலைப் பொறுத்தவரை புதுடில்லிப் பேராசிரியர் முனி குறிப்பிட்டவை, கனகச்சிதமானதாகவே இருக்கின்றன.

இலங்கையில் சிறுபான்மை சமூகத்தின் உரிமைகள், உணர்வுகள் என்பன எவ்வளவு தூரம் நசுக்கப்பட்டு வருகின்றன என்பதற்கு இன்றைய மலையக மக்களின் வாழ்க்கை முறை ஒரு நல்ல உதாரணமாக இருக்கின்றது.

கடந்த 175 வருடங்களுக்கும் மேலாக இலங்கையில் வாழ்ந்துவரும் மலையக மக்கள் இன்றும் கூட பல்வேறு வழிகளிலும் தகுந்த வாய்ப்புகள் இன்றியிருப்பதையே காணமுடிகின்றது.

கல்வி, வேலைவாய்ப்பு, குடியிருப்பு உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் மலையக மக்கள் பெருமளவு புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள்.

மிக அண்மைக்காலம்வரை வாக்களிக்கும் உரிமையைக்கூட பெற்றிராத மலையகமக்கள் அரசியல் ரீதியாகப் பந்தாடப்படும் நிலையை எதிர்நோக்கியுள்ளார்கள்.

இந்நிலையில் வடக்கு-கிழக்கின் தமிழ்பேசும் மக்களும், மலையக மக்களின் பாணியில் கூனிக்குறுகியிருந்திருப்பார்களேயானால் பெரும்பான்மை இனஆட்சியாளர்கள் அவர்கள் மீது தமது மனம் போன போக்கில் 'சவாரி' செய்திருப்பார்கள்.

இந்நிலையில் தமது தன்மானம், தனித்துவம், தமது பிரதேசம், பாரம்பரியம், பாதுகாப்பு என்பனவற்றை வலியுறுத்தி அவற்றை உறுதிசெய்து சரிநிகர் சமானமாக வாழ்வதிலேயே வடக்கு-கிழக்கு மக்கள் பேரவா கொண்டுள்ளனர்.

எனவே ஜனாதிபதி சந்திரிகாவின் புதிய தீர்வு யோசனைகள் வடக்கு-கிழக்கு மக்களின் பிரச்னைகளுக்கான நிரந்தரத்தீர்வை நோக்கியவையாக விரிவான பரிசீலனைக்கு உட்படவேண்டியவையாகவுள்ளன.

பலம்மிக்க ஆயுதப்போராட்ட அமைப்பாக இருக்கும் எல்.ரி.ரி.ஈயினர் தமக்கு உடன்பாடாத எந்தவொரு தீர்வையும் நடைமுறைப்படுத்துவதற்கு ஒருபோதும் இணங்கமாட்டார்கள்.

மறுபுறத்தே ஜனாதிபதி சந்திரிகாவின் இப்புதிய யோசனைகளே அவரது அரசாங்கத்தினால் இனப்பிரச்னை தொடர்பாக வைக்கப்படக்கூடிய

தீர்வுத்திட்டம் எத்தகைய கோணத்தில் இருக்குமென்பதனையும் புலனாக்குகின்றது.

இனப்பிரச்னை தீர்வு என்பதை விட நாட்டின் பிரிவினையைத் தடுப்பது என்ற தோரணையிலேயே இத்தீர்வு யோசனைகளை நோக்கமுடிகின்றது.

இதேவேளையில், தீர்வுயோசனைகள் தமக்கு வைக்கப்பட்டுள்ள பொறி என்றே புலிகள் கருதுவதாக அறியமுடிகிறது.

வடக்கு-கிழக்கு தமிழர் தாயம் என்னும் கோட்பாட்டை அரசு தனது யோசனைகளில் பூசி மழுப்பியிருப்பது புலிகளுக்கு ஒருவகையில் சாதகமாக இருக்கிறது.

தமிழர் தாயகக்கோட்பாட்டை அங்கீகரிக்கும் மாற்றுத்தீர்வை மட்டுமே பரிசீலிப்போம் என்று புலிகள் அமைப்பினர் முன்னர் பல தடவை கூறிவந்துள்ளனர்.

தற்போதைய தீர்வுயோசனைகளை தனித்தனியாக பரிசீலிப்பது அரசாங்கத்தின் பொறிக்குள் சிக்குவதாக அமையும் என்றே புலிகள் நினைப்பர்.

தவிர, அரசும் புலிகளது கருத்து அவசியமில்லை என்ற போக்கை கடைப்பிடித்துவருவதோடு, வெளிப்படையாக சொல்லியும் இருக்கிறது. தீர்வுத்திட்ட யோசனைகளை முன்வைத்துவிட்டு, புலிகளுக்கு எதிரான யுத்தத்தை தீவிரப்படுத்தவே அரசு நினைக்கின்றது.

அதன் மூலம் சிங்கள மக்களிடையே தீர்வு யோசனைகள் காரணமாக தன்மீது ஏற்படும் சந்தேகங்களையும் போக்கலாம் என்றுதான் அரசு நம்புகிறது. தீர்வு யோசனைகள் குறித்து அரசு புலிகளோடு பேசச் சென்றால் நாட்டை பிரிக்கும் திட்டமாக பிரசாரம் செய்யப்படும்.

## உரிமைகள், உணர்வுகள் நசுக்கப்பட்ட சிறுபான்மையினருக்கு உதாரணமாக இருக்கும் மலையக மக்கள்!!

ஆக, தீர்வு யோசனைகளை வெளியிட்டுள்ள அரசு தனது நம்பகத்தன்மையை நிரூபிக்க புலிகள் மீது யுத்தம் நடத்தும்போது அரசியல்-இராணுவ நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்படலாம்.

புலிகளை தோற்கடிக்க அரசால் முடியாதபோது தீர்வு யோசனைகளுக்கு இறுதி வடிவம் கொடுப்பதில் சிங்கள மக்களது ஆதரவை திரட்ட முடியாமல் போகலாம்.

ஒரு வேளை புலிகளைவிட படைகளது கைகள் மேலோங்கினால், இனவாதிகளது வீர தீரப் பிரசாரங்கள் தீவிரமாகக்கூடும். தமிழ் மக்களுக்கு அதிக அதிகாரங்களை கொடுக்கக் கூடாது என்று அவர்கள் உரத்துச் சொல்லக்கூடும். படைகளது தியாகங்கள் வீணடிக்கப்படலாகாது என்ற வாதமும் முன்வைக்கப்படும்.

இனவாதிகளது வாயை அடக்க இனப்பிரச்னையின் தீவிரத்தைச் சுட்டிக்காட்ட முடிவது புலிகளது பலத்தை வைத்துத்தான்.

புலிகளோடு சமரசம் என்றாலும் ஆபத்து, புலிகள் தோல்வியடைந்தாலும் ஆபத்து என்ற நிலையில்தான் தீர்வு யோசனைகளது எதிர்காலம் அமைந்துள்ளது.


படிப்பகம்

# ஜிகாத்-ஜிகாத்-அபுஜிகாத்



ஜிகாத்-புனித யுத்தம்.
அபு-ஜிகாத்-புனித யுத்தத்தின் தந்தை.
அபு-ஜிகாத் என்று பாலஸ்தீனர்களால் அழைக்கப்பட்டவர்-கலீல் அல்-வாஸீர்!
அல்-வாஸீரின் கதையை முடிக்க இஸ்ரேல் மரணவலை விரித்தது.
மரணத்தோடு போராடிய புனிதப் போராளியின் கதையில் ஒரு துளி தான் இது ......

அல்-வாஸீர் தனது வீட்டின் அலுவல அறையில் இருந்து பேசிக் கொண்டிருந்தார்.

எதிரேயிருந்தவர்கள் மூவர். மூவரும் அல்ஃபட்டாவின் உறுப்பினர்கள்.

"இது பாதுகாப்பான இடமாகத் தெரியவில்லை. தவிர, ஒரே இடத்தில் நீண்டகாலம் நீங்கள் தங்கியிருப்பதும் தவறு. வேறு இடத்திற்கு மாறினால் என்ன?"

"அடிக்கடி இடம்மாறிக்கொண்டிருந் தால் பணிகள் பாதிக்கப்படுகின்றன. புதிய இடத்தை அறிந்து செய்திகள் வந்து சேரத் தாமதங்களும் ஏற்படும்."

"உண்மை. ஆனால் பணிகள் தொடர வேண்டுமானால் உங்கள் உயிர் முக்கிய மல்லவா?. மறுக்காதீர்கள். வேறு இடத்திற்கு நகர்வதுதான் பத்திரம்."

அவர்கள் வற்புறுத்த அல்-வாஸீர் கூர்ந்து நோக்கினார். எத்தனை பாசம். இரத்த உறவுகளை விட இதய இலட்சியத்தால் ஏற்படும் உறவுகளுக்குத்தான் வலிமை அதிகம். யோசிக்கப் பெருமையாக இருந்தது.

"அன்புக்கு நன்றி! நான் இப்போது வாழ்ந்துகொண்டிருப்பதே இரவல் பெறப் பட்ட காலத்தில்தான்."

"என்ன சொல்கிறீர்கள்?"

"நான் வாழவேண்டிய காலத்தை விட மேலதிகமாகவும் வாழ்ந்துவிட்டேன் என் கிறேன். ஆனாலும் எனக்கொரு ஆசை இருக்கிறது. அந்த ஆசைதான் இரவல் காலத்தில் என்னை வாழத்தூண்டியுள்ளது. தாய்நாட்டை நேசிக்கும் எவருக்குமே, தாய் நாட்டின் விடுதலையைக் காணும் ஆசை இருக்கவே செய்யுமல்லவா?. எனக்கும் அந்த ஆசைதான்."

"எம் பூமி விலங்குடைக்கும்!. புனிதபூமி! பாலஸ்தீனம் தன் சுதந்திரவிடியலை தரிசித்து மகிழும்! விடியல் விரைவாக வேண்டுமானால் தாங்கள் உயிரோடு வாழ்வது முக்கியம்!"

அல்-வாஸீர் மறுத்துப்பேசுவதால் பயனில்லை என்று உணர்ந்தார்.

"நல்லது. விரைவில் இடம்மாறுவது பற்றி யோசிக்கிறேன்."

என்றார்.

"வேறு இடம்செல்ல நினைக்கலாம். அல்-வாஸீர்! ஆகவே குறித்த திகதியில் தாக்குதல் முடியவேண்டும்."

என்றார் சங்கேத வார்த்தைகளில் மொசாட் அதிகாரி. கப்பலில் இருந்து 20 அதிரடிப்படை வீரர்களும் தரையிறங்க முன்னர் தொலைத்தொடர்பு கருவியில் வந்த உத்தரவு அது.

20 பேரும் 20 மைல் கடந்து ரியுனிசியா நாட்டில் இறங்கியபோது வானம் இருண்டு கிடந்தது.

20 பேரில் ஒருவன் தன் சகாவிடம் கேட்டான், "இதென்ன ரியுனிசியாவின் வானம் கறுப்புக்கொடி பிடிக்கிறதா?"

"இருக்கலாம். அல்-வாஸீர் கால்வைத்த பூமியல்லவா? இஸ்ரேலியர்களை வெறுக்கத் தான் செய்யும்!"

சொல்லிவைத்தது போல 'வோக்ஸ் வாகன்' வேன்கள் நான்கு வந்து அவர்கள் முன் நின்றன.

இருபது பேரையும் உள்வாங்கிக் கொண்டு நான்கு வேன்களும் சீறிக்கிளம்பின.

* *

அறிக்கை ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தார் அல்-வாஸீர். அதிலிருந்து சில குறிப்புக்களை எடுத்து தனது டயரியில் எழுதிவைத்துக்கொண்டார்.

தன்னைக் குறிவைத்து எதிரிகள் 20 பேர் நெருங்கிக்கொண்டிருப்பது தெரியாமல்- தனது உயிருக்கு வீசப்பட்ட வலை மிக அருகில் வந்துவிட்டது புரியாமல் அல்-வாஸீர் தனது கடிகாரத்தில் நேரம் பார்த்தார்.

அதிகாலை 12.55

அதே நேரம் வானில் ஒரு விமானம் செல்லும் ஓசை கேட்டது.

அல்-வாஸீரின் செவியிலும் அந்த ஓசை விழவே செய்தது. அவர் அதை வித்தியாச மாக நினைக்கவேயில்லை.

வானில் பறந்தது போயிங் 707. இஸ்ரேலிய விமானம்.

தரையில் நகர்ந்த அதிரடிப்படை வீரர்களுக்கு வானிலிருந்தே கட்டளைகள் வழங்கும் உத்தி.

வானொலியில் ஒலி மூலமான சமிக்ஞை கள் மூலமே கட்டளைகள் வந்துசேர்ந்துவிடும்.

'தொலைபேசி இணைப்புக்கள் அனைத் தையும் இயங்காமல் செய்துவிடுங்கள்.' கட்டளை வந்தது வானில் இருந்து.

இப்போது போயிங் 707 ரியுனிசிய வான் எல்லைக்கு வெளியே 100 மைல் தொலைவில் பறந்துகொண்டிருந்தது.

அங்கிருந்தே ஒலிச் சமிக்ஞை மூலம் "என்ன ஓகேயா?" என்று கேட்டார். விமானத்தைச் செலுத்திக்கொண்டிருந்த கமாண்டர் அவின்-பின்-நண்! மிகச் சிறந்த விமானி என்று பெயர் எடுத்தவர்.

"ஓ.கே..... அடுத்த கட்டம்?"

கீழே இருந்து தொலைத்தொடர்புக் கருவி அந்தக் கேள்வியை ஒலி வடிவில் கொண்டு சென்று கமாண்டரிடம் கொடுத்தது.

கமாண்டர் மிக முக்கியமான தனது உத்தரவை இப்போது பிறப்பித்தார்.

"தட்ஸ் குட், வீட்டை முற்றுகையிடுங்கள். கவனம் காவல் இருக்கலாம்!"


நேரம் அதிகாலை 1.10

12 அதிரடிப்படை வீரர்கள் பூனைபோல தங்கள் பாதங்களை மெல்ல வைத்து, முன்னே நீட்டிய இயந்திரத்துப்பாக்கிகளோடு வீட்டை முற்றுகையிட,

8 அதிரடிப்படை வீரர்கள் தாக்குதல் நடத்த வீட்டை நெருங்கிக்கொண்டிருந் தார்கள்.

நேரம் அதிகாலை 1.13.

அல்-வாஸீரின் வீட்டுத்தோட்டத்தை தாண்டும்போது, வீட்டுக்காவல்காரனின்



கண்கள் அவர்களைக் கவனித்துவிட்டன.

'நிச்சயமாக இவர்கள் எதிரிகள்தான்!' காவல்காரனுக்கு புரிந்துவிட்டது.

நேரடியாக எதிர்க்க முடியாது. பலர் இருக்கிறார்கள். துப்பாக்கிகள் வைத்திருக் கிறார்கள். அல்-வாஸீரிடம் ஓடிப்போய் சொல்ல வேண்டியதுதான்.

காவல்காரன் தீர்மானித்து ஒரு அடிகூட எடுத்துவைக்கவில்லை. பின்னால் இருந்து ஒரு வலிய கரம் அவன் கழுத்தைச்சுற்றி வளைத்துப் பிடித்தது. முன்னால் ஒருவன் துப்பாக்கியோடு தோன்றினான்.

டப்-டப்-டப்-

சைலன்சர் பொருத்திய துப்பாக்கி மெல்லிய சத்தத்தோடு காவல்காரனின் மார்பில் பொத்தல் போட்டது.

அலுவலக அறையிலிருந்த அல்-வாஸீருக்கு அந்த மெல்லிய சப்தம் செவியில் விழுந்துவிட்டது.

"என்ன வெளியே சப்தம்." கேட்டுக் கொண்டே வந்தபோது, அவர் மனைவியும்- பிள்ளைகளும் அவரோடு சேர்ந்து வாசலுக்கு வந்துவிட்டனர்.

நேரம் அதிகாலை 1.15.

வாசலுக்கு வந்த அல்-வாஸீரை 8 துப்பாக்கிகள் குறிபார்த்தன.

ஆனால்-உடனே சுடவில்லை. அருகில் மனைவி பிள்ளைகள்.

'குடும்பத்திற்கு ஒரு கீறலும் விழக் கூடாது' அதிகாரியின் உத்தரவு மனதில் எதிரொலித்தது. தாமதித்தார்கள்.

அல்-வாஸீருக்கு விபரீதம் புரிந்தது. தப்பிக்கொள்ளலாம். ஆனால் மனைவியும், பிள்ளைகளும் அருகில் நிற்கிறார்கள்.

நான் தப்பிக்கொண்டால் இவர்களைச் சுட்டு சல்லடைபோட்டுவிடுவார்கள்.

'வேண்டாம். என் புனித பூமியே உனக்காக வாழ்ந்தேன். உனக்காகவே அழிவேன். வீரனாகவே வீழ்வேன்.'

தன் மனைவியை பிடித்து பின்னால் நகர்த்திவிட்டு முன்னால் வந்தார். அல்-வாஸீர்.

சற்றும் தாமதிக்காமல் துப்பாக்கிகள் முழங்கின.

மொத்தம் 60 குண்டுகள். அத்தனை யும் வீர உடலில் விழுப்புண்களாய்!

52 வயதில் 60 குண்டுகள் தாங்கி புன்னகை யோடு உயிர்விட்டார் அல்-வாஸீர்.



அல்-வாஸீர்

கண் இமைக்கும் நேரத்தில் 20 அதிரடிப்படை வீரர்களும் தப்பிச் சென்றார்கள்.

செய்தி தீயாகப் பரவியது. ஓ..எங்கள் புனித யுத்தத்தின் தந்தையே கோழைக ளாய் எதிரிகள் தனியே உன்னை வேட்டையாடினரோ?

வீழ்ந்தது பொய்! எழுந்தது உன் உதிரத்தில் பாலஸ்தீன புனித யுத்தம் என்பதே மெய்!

உன் கையில் ஏந்திய ஆயுதம், உன் கரங்கள் காட்டிய இலக்கு, உன் உதடுகள் போதித்த தைரியம் அத்தனையும் எம்மிடம்!

பாலஸ்தீனர்கள் வெல்லும் ஒவ்வோர் களத்திலும் அபு-ஜிகாத் நீங்கள் எழுந்து வாழ்த்திச் சிரிப்பீர்கள்!

ஜிகாத்-ஜிகாத் அபு-ஜிகாத். ஜிகாத்-ஜிகாத்-அபு ஜிகாத்"

பாலஸ்தீன மக்கள் நெஞ்சில் உணர்ச் சிக் கடல் அலை மோதியது.

(முற்றும்)

# ஹலோ டாக்டர்

"வணக்கம் டாக்டர். இன்று சில உடல்ரீதியான தொழில் நுட்பக் கேள்விகள் கேட்கப்போகிறேன்."

"கேளுங்கள் முடிந்தால் சொல் கிறேன்."

"இந்த 'தால்' எல்லாம் வேண்டாம். உங்களால் முடியாதது எது? சத்தியமாக



ஐஸ் வைக்கவில்லை. இதய மாற்றுச் சிகிச்சை எல்லாம் காரில் என்ஜின் கழற்றி மாற்றுவதை விடவும் வேகமாகவும், வெற்றிகரமாகவும் நடக்கிறதல்லவா டாக்டர். அது பற்றி அறிய ஆவல்."

"சில ஆண்டுகளுக்கு முன் மிக கடினமாக இருந்த காரியம். இப்போது நீங்கள் சொல்வது மாதிரி கார் எஞ்சின் மாற்றுவதைவிட சுலபமாகிவிட்டது. ஆனால் செலவு மட்டும் அதிகம்."

"அதாவது டாக்டர் இதயமாற்று சிகிச்சைக்குப் பின்னர் நீங்கள் தரும் 'பில்' இதயத்தை நிறுத்திவிட்டாலும் 'நோ' ஆச்சரியம்"

"சிரிக்க வேண்டுமா நான். இதயத்தை எடுத்துவிட்டு வேறு இதயம் பொருத்த வேண்டுமானால் பொருத்தப்படும் இதயம் நோயாளியின் உடலுக்கு பொருத்தமாக இருக்க வேண்டும். உங்கள் வீட்டில் ரி.வி.இருக்கிறதா?"

"இருக்கிறது. படம் மட்டும் தெளிவாக தெரிய மாட்டேன் என்கிறது."

"திருத்த வேண்டும். திருத்தும் போது ஏதாவது உதிரிப்பாகத்தை மாற்றவேண்டி வரலாம்."

"அதற்காகத்தான் நான் திருத்தும் திட்டத்தையே ஒத்திப் போட்டிருக்கிறேன் டாக்டர்!"

"செலவு இருக்கட்டும். உங்கள் ரி.விக்கு தேவையான உதிரிப்பாகத்தை வேறு ரி.வியில் எடுத்துப் போடவேண்டுமானால் பொருத்த மாக இருக்க வேண்டும். ரி.வியில் பல ரகங்கள் இருக்கின்றன. ஒரு ரி.வி ரகத்துக்கு பொருத்தமானது இன்னொரு ரி.விக்கு பொருந்தாது. அப்படித்தான் மனிதர்களின் இதயமும்."

"பொருத்தமாக அமையவேண்டுமானால் எப்படி இருக்க வேண்டும் டாக்டர்?"

"வால்வு அமைப்பு, திசுக்கள் வகை, இரத்தவகை எல்லாம் ஒன்றாக இருக்க வேண்டும். அப்படியானால் தான் நோயாளி

## இதயமே இதயமே

யின் உடல் இதயத்தை ஏற்றுக் கொள்ளும். இதனால் தான் முதலில் மிருகங்களுக்கு இதய மாற்று சிகிச்சை செய்து பார்த்துவிட்டு, பின்னர் மனிதனுக்கு இதயமாற்றுச் சிகிச்சை செய்ய துணிந்தனர்.

"அந்த மருத்துவ அதிசயம் எப்போது நிகழ்ந்தது டாக்டர்?"

"1967 இல் மாற்று இருதயத்தை மனி தனுக்குப் பொருத்தி சாதனை படைத்தவர் கிறிஸ்டியன் பெர்னார்ட். தென் ஆபிரிக்கா வைச் சேர்ந்தவர்."



"இதயத்தை எப்படி திருடுவீர்கள். மன் னிக்க வேண்டும்.....எப்படி சேகரிப்பீர்கள் டாக்டர்?"

"இதயதானம் கொடுத்தவர் இறந்தவுடன் அவரது இதயத்தை மருத்துவ ரீதியாக சுத்தப்படுத்தப்பட்ட சாதனங்கள் மூலம் எடுத்து இரசாயன முறைப்படி சுத்தப்படுத் தப்பட்ட பொலித்தீன் பையில் வைத்து விடுவோம். 4 டிகிரி சென்டிகிரேட் வெப் பத்துடன் பாதுகாப்போம். மூன்று மணி நேரத்திற்குள் நோயாளியின் உடலில் பொருத்திவிட வேண்டும்."

"இதயம் என்றாலே உடனடியாக காதலி யின் நினைவுதான் வருகிறது. முறைக் காதீர்கள். மனைவி ஏன் காதலியாக இருக்கக் கூடாது?! என் இதயம் அவளுக்கும் அல்லது அவள் இதயம் எனக்கும் பொருந்துமா டாக்டர்?"

"பொருந்தும். இதயத்துக்கு ஆண், பெண் பேதமெல்லாம் கிடையாது. ஏற்கனவே நான் சொன்ன விதிமுறைகளின்படி பொருந்தி னால் போதும்."

"ஒரு தந்திரமான கேள்வி டாக்டர்; இளம் வயதில் உள்ளவரின் இதயத்தை வய தானவருக்கு பொருத்துவதாக வைத்துக் கொள்ளுங்கள். இளமை திரும்பிவிடுமா டாக்டர்?"

"திரும்பாது. உயிர் போவதை தடுக்கவே, இறந்தவரின் இதயம் வேறொருவருக்கு பொருத்தப்படுகிறது. உயிர் மட்டும் காக்கப் படும்."

"ரி.வி.உதிரிப்பாகம் பொருத்தும் போது இத்தனை வருசத்துக்கு உத்தரவாதம் என்று சொல்லித்தான் காசை எண்ணிவாங்கு கிறார்கள். மாற்றப்பட்ட இதயத்திற்கு பாவ்னைக் காலம் எவ்வளவு டாக்டர்?"

"குறைந்தது 5 வருடம் உத்தரவாதம்."

"கொஞ்சம் ஏமாந்தால் சிறுநீரகத்தை உருவி எடுக்கிறார்களாம். இதயத்தையும் திருடிவிடுவார்களோ என்று பயமாக இருக் கிறது டாக்டர். பயம் என்று சொல்லும் போதுதான் நினைவுக்கு வருகிறது என் நண்பன் ஒருவன் 'அந்த சமாச்சாரத்தை' நினைத்தாலே பயப்படுகிறான். என்ன செய்யலாம் டாக்டர்?

"உங்கள் நண்பனுக்கு திருமணமாகி விட்டதா?"

"இன்னும் இல்லை டாக்டர்"

"விடுங்கள் ,நேரம் வரும்போது அவரா கவே கற்றுக்கொள்ளுவார். ஒரு தகவலை மட்டும் உங்களுக்கு சொல்கிறேன்."

"சொல்லுங்கள் டாக்டர்?"

"செக்ஸ் என்பது நம் ஆதார உணர்ச் சிகளில் ஒன்று. ஈடுபாடு உள்ளவர்கள் சில நாட்களில் அல்லது சில மணி நேரங்களில் கற்றுக் கொண்டு கோல் போட்டுவிடுவார்கள் என்று உளவியல் நிபுணர்கள் சொல்லி யிருக்கிறார்கள்."

"அப்படியானால் என் நண்பனும்..... ஓ.கே.வருகிறேன் டாக்டர்."

# பெண்களாக மாறும் ஆண்கள்

## குறுக்கு வழியில் முன்னேற ஆசை



நம்பமுடியாதுதான், நடந்துதான் இருக்கிறது அந்தக் கொடுமை.

பிரேசில் நாட்டில் வறுமை, வேலை இல்லாத் திண்டாட்டம் தாண்டவமாடுகிறது. இதனால் இளைஞர்கள் விரத்தியின் விளிம்பில் நிற்கிறார்கள்.

பணம் சம்பாதிக்க என்ன செய்யலாம்? என்று யோசித்த இளைஞர்களுக்கு குறுக்கு வழி ஒன்று தென்பட்டது.

பெண்களாக மாறி விபச்சாரம் செய்வது தான் அந்த குறுக்கு வழி.

ஆண்களைப் பெண்களாக மாற்றிக் காட்டுகிறோம். அதுவும் அழகான பெண் களாக என்று சில டாக்டர்களும் முளைத் தார்கள். பாதிப்பேர் போலி டாக்டர்கள்.

பெண்களாக மாறவேண்டுமானால் 10 லிட்டர் திரவ சிலிக்கான் ஹார்மோனை உடலில் ஏற்ற வேண்டும் என்று கூறு கின்றனர். மனித உடலில் உள்ள இரத்தமே ஆறுலிட்டர்தான் வரும்.

உண்மையாகவே அறுவைச் சிகிச்சை செய்யும் டாக்டர்கள் உறுதியான சிலிக்கானை வார்த்து எடுத்து உடலில் வைப்பார்கள். அதனால் ஆபத்து ஏற்படாது. அழகான பெண் போல தோற்றம் கிடைக்கும். இதற்கு பணம் தண்ணீராய் பாய வேண்டும்.

பணம் இல்லாத இளைஞர்கள் என்ன செய்வார்கள். போலி டாக்டர் களிடம் செல்கிறார்கள். அவர்கள் திரவ சிலிக்கானை ஊசிமூலம் செலுத்து கிறார்கள். இதனால் இடம்தவறி உடலின் பாகங்கள் பெருத்து அசிங்கமாகிவிடும். தேவையற்ற இடங்கள் புடைத்துவிட்டால் வெளியே தலை காட்டவே முடியா தல்லவா.

இது தெரிந்தும் பல ஏழை இளை ஞர்கள் தங்களைப் பெண்ணாக மாற்றும்படி போலி டாக்டர்களிடம் படை எடுக்கிறார்கள். பெண்ணாக மாறும் ஆண்களுக்கு பயங்கர மவுசு என்பதுதான் பெரிய கொடுமை.

போலி டாக்டர்களால் ஏமாற்றப்பட்ட நூற்றுக்கணக்கான இளைஞர்கள் எதிர் காலம் இருண்டுபோய்கிடக்கிறார்கள் என்று பிரேசில் நாட்டு டாக்டர் 'புகா' என்பவர் கூறியிருக்கிறார். காலம் ரொம்பக் கெட்டுப்போச்சு.

## ரிலாக்ஸ்

வக்கீல்: கள்ள நோட்டு அச்சு அடிச் சவனுக்காக வாதாடினது தப்பாப் போச்சுது.
மற்றவர்: ஏன் என்னாச்சு?
வக்கீல்: எனக்குத் தர வேண்டிய பீஸையும் கள்ள நோட்டாவே தந்திட்டான்.

பாபு: அதோபோறாரே.... அவர் கூட நான் பேசறதே இல்ல.
கோபு: ஏன்?
பாபு: அவர் யாருன்னே எனக்குத் தெரியாதே..!



முதலாளி: ச்சே ட்ரைவரா வேலை பார்த்தவனைப் போய் ஹோட்டலில் வெயிட்டராப் போட்டது தப்பாப் போச்சு.
ஒருவர்: ஏன்?
முதலாளி: விசில் அடிச்சாத் தான் சாப்பாடே எடுத்துக் கொண்டு வாறான்.



வாரமலர் தினமுரசு
ஆக.20—26,1995

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# தகவல் பெட்டி



## என் குட்டி பொன் குட்டி


அம்மாக்களுக்கு பொறாமையா இருக்கலாம். தங்கள் பாசத்தை மிஞ்சிவிடுகிறதே சிம்பன்சி குரங்குத் தாயின் பாசம் என்று! காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு என்பது தெரியுமல்லவா. பொறாமையை விட்டுத் தள்ளுங்கள். மனிதர்கள் போலவே காதல், பாசம், காமம், குறும்பு அனைத்திலும் சின்பன்சிகள் வெளுத்துக் கட்டுகின்றன.

காலையில் காலாற நடப்பது உடலுக்கு நல்லது. நாய்ப் பிரியர்கள் நாயோடு நடப்பார்கள். நாய்க்கும் உறுதி நமக்கும் உறுதி என்ற நல்லெண்ணம். அமெரிக்காவில் பெரும் பணக்காரர் ஒருவருக்கு பொதுநலம் கொஞ்சம் அதிகம். தான் நடக்காவிட்டாலும் நாய் நடந்தால் போதும் என்று விலை உயர்ந்த B.M.W காரில் இருந்தபடி நாய்களை நடத்திச் செல்கிறார். இதை எப்படி அழைக்கலாம்? பணக்கார நாயபிமானி!

## மெல்ல நட மெல்ல நட மேனி பொன்னாகும்



## மேலேறிப் பாய்ச்சல்



செங்குத்தான மலை. சூழவும் ஆழமான ஏரி. மலை உச்சியில் இருந்து கரணமடித்து உலக சாதனை படைக்கத் துணிந்தார் ஜேம்ஸ் ஸ்ரீபன். "கரணம் தப்பினால் மரணம். வேண்டாம் விபரீதம்" என்று பலர் தடுத்தும் மேலேறிப் பாய்ச்சல் நடவடிக்கையில் இறங்கினார். விளைவு? பயப்படாதீர்கள், கச்சிதமான கரணம். உலக சாதனை படைத்துவிட்டார். ஏரிக்குள் இளம் பெண்கள் சற்று அதிகமாக காணப்பட்டதும் ஸ்ரீபனின் வெற்றிக்கு ஒரு காரணம் என்பது நம்பகமான தகவல். உற்றுப் பாருங்கள் உங்களுக்கும் உற்சாகம் வரக்கூடும்.

## பெரிய பூவிது பூத்தது

நித்தம் பூக்காத பூ இது. 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை மலர்ந்து சித்தம் வியக்கவைக்கும். உலகில் மிகப் பெரிய பூ வகைகளில் இதுவும் ஒன்று. இதன் விட்டம் மட்டும் 1.75 மீற்றர். உயரம் 1.8 மீற்றர். இந்தோனிசியாவில் உள்ள பூங்கா ஒன்றில் இது மலர்ந்தது. செய்தி பரவி மாபெரும் மலர் காண கூட்டம் திரண்டது. வண்டுகள் நெருங்கப் பயப்படுமோ தெரியவில்லை.



## சோகத்தில் ஒரு சுகம்



வெளிநாடுகள் என்றால் சொர்க்கம் என்று நம்மில்பலர் நினைத்துக் கொண்டிருக்கிறோம். தப்பு? அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் எடுக்கப்பட்ட படம் இது. வீடில்லாத் திண்டாட்டம். தெருவிலே வாழ்க்கை. கஷ்டமறியாத சிறுசுகள். தூங்க ஒரு இடம் போதும் அதுவே சுகம்.



படிப்பகம்

www.padippakam.com

# சினி விசிட்

## 'பிக்பொக்கட்' அமைச்சர்

அடித்தது 'பிக்பொக்கட்' அதனால் திரண்டது பணம். அவன் கவனம் திரும்பியது அரசியலில். அமைச்சரானான். பணம், பகட்டு, பந்தா வந்தது. முன்னாள் காதலியை மறந்தான். அவன்தான் சேதுபதி. இது படக்கதைச் சுருக்கம். படம், 'மக்கள் ஆட்சி' சேதுபதி ஆக நடிப்பது மம்முட்டி. அவரது காதலி ரோஜா. இயக்கம், ரோஜாவின் உண்மையான காதலர் ஆர்.கே.செல்வமணி. இந்திய சுதந்திர தினத்தன்று 'மக்கள் ஆட்சியை' திரையிட முடிவு செய்த செல்வமணியைப் பாராட்டலாம்.

ரஞ்சிதா, ஐஸ்வர்யா (ஒரே ஒரு நடனக்காட்சியில் மட்டும்) மன்சூரலிகான், ஆனந்தராஜ், அனுஜா ஆகியோரும் இருக்கிறார்கள்.

## 'காக்கைச் சிறகினிலே நந்தலாலா

'காக்கைச் சிறகினிலே நந்தலாலா' என்று பாரதியார் பாடல் ஒன்று இருக்கிறதல்லவா. காக்கைச் சிறகை வெட்டிவிட்டு 'நந்தலாலா' என்பதை எடுத்துப் பெயராக்கிவிட்டார்கள். கதாநாயகன், கதாநாயகி புதுமுகங்கள். முக்கிய வேடத்தில் ராதாரவி, அவரோடு மேலும் சில பழைய முகங்கள்; விவேக், சார்லி, காசன்கான், ஆகியோரும் நந்தலாலாவில் நடிக்கின்றனர்.

## முரளிக்கு[illegible] குழந்[illegible]


நடிகர் முரளிக்[illegible] பெயரில் மகளும், பெயரில் மகனு[illegible] இப்போது முரளி[illegible] ஷோப[illegible] கர்ப்பி[illegible] கிறார்[illegible] வெற்[illegible] மீடு இ[illegible]

## அமலாவின் குழந்தை கதாநாயகன்

நடிகை அமலா தெலுங்கு நடிகர் நாகார்ஜுனாவை மணந்து குழந்தையும் இருக்கிறது என்பது தெரியுமல்லவா. ஒரு வயதேயான அமலாவின் குழந்தையின் பெயர் அகில். குழந்தை படு சுட்டி. தந்தை நாகார்ஜுனா தயாரிக்கும் தெலுங்குப் படத்தில் கதாநாயகனாக நடிக்கிறான் ஒரு வயது அகில். குழந்தைகள் பற்றிய படமாம். அப்பாவும், அம்மாவும் நடிப்புச் சொல்லிக் கொடுக்கிறார்கள். 'மூட்' வந்தால் மட்டுமே கமரா முன் நடிக்கிறான் குழந்தை அகில்.



ராம்கி-ஊர்வசி
படம்: மாயா பஜார் 1995



கமல்-கவுதமி
படம்: குருதிப்புனல்

## பார்வை திரும்பலாம்

மீனா முன்பே ஒரு இந்திப் படத்தில் நடித்திருந்தார். அந்தப் படம் பப்படமானதால் இந்திப் படங்களுக்கு கும்பிடு போட்டுவிட்டார்.

இப்போது அர்ஜுன்-மீனா ஜோடி தமிழில் நடித்துவரும் 'செங்கோட்டை' படம் இந்தியிலும், தெலுங்கிலும் வெளியாகப் போகிறது. அதன் வெற்றி தோல்வியைப் பொறுத்து மீனாவின் பார்வை இந்திப் பக்கம் திரும்பும்.

## மினி சினி

* 'காந்தி பிறந்த மண்' படத்தைத் தொடர்ந்து சத்யராஜ் நடிக்கும் 'குங்குமப் பொட்டுக் கவுண்டர்' படத்தை இயக்கவிருக்கும் ஆர்.சுந்தரராஜன், விரைவில் பிரபு கதாநாயகனாக நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார்.
* தமிழில் 'நல்ல மனசுக்காரன்' 'சந்தனக்கருப்பன்' ஆகிய படங்களில் கதாநாயகியாக நடித்து வரும் ஜெயராகினி, மலையாளத்தில் 'டேர்னிங் பொயின்ட்' என்ற படத்தி[…] தெலுங்கில் 'மாயா மஹால்' என்ற படத்திலும் நடித்து வருகிறார்.
* இசையமைப்பாளர் எஸ். ஏ.ராஜ்குமார் தயாரித்த 'முதல் பாடல்' படத்தில் வில்[…] சேகர்,. தற்போது 'கலைக் கல்லூரி' என்னும் படமொன்றின் மூலம் இயக்குநர[…]
* கதாநாயகி மற்றும் பாடல்கள் எதுவுமின்றி மலையாளத்தில் வெளிவந்த 'ஆச்[…] தமிழில் 'மாயாண்டி ஐ.பி.எஸ்.' என்ற பெயரில் மொழிமாற்றப்படுகிறது. இப்படத்[…] சுரேஷ்கோபி நடித்துள்ளார்.
* உலக அழகி ஐஸ்வர்யா ராய் ஒரு இந்திப் படத்தில் நடிக்க சம்மதித்துள்ளார். இ[…] மிஸ் யூனிவேர்ஸ் சுஷ்மிதா சென்னும் இந்திப் படமொன்றில் நடிக்க இருக்கி[…] பிரபல இந்தி நடிகர் வினோத் கன்னா தயாரிக்கிறார்.
* இளையராஜாவின் சகோதரர் கங்கை அமரன் சொந்தமாகத் தயாரித்து இ[…] என்ற படத்தில் தனது மகன் பிரபுவை கதாநாயகனாக அறிமுகப்படுத்துகிறார். ஒரு பிரபு இருப்பதால் தனது மகனின் பெயரை வெங்கட் பிரபு என்று மா[…]
* தமிழில் வில்லனாக அறிமுகமாகி பின்னர் கதாநாயகனாகி மீண்டும் வில்லனா[…] சரண்ராஜ். இப்போது இவர் ஐந்து கன்னடப்படங்களில் கதாநாயகனாக நடி[…]
* 'அவதாரம்' படத்தை அடுத்து நாசர் இயக்கும் அடுத்த படத்தில் கார்த்[…] நடிக்கிறார். இந்தப் படத்தை இயக்குவதுடன் முக்கிய வேடம் ஒன்றிலும் நாசர்[…]
* சூப்பர் குட் ஃபிலிம்ஸ் ஆர்.பி. சௌத்ரி தயாரிப்பில், விஜய் கதாநாயகனாக நடிக்[…] படத்திற்கு 'பூவே உனக்காக' என்று பெயரிடப்பட்டுள்ளது.
* கடைசியாக ஒரு ஹொலிவூட் செய்தி: இந்தியாவின் பிரபல பெண் இயக்குநர[…] 'மிஸிஸிப்பி மசாலா' ஆகிய படங்களின் இயக்குநருமான மீரா நாயர், அடுத்து […] படத்தில் இந்தி நடிகை ரேகா நடிக்கவுள்ளார்.

## தாடியை எடுப்பாரா பிரபுதேவா?

பிரபுதேவா இப்போது பிரபல ஹீரோவாகிவிட்டார் ஹீரோவாகும் முன்னர் இருந்த தாடி மட்டும் அப்படியே இருக்கிறது. "தாடியை எடுக்கும் யோசனை இருக்கிறதா?" என்று கேட்டால் "நோ" என்று ஒரேயடியாக மறுப்பு வருகிறது. "தாடி எனக்கு ஒரு இலச்சினை மாதிரி. கொஞ்சக் காலம் போன பின்னர் வேண்டுமானால் எடுப்பது பற்றி ஆராயலாம். இன்னொரு விஷயம் தெரியுமோ? என் தாடியை ரசிக, ரசிகைகள் புகழ்ந்து கடிதம் போட்டுள்ளார்கள். தாங்களும் என் போல வளர்ப்பதாகவும் எழுதியிருக்கிறார்கள்" என்கிறார் பிரபுதேவா. "ரசிகைகள் எப்படி தாடி...?" என்று [illegible]டால், "அவர்கள் வர்ணித்திருக்கிறார்கள்" என்கிறார். அதுதானே!

## முகப்பில்

ராம்கி-ஊர்வசி
படம்:மாயா பஜார் 95

## யுவராணியின் வெட்கம்

'பசும்பொன்' படத்தில் நாக்கால் மூக்கைத் தொட முடியுமா என்று யுவராணி கேட்டுத்திரியும் காட்சி வந்தாலும் வந்தது யுவராணிக்கு ரசிகர்கள் தொல்லை தீர்ந்த பாடில்லை.

சமீபத்தில் ஒரு குறும்புக்கார ரசிகர் தமது கடிதத்தில் "டியர் யுவராணி, என் நாக்கால் உங்கள் மூக்கைத் தொடலாமா?" என்று கேட்டிருந்தாராம். குப்பென்று முகம் சிவந்து பேசச் சாம் யுவராணிக்கு.



விஜய்-காயத்திரி
படம் ராஜாவின் பார்வையிலே

## கலாட்டாக் காதல்

பாரதிராஜாவின் முகாமிலிருந்து வந்துள்ளவர் என்ற முத்திரைதான் ஜெயப்பிரகாஷின் பலம். யார் ஜெயப்பிரகாஷ் 'சாதிசனம்' என்னும் படத்தின் இயக்குநர். அமர்க்களமான காதல் கலாட்டாக்களோடு படத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார். மருத்துவ மாணவர்களை சுற்றிவரும் கதை என்பதால் மாணவர்களின் ஜாலியான சம்பவங்களுக்கு பஞ்சமிருக்காது.

## ஒட்டிக்கொள்ளும் விஜய்

தனது படத்தில் ஜோடியாக நடிக்கும் நடிகையோடு பிசின் போல ஒட்டிக் கொள்வார் விஜய். அதனால் தனது அடுத்த படத்திலும் சான்ஸ் வாங்கிக் கொடுத்துவிடுவார். தேவா படத்தில் விஜய் ஜோடியாக நடித்தவர் சுவாதி. தற்போது வெளியாகவுள்ள வசந்த வாசல் படத்திலும் விஜய் ஜோடி சுவாதிதான். 'சந்திரலேகா' படத்தில் விஜய் ஜோடியாக நடித்துவருகிறார் வனிதா விஜயகுமார். அவருக்கு மீண்டும் ஒரு படத்தில் விஜய் ஜோடியாக நடிக்கும் வாய்ப்புக் கிடைக்குமா? அது வனிதாவின் சாமர்த்தியத்தைப் பொறுத்தது.



பாண்டியராஜன்-வினய்பிரசாத்
படம்: தாய்க்குலமே தாய்க்குலமே



படிப்பகம்

www.padippakam.com

# ...மூன்று ...நகள்

...திவ்யா என்ற
...விஜய் என்ற
... உள்ளனர்.
...ின் மனைவி
... நிறைமாதக்
...ணியாக இருக்
... மூன்றாவது
...ரமான வெளி
...ாத இறுதிக்குள்.

# காதோடு சொல்லுகிறோம்

'கௌ' நடிகையின் முகத்தில் மீண்டும் பழைய மினுமினுப்பு. மூன்றெழுத்து 'க' நடிகருடன் நடித்துள்ள படம் விரைவில் வெளியாகப்போகும் குஷிதான் மினுமினுவுக்குக் காரணமாம். பம்பாயில் 'கௌ' நடிகை கைக்குள் போட்டுக்கொண்ட ஹீரோ ஒருவர் அங்கிருந்து சென்னைக்கு 'போன்' எடுத்து அழைத்துக்கொண்டிருக்கிறாராம். இரண்டு தோணியில் கால்வைத்துக்கொண்டிருக்கிறார் நடிகை.

'பம்பாய்' புகழ் மனியான நடிகை சென்னை வந்தபோது ஐந்துநட்சத்திர விடுதியில் தான் தங்கியிருந்தார். நடிகையின் நடவடிக்கை பற்றி கதைகதையாகக் கூறுகிறார்கள் விடுதி நிர்வாகத்தினர். மாலையானால் மயக்கம்தானாம். பிரபல தயாரிப்பாளர் ஒருவரோடு உற்சாக பானம் பரிமாறி ஜாலியாக இருந்தாராம் 'மனி' நடிகை. என்றெல்லாம் நிறையத் தகவல்கள் சொல்கிறார்கள்.

'வி' என்ற எழுத்தோடு பெயர் ஆரம்பிக்கும் இளம் கதாநாயகன் ஜோடிகளோடு ஜாலியாகச் சுற்றுகிறாராம். நீச்சல் தடாகம் ஒன்றில் பிரியப்பட்ட நடிகை ஒருவரோடு நீச்சல் அடித்ததுதான் லேட்டஸ்ட் தகவல்.

"அறிமுகப்படுத்திவிட்டு கண்டுகொள்ளாமல் இருக்கிறீர்களே நியாயமா?" என்று இயக்குநர் இமயத்திடம் குழைந்தாராம் 'சுக' என்று பெயர் ஆரம்பிக்கும் நடிகை. கசிந்துபோன இயக்குநர் தமது சகோதரர் மூலம் வாய்ப்பு வழங்கிவிட்டாராம்.

பம்பாய் நியூஸ்

## 300ஐ தாண்டி விட்டது

தமிழ்நாட்டின் தலைநகரான சிங்காரச் சென்னையில் தமிழ் படங்கள் 50 நாள் ஓடுவது படு கஷ்டமாகிவிட்டது. ஒரே மாதிரியான படங்களைப் பார்த்து ரசிகர்களுக்கு புளித்துவிட்டது. தமிழ் படங்களை எல்லாம் ஓரம் தள்ளிவிட்டு ஒரு இந்தி படம் 300 நாட்களைத் தாண்டி ஓடிக் கொண்டிருக்கிறது. 300 நாட்களின் பின்னரும் கூட்டம் அதிகரித்து வருகிறது. வசூலை குவிக்கும் அந்த இந்திப் படம் 'ஹம் ஆப்கே ஹைகோன்' சல்மான்கான், மாதுரி தீக்ஷித் நடித்த படம்.

## அல்வா தரப்போகிறார் விஜயகாந்த்
### சறுக்கியும்-பறந்தும்-அடிதடி தான்!

விஜயகாந்தின் உயிர் நண்பர் அ.செ.இப்ராகிம் ராவுத்தர். அவர் தயாரித்து விஜயகாந்த் நடித்த படங்கள் பிரமாண்டமாக அமைந்தன. இப்போது பழைய பிரமாண்டங்களையெல்லாம் தூக்கிச் சாப்பிடுவது போல மகாபிரமாண்டமான படம் ஒன்றை ஆரம்பித்துவிட்டார்.

படத்தின் பெயர் 'தாயகம்.' விஜயகாந்த் கதாநாயகன். ஜோடி ரஞ்சிதா. காஷ்மீர் தீவிரவாதிகளால் விமானம் ஒன்று கடத்தப்படுகிறது. குண்டு வைத்து தகர்க்கப் போகிறோம் என்று தீவிரவாதிகள் மிரட்டுகிறார்கள். அவ பயணிகளை மீட்கப் புறப்படுகிறார் விஜயகாந்த். அவரோடு நெப்போலியன், அருண்பாண்டியன் ஆகியோரும் சேர்ந்துகொள்கிறார்கள். வில்லன் மன்சூர் அலிகான். மற்றொரு வில்லன் காசன்கான். பாரசூட்டில் பறந்து செல்வது, பனிக்கட்டிகளில் சறுக்கியபடி சண்டை போடுவது என்று தனது ரசிகர்களுக்கு 'அல்வா' தந்து இனிக்க வைக்கப்போகிறார் விஜயகாந்த்.

திரைப்படக் கல்லூரி மாணவர்களுக்கும் விஜயகாந்த்துக்கும் ஒரு ராசி. 'தாயகம்' படத்தை இயக்கப் போவதும் திரைப்படக் கல்லூரி மாணவர்தான். பெயர்: ஏ.ஆர்.ரமேஷ். இசை: தேவா. ஒளிப்பதிவு: ராஜராஜன். விஜயகாந்த்-விஜயசாந்தி ஜோடியாக நடிக்க 'தாயகம்' என்னும் பெயரில் படமெடுக்க முன்பு திட்டமிடப் பட்டதல்லவா. அது கைவிடப்பட்டதால், அந்த பெயரை மட்டும் எடுத்துக் கொண்டார்கள். படப்பிடிப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன.



சரத்குமார்-நக்மா
படம்: ரகசிய போலீஸ்

...ும்,

...னாக நடித்த
...கிறார்.

...யன்' என்ற படம்
...ல் கதாநாயகனாக

...வரைத் தொடர்ந்து
...ார். இப்படத்தைப்

...கும் 'பூஞ்சோலை'
...மிழில் ஏற்கனவே
... வைத்துள்ளார்.

...நடித்து வருகிறார்
...து வருகிறார்.

... கதாநாயகனாக
...டிக்கவிருக்கிறார்.

... விக்ரமன் இயக்கும்

..., 'சலாம் பாம்பே'
...யக்கும் ஹொலிவூட்

# 'சிக்'கென்று இருக்க சிகிச்சை

வினிதா இடுப்பை, இடுப்பைப் பார்க்கிறார். பின்னர் யோசிக்கிறார். மீண்டும் இடுப்பைப் பார்க்கிறார். அதொன்றுமில்லை. இடுப்பில் சதை போட்டுவிட்டதாம். குளோசப்பில் கமரா வரும் போது ரசிகர்களது மனம் நொந்து விடுமே என்றுதான் கவலை. விரைவில் வெளிநாட்டுக்குப் பறந்துபோய் 'சிக்' கென்ற இடை பெற சிகிச்சை செய்யப் போகிறாராம். தொடர்ந்து சினிமாவில் நிலைத்து கைநிறைய சம்பாதிக்க வேண்டுமானால் கையளவு என்னும்படி இருக்க வேண்டுமாம் இடை.



ஷொட் 2

நம்ரதா சிரோத்கர்

ஷொட் 1

நம்ரதா சிரோத்கர்

# சினிமாவுக்கு மட்டும் புதுசு

இந்தியிலும் அக்கா - தங்கை நடிகைகள் இருக்கிறார்கள். அந்த வரிசையில் புதிதாக இடம் பிடிப்பவர் நம்ரதா ஷிரோத்கர். (மஞ்சள் உடையோடு நிற்கிறார் அல்லவா அவர்தான்) நம்ரதா ஷிரோத்கர் மிஸ் இந்தியா பட்டமும் பெற்றிருக்கிறார். இந்தியில் கவர்ச்சியால் தூள் கிளப்பி வரும் ஷில்பா ஷிரோத்கரின் இரத்தத்தின் இரத்தம், உடன் பிறந்த சகோதரிதான் நம்ரதா ஷிரோத்கர். சினிமாவில் நடிப்பதுதான் புதுசு. கமராவுக்கு முன் நடிப்பது பழசு என்கிறார் நம்ரதா. மொடலிங் செய்த அனுபவம் இருக்கிறதாம். (படத்தைப் பார்த்தாலே தெரிகிறதல்லவா) இனி நம்ரதா பம்பாய் படவுலகை என்ன பாடு படுத்தப்போகிறாரோ?

# மாமன் மகளில் என்ன இரகசியம்?

சத்யராஜ் ஜோடியாக மீனா நடிக்கும் 'மாமன் மகள்' படப்பிடிப்புக்கள் முதல் கட்டம் பூர்த்தியாகிவிட்டது. "மாமன் மகள் படத்தில் உங்கள் பாத்திரம் என்ன?" என்று மீனாவிடம் கேட்டால், "நான் சொல்ல மாட்டேன், ஒரு வார்த்தை சொன்னாலும் கதை தெரிந்துவிடும்." என்கிறார் மீனா.

'முத்து' படத்தில் மீண்டும் ரஜினி ஜோடியாக நடிப்பதில் படு சந்தோஷம் மீனாவுக்கு.

"ஷில்பா ஷெட்டி, நக்மா, மனிஷா போன்ற பம்பாய் வரவுகளால் பாதிப்பா?" என்று மீனாவிடம் கேட்டுப்பாருங்கள், முகம் சிவந்து விடுகிறது. "அதென்ன இந்தக் கேள்வியை எல்லோரும் என்னிடம் கேட்கிறீர்கள். நான் ஏதாவது சொன்னால் அதை வைத்து வம்பு கிளப்பும் நோக்கம் தானே? பதில் சொல்ல மாட்டேன்." என்று ஜாக்கிரதையாக பேசுகிறார் மீனா.

பெண்: பாக்கு மரச் சோலையிலே
பன பனக்கும் பாளையிலே
பறந்து பறந்து குருவியெல்லாம்
என்ன பின்னுது?

ஆண்: அது வாழ்க்கைதனை உணர்ந்துவிட்டு
மனசும் மனசும் கலந்துவிட்டு
மூக்கினாலே கொத்திக் கொத்தி
கூடு பின்னுது!

இருவர்: இத்தனையும் நம்மைப் போல
இன்பம் தேடுது-இதை
எண்ணும் போது நமது மனம்
எங்கோ போகுது!

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்





நம்பியார்-ரேவதி
படம்: தொட்டாச்சிணுங்கி

# வெளியூருக்கு பறந்த ரஜினி

ரஜினிகாந்த் வீடும், தமிழக முதல்வர் ஜெயலலிதா வீடும் ஒரே ஏரியாவில்தான் இருக்கின்றன. வம்பே அதுதான். ரஜினி வீட்டுக்கு முன்பாக திரளும் ரசிகர்கள் "தலைவா ஆணையிடு" என்று கோஷம்போட்டால் அது ஜெயலலிதா வீட்டுக்கு கேட்டுவிடும். அம்மா கடுப்பாகிவிடுவார்.

சமீபத்தில் ஒரு ரஜினி ரசிகர் தனது தொடையில் கத்தியால் குத்தி, வழிந்த இரத்தத்தோடு அம்மாவை கிழிக்கத் தொடங்கிவிட்டார். இதனைக் கண்ட ரஜினி 'அப்செட்' ஆகிவிட்டாராம். அன்று இரவு ஆந்திர மாநில தலைநகரான ஹைதராபாத்துக்கு பறந்துவிட்டார்.

'ரஜினிகாந்தை உசுப்பிவிடாதீர்கள். உசுப்பிவிட்டால் நஷ்டம் நமக்குத்தான்' என்று அம்மாவுக்கு அவரது நெருங்கிய வட்டாரம் 'அட்வைஸ்' பண்ணியிருக்கிறதாம்.

# நல்ல சகுன வசனம்!

ராஜ்கிரணும், வனிதா விஜயகுமாரும் நடிக்கும் 'மாணிக்கம்' படம் வேகமாக வளர்ந்து வருகிறது. 'எல்லாமே என் ராசாதான்' வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருப்பதால் ராஜ்கிரணின் அடுத்த படத்தையும் சூட்டோடு வெளியிட திட்டமிட்டுள்ளார் தயாரிப்பாளர்.

வனிதாவிடம், "ஏழை காத்த அம்மன் அருளால் நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம்" என்று ராஜ்கிரண் சொல்லும் வசனம்தான் முதன் முதலில் காட்சியாக்கப்பட்டது. நல்ல சகுன வசனத்தோடு படப்பிடிப்பை ஆரம்பிப்பது வழக்கம். பின்னர் ...ந்த வசனத்தோடு உள்ள காட்சி படத்தின் இடைநடுவில் கூட வரலாம்.



படிப்பகம்

www.padippakam.com



# லேடீஸ் ஸ்பெஷல்

## அழகும் — அழகும் சேர்ந்தால்

### பேரழகு என்று அர்த்தம்

* முகம்தான் அழகைப் பிரதிபலிக்கும் கண்ணாடி. முகத்தை அடிக்கடி 'பிளிச்' செய்து 'பளிச்' சென வைத்துக்கொள்ள வேண்டும்.
* வாரம் ஒரு முறை ஆவி பிடிப்பதால் முகத்தில் உள்ள அழுக்குகள் வெளியேறி முகம் சுத்தமாகும்.
* நீங்கள் கறுப்புநிறம் என்றால் சந்தனக் கலர் பவுடரையே பூசுங்கள். வெள்ளை நிறப் பவுடரைப் பயன்படுத்தாதீர்கள்.
* நீளமான கழுத்துள்ளவர்கள் சிறிய பென்டன் கொண்ட சங்கிலியும், சிறிய தோடும் அணிந்தால் அழகாக இருக்கும்.
* எப்போதும் லேசான லிப்ஸ்டிக்குடன் இருப்பது நல்லது.
* பாலில் கடலைமாவைப் போட்டுக்கலந்து, உடலில் பூசி சிறுது நேரம் ஊற வைத்துக் குளித்தால் மேனி மினுமினுப்பை அடையும்.
* உடல் பருக்காமலும், மிகவும் மெலியா மலும் இருக்க வேண்டுமானால், அதிக காரம், புளிப்பு, உப்பு சேர்க்கக்கூடாது.
* தினமும் ஏதாவது யோகாசனப் பயிற்சி கள் செய்து வந்தால் உடலழகைப் பாதுகாக்கலாம். மேனி பளபளப்பு அடைய சர்வாசனம் செய்ய வேண்டும்.
* ஓட்ஸ் தூளுடன் தயிரைக் கலந்து முகத்தில் தேய்த்துக் கழுவி வந்தால் முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் மறைந்துவிடும்.
* கண்களைச் சுற்றி வெள்ளரிக்காய் துண்டுகளை வைத்து 15 நிமிடம் கட்டிப் பிறகு முகம் கழுவி வந்தால், கண்களைச் சுற்றியுள்ள கருவளையம் மறைந்துவிடும்.
* தினமும் வெந்நீரில் குளித்தால் சதை தொங்கிவிடும். எனவே கடைசியில் கொஞ்சம் குளிர்ந்த நீரில் குளிக்க வேண்டும்.
* திடீரென உடலில் சுளுக்கு, 'விக்கம்' ஏற்படுகிறதா? பூண்டுச்சாறு எடுத்து அதைத் தேங்காய் எண்ணெயுடன் கலந்து தேய்த்தால் சரியாகி விடும்.
* மஞ்சளைச் சுடுபடுத்தி, பிறகு பொடி யாக்கி அதை உப்புடன் கலந்து தினமும் பல் துலக்கினால் வாய் துர்நாற்றம் மறைந்துவிடும்.
* தினமும் காலையில் எழுந்ததும் பல் துலக்கி விட்டு ஒரு டம்ளர் குளிர்ந்த தண்ணீர் குடித்துப் பாருங்களேன். ஜீரண உறுப்புக்கள் நன்றாக வேலை செய்யும்.
* பாலேடு மற்றும் எலுமிச்சம்பழச்சாற்றை முகத்தில் தேய்த்துப் பிறகு வெந்நீரால் முகத்தைக் கழுவி வந்தால் முகம் பளபளப்பாகப் பொலிவு பெறும்.
* ஒரு நாளைக்கு 8 டம்ளர் தண்ணீர் குடித்தால் உடல் உள்ளுறுப்புக்கள் சுத்தமாகும்.



## குழந்தைகளின் வளர்ச்சிப் பட்டியல்

| ஆண் குழந்தை | | | பெண் குழந்தை | | |
|---|---|---|---|---|---|
| மாதம் | உயரம் (செ.மீ) | எடை (கிலோ) | மாதம் | உயரம் (செ.மீ) | எடை (கிலோ) |
| 01 | 47.5 | 3.1 | 01 | 47.00 | 3.0 |
| 02 | 50.6 | 3.8 | 02 | 50.00 | 3.7 |
| 03 | 56.8 | 5.2 | 03 | 56.00 | 5.1 |
| 04 | 58.8 | 5.8 | 04 | 57.90 | 5.2 |
| 05 | 60.8 | 6.4 | 05 | 59.80 | 6.1 |
| 06 | 62.8 | 7.0 | 06 | 61.70 | 6.6 |
| 07 | 64.5 | 7.4 | 07 | 63.40 | 7.1 |
| 08 | 66.2 | 7.8 | 08 | 65.10 | 7.5 |
| 09 | 68.9 | 8.0 | 09 | 66.80 | 7.7 |
| 10 | 70.2 | 8.2 | 10 | 68.10 | 7.9 |
| 11 | 71.5 | 8.4 | 11 | 69.40 | 8.1 |
| 12 | 72.8 | 8.6 | 12 | 70.70 | 8.3 |

## காதலர்களே! கவலைப் படாதீர் காதலர்களே!

### 40 ஆயிரம் பொலிஸ் இருக்கப் பயமேன்?



"காதலர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படும். 40 ஆயிரம் பொலிசார் இருக்கிறார்கள். காதலர்களை மிரட்டும் நபர்களை அவர்கள் கவனித்துக்கொள் வார்கள். ஆகவே, காதலர்கள் யாவருக்கும் நான் சொல்லிக் கொள்வது யாதெனில், காதலர்கள் பூங்காக்களில் சந்தித்து இனிமை யாகப் பொழுதைப் போக்கலாம். இடையூறு இருக்காது. தடையும் இருக்காது."

இப்படியெல்லாம் சொல்லியிருப்பவர் ஒரு பொலிஸ் அதிகாரி.

"வாழ்க அந்த அதிகாரி" என்று கோஷம் போடும் நம் நாட்டுக் காதலர்களுக்கு ஒரு கசப்பான செய்தி: அந்த பொலிஸ் அதிகாரி இருப்பது இங்கேயல்ல; இந்தியாவில் உள்ள கல்கத்தாவில்.

கல்கத்தா பொலிஸ் கமிஷனர் துஷார் தாலுக்தாருக்கு காதலர்களிடம் இருந்து ஏகப்பட்ட புகார்கள் பறந்தன.

"எங்கள் 'மூட்' கெடுக்கப்படுகிறது. எல்லாம் உங்கள் பொலிஸ்காரர்களால்தான். பூங்காக்களில் சந்தோசமாக இருக்கும் எங்களை மிரட்டிப் பணம் பறிக்கிறார்கள். இது நியாயமா? நீங்களும் இளம் வாலிபராக இருந்தவர்தானே" என்ற ரகத்தில் புகார்கள் இருக்க, உடனே மேற்கண்ட அறிவிப்பை வெளியிட்டு விட்டார் பொலிஸ் கமிஷனர்.

கல்கத்தா பொலிஸ் கமிஷனரின் இந்த அறிவிப்பை இலண்டனில் இருந்து வெளி வரும் 'டெய்லி டெலிகிராப்' பத்திரிகை வெளியிட்டு உள்ளது.

"காதல் என்பது ஒரு அரிய அனுபவம். காதலர்களுக்கு தேவை நிம்மதி. காதலர்களை தீய சக்திகள் தொல்லைப்படுத்த அனுமதி யோம்"

என்றும் சூளுரைத்துள்ளார் பொலிஸ் கமிஷனர்.

அது மட்டுமா? காதலர்களை மிரட்டும் காவலர்களைக் கண்காணிக்கவும் ஒரு பிரிவை அமைத்துள்ளாராம் கமிஷனர். காதலர்களின் வாக்குகள் யாவும் கல்கத்தா கமிஷனருக்கே. (ம் ஹூம் இவரைப் போல இரண்டு பேர்.. வேண்டாம் இவரே போதும் இளசுகளைக் கெடுக்க என்று தாத்தா அல்லது பாட்டி முணு முணுப்பது கேட்கிறதல்லவா?)

## அதிகமில்லை கொஞ்சம்தான்

### உறவுகள் உங்கள் பக்கம்தான்!

உறவுகள் உங்களை வாழ்த்தவும், அயலவர்கள், நண்பர்கள் போற்றவும் நீங்கள் கடைப்பிடிக்க வேண்டியவை அதிகமில்லை; கொஞ்சம்தான். அவை இதோ:

வீட்டிற்கு வருபவர்களை வாங்க என்று வரவேற்று உட்காரச் சொல்வது, தன்னைத் தேடி வந்தவர்களை என்ன விஷயமாக வந்திருக்கிறீர்கள்? என்று கேட்டு, அவர் களைப் பேச வைத்துக் கவனமாகக் கேட்பது.

இரவில் உடனே படுத்துத் தூங்கி விடு வதும், அதிகாலையில் எழுந்து கொள்வதும், பேச்சில் நிதானமும், இனிமையும் குறையா மல் பார்த்துக்கொள்வது, முகத்தில் சிறிய புன்னகை ஒன்றை எப்போதும் பெற்றிருப் பது, அநாவசியமாக அடுத்தவர்களைப்பற்றி அரட்டை அடிக்காமல் இருப்பது, வம்பு பேசாமலிருப்பது பார்ப்பவர்கள் அரு வருப்புக் கொள்ளும்படி சாப்பிடாமல், நாசூக் காக அழகாகச் சாப்பிடும் வழக்கம் பெற்றிருப்பது, எதற்கெடுத்தாலும் சண்டை போடாமல் சுமூகமாகப் பேசுவது.

வேலைக்காரர்களிடமும், தன்கீழ் பணி புரிபவர்களிடமும் கண்டிப்பை மட்டுமே காட்டாமல் கனிவையும் காட்டுவது.

'தன்னால் மட்டுமே முடியும்' என்று பெருமை கொள்ளாமல், 'இது என்ன பிரமாதம்,' என்பது போலப் பணிந்து போவது, பொய் பேசாமல் இருப்பது, அளவுக்கதிகமாகப் பேசுவதைத் தவிர்ப்பது, சிறிய செயல்களானாலும், உடனே அதைச் செய்தவருக்குப் பாராட்டுச் சொல்வது.

யாரைப் பற்றியும் தவறாக நினைக்காமல் இருப்பது, மற்றவர் கூறும் வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுப்பது, தங்களுடைய தவறு களை ஒத்துக்கொள்வது.

இந்தப் பழக்கங்களையெல்லாம் சின்ன வயதிலிருந்தே பழக்கப் படுத்தி விட்டால் பெரியவர்களாகும்போது பிரச்சனைகள் இருக்காது.




## சுகமான தூக்கம் தேவையா?

கோடையில் பெரும்பாலானவர்கள் நன்றாகத் தூங்க முடியாமல் அவதிப் படுவார்கள். என்னதான் மின்விசிறி காற்றை அள்ளி வீசினாலும், இயற்கையாக ஏற்படும் புழுக்கமும், வியர்வையும் பாடாய்ப்படுத்தி விடும். அதில் இருந்து தப்பி சுகமாகத் தூங்க வேண்டுமானால், படுக்கைக்குச் செல்லும் முன் குளித்தால் போதும். வெது வெதுப்பான நீரில் குளித்து விட்டுப் படுக்கைக்குச் சென்றால், மூளைப்பகுதியில் உள்ள இரத்தம் உடலின் வேறு பகுதிகளுக்குச் சென்று நம் உடல் நரம்புகளை அப்படியே அமைதிப்படுத்தும். இதனால் ஆனந்தமாகத் தூங்கலாம்.

சிலருக்கு வெய்யிலில் கொஞ்ச நேரம் அலைந்தாலும் போதும். தலைவலி, உடல் வலி போன்றவை ஏற்படும். அப்படிப் பட்டவர்கள் குளிர்ந்த நீரில் குளிக்க வேண்டும். அல்லது ஐஸ்கட்டி மூலம் ஒத்தடம் கொடுக்கலாம்.



## நகைகளைக் கவனிக்க

தங்க நகைகளை பொலிஷ் போட கொடுக்கும்போது மத்தியஸ்த எடை போட்டுப் பார்த்துக்கொண்டு கொடுப்பதே இரு தரப் பினருக்கும் நல்லது.

வீட்டிலேயே நகைகளை மெருகூட்டிடச் செய்யவும் முடியும். மாதம் ஒரு முறை சவர்க்காரம் போட்டுக் கழுவி வைத்தால் போதும். எண்ணை இறங்கி இருந்தால் வேண்டுமானால் கடைகளில் கொடுக்கலாம்.

நகைகள் வாங்கும்போது கல் அதிகம் பதிக்காதவற்றை வாங்குவது நல்லது. மறுமதிப்பீட்டிற்கு அவை உதவும். நெக்லஸ் போன்றவற்றை வாங்கும்போது பொடி இல்லாமல் கெட்டி திம்மையுள்ளவற்றை வாங்கவேண்டும்.

நகைகள் வாங்கும் நாள், அணிந்திருக்கும் நாள் இரண்டுமே பரவசமானவை, ஆனாலும் பதட்டமின்றி உணர்வு வயப்படாமல் அறிவுபூர்வமாக அந்த வேளைகளில் செயற்பட்டால், மறந்து எங்காவது வைப்பது, காணாமல் போவது போன்றவற்றைத் தவிர்க்கலாம்.

### பாதங்கள் பதமாகும்

பெண்களின் பாதங்களில் பித்த வெடிப்பு ஏற்பட்டு அது நிரந்தரமாக ஆகி விட்டால் பாதங்களின் அழகே கெட்டு விடும். அதனால், என்ன காரணத்தால் பெண்களின் பாதங்களில் பித்த வெடிப்பு தோன்றியிருந்தாலும் உடனே அதனை அகற்றிக் கொள்ள வேண்டும். காலையில் வெது வெதுப்பான வெந்நீரில் உங்கள் பாதங்களை சிறிது நேரம் வைத்திருங்கள். பிறகு ஒரு தேக்கரண்டி கிளிசரின், ஒரு தேக்கரண்டி பன்னீர், இரண்டு தேக்கரண்டி அளவு எலுமிச்சம் பழச்சாறு ஆகிய இந்த மூன்றையும் ஒன்றாகக் கலந்து வெந்நீரில் நனைத்த பாதங்களின் வெடிப்பு உள்ள பகுதியில் பூச வேண்டும்.

### இப்போது அனுப்பி வைக்கலாம்

கடந்த 25 வாரங்களாக 'லேடீஸ் ஸ்பெஷல்' பகுதியில் வெளியான பரிசுக் கூப்பன்களைப் பத்திரப்படுத்தி வைத் திருக்கிறீர்களா?

ஆம், என்றால் அந்த 25 கூப்பன்களை யும் ஒன்றாகச் சேர்த்து 4×9 அளவுள்ள கடித உறையில் வைத்து, உங்கள் பெயர், முகவரி ஆகியவற்றைத் தெளிவாக எழுதி அனுப்பி வையுங்கள்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

பரிசுப் போட்டி
தினமுரசு வாரமலர்
த.பெ.இல 1772
கொழும்பு.

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி- 02 செப்டெம்பர் 1995.

## அழகியிடம் மூன்று கேள்விகள்

உலக அழகிப் போட்டிகளில் பங் கெடுக்க எத்தனை விதமான ஒத்திகைகள் செய்ய வேண்டும் என்பதை கடந்த வாரம் விளக்கியிருந்தோம். "இத்தனை வேலைப் பாடுகளா? அடேங்கப்பா!" என்று வாசகிகள் பலர்வியந்து போனீர்களல்லவா?

இம் முறை அழகிப் போட்டியில் மற்றொரு கட்டம்.

உடல் அழகு மட்டும் இருந்தால் போதாது; மூளையிலும் கொஞ்சம் மசாலா இருக்க வேண்டும் என்பது அழகிப் போட்டிகளின் விதிகளில் ஒன்று.

ஆகவே, அழகிப் போட்டி நடுவர்கள் உடல் அழகுக்கு புள்ளிகளைப் போட்டுக் கொண்டே சில கேள்விகளை அள்ளி விடுவார்கள். சட்டு புட்டு என்று சம யோசிதமாகப் பதில் சொன்னால் வெற்றி தான்.

95ம் ஆண்டுக்கான உலக அழகிப் போட்டியில் இரண்டாம் இடத்தை எட்டிப் பிடித்தவர் இந்திய அழகி மான்பிரீத். அவரிடம் கேட்ட கேள்விகளுக்கு அவர் டான், டான் என்று சொன்ன பதில்கள்:

**நடுவர்:** உங்கள் மீது மற்றவர்கள் மிளகாய் அரைக்க விடுவீர்களா?

**மான்பிரீத்:** (சற்றும் தாமதியாமல்) நான் குனிந்து முதுகைக் காட்டினால்தானே அப்படிச் செய்வார்கள். நான்தான் குனியவே மாட்டேனே.



**நடுவர்:** பெண்களின் உரிமை பற்றிய முடிவை எடுக்கும் பொறுப்பு தங்களிடம் இருந்தால் என்ன செய்வீர்கள்?

**மான்பிரீத்:** பெண்கள் தங்கள் விருப் பத்துக்கு ஏற்ப வாழ்க்கையை அமைத்துக் கொள்ள அனுமதிப்பேன். அம்மா, மனைவி, அக்கா, தங்கை என்று வாழமட்டும் பெண்கள் பிறப்பெடுக்கவில்லை.

**நடுவர்:** உங்களை வர்ணம் தீட்டச் சொன்னால், எந்த வர்ணம் தீட்டுவீர்கள்?

**மான்பிரீத்:** வெள்ளை வர்ணம். காரணம்: அது பல வர்ணங்களின் கலவையாயிற்றே.

இவ்வளவு தான் கேள்விகளும் பதில் களும். மான்பிரீத்துக்கு இரண்டாவது இடம் கிடைத்தது.

## "அதையெல்லாம் நான் எழுதவில்லை!"

### கவிஞர் வாலியின் வாக்குமூலம்

விகாரமான பாடல்களை எழுதுகிறார் கள் என்ற குற்றச்சாட்டில் சிக்கியிருப்ப வர்களில் ஒருவர் கவிஞர் வாலி.



தமிழக சஞ்சிகை ஒன்றில் தனது மனதைத் திறந்து அதிர்ச்சியான தகவல்களை கொட்டியிருக்கிறார் கவிஞர் வாலி. நீங்களும் அதை அறிய வேண்டாமா? அறியலாமே!

"சக்கரை வள்ளிக் கிழங்கு சமைஞ்சது எப்படி?"

என்று ஓர் ஆபாசமான பாட்டை நான் எழுதிவிட்டேனென்று - இந்தப் பாட்டைத் தலைப்பாக வைத்து ஏகப்பட்ட பட்டிமன்றங் கள் நாட்டில் நடந்து விட்டன.

ஆனால், இப்போது நான் உண்மையைச் சொல்லுகிறேன்.

இந்தப் பாட்டின் பல்லவியையும், சரணத்திலுள்ள பெரும்பாலான வரிகளையும் பட இயக்குநர் பவித்ரனும், அவரது உதவி இயக்குநர் ஷங்கரும் சேர்ந்து எழுதி வைத்திருந் தார்கள்.

என்னை அழைத்து பாட்டை ஒழுங்கு செய்து தாளத்திற்குள் வருமாறு சீர்படுத்தச் சொன்னார்கள். நான் செய்து கொடுத்தேன்.

இதை நான் செய்ய மறுத்திருந்தால் இன்னொரு கவிஞர் எவரையேனும் அழைத்து இந்தக் காரியத்தை அவர்கள் செய்து முடித்திருப்பார்கள்.

எனக்குப் பொருள் நஷ்டம் ஏற்பட்டி ருக்கும். ஆகவே இது போன்ற பாடல் களுக்கெல்லாம் நான் 'பினாமி'யாக செயல்பட வேண்டியதாகி விட்டது.

'சிக்கு புக்கு ரயிலே'

என்னும் பாட்டை-ஆரம்பத்தில் ஒரு சின்னஞ் சிறு பையன் பெண்ணைப் பார்த்துப் பாடுவதாகப் படத்தில் வருகிறது. இப்படி ஒரு சின்னப் பையன் பாடப் போவதாக என்னிடம் சொல்லப்படவுமில்லை.

வயது வந்த வாலிபர்கள் பாடுவ தாகத்தான் என்னிடம் சொல்லி, பாட்டை எழுதி வாங்கினார்கள்.

பிறகு அதனை சின்னப் பொடியன் பாடுவதாகத் தீர்மானித்தது எல்லாம் அந்தப் பட இயக்குநரின் வக்கிர சிந்தனையே தவிர, என்னுடைய நோக்கம் அப்படியல்ல.

ஆனால், இப்படிப் பச்சைக் குருத் துக்கள் பாடுவதாக எழுதி சின்னஞ் சிறார் களை நான் தவறான பாதைக்கு அழைத்துச் செல்கிறேன் என்று மாதர் சங்கங்கள் சில என்மீது குற்றம் சாட்டின.

இதற்கெல்லாம் காரணம் என்னவென் றால் - பாட்டைப் பொறுத்தவரையில் எந்த மாற்றம் செய்வதானாலும், அல்லது வேறு கோணத்தில் அதைப் படமெடுப்பது என்று தீர்மானித்தாலும் பாட்டு எழுதுபவரைக் கலந்து ஒப்புதல் பெறுகின்ற நாகரிகமான காரியத்தை இந்நாளில் எவருமே செய்வ தில்லை.

அந்நாளில் அப்படியல்ல; கவிஞர் களைக் கேட்காமல் இசையமைப்பாளரோ, இயக்குநரோ பிள்ளையார் சுழியைக் கூட மாற்ற மாட்டார்கள்.

இவ்வாறு வாக்குமூலம் தந்திருக்கிறார் வாலி.

இனிய வாய்ப்பு-காத்திருக்கிறது இன்ப அதிர்ச்சி

தினமுரசு — அம்மன் ஜுவலர்ஸ்
இணைந்து வழங்கும்
— தங்க நகை —
-பரிசுப் போட்டி-

முதற் பரிசு தங்கமாலை (நெக்லஸ்)

• வழக்கம் போல-இதுவும் மகளிர் மட்டுமே பங்குகொள்ளும் போட்டி.
• போட்டி பற்றிய விபரங்களோடு அடுத்த வாரம் முதல் பரிசுக் கூப்பன் வெளியாகப் போகிறது.



தயாராக இருங்கள் வாசகர்களே!



படிப்பகம்

www.padippakam.com

# தேன் கிண்ணம்





## இதுதான் யாழ்ப்பாணம்!

வானைத் தொடத் துடிக்கும்
விஞ்ஞான ஏவுகணைகளாய்
பனைகள் புடைத்து நிற்கும்!

திசைமாறிய 'செல்'லொன்று
உச்சிப்பனையில்
உரசிவிட்டுப் போகும்!

இழவு வீடாய்
வாழ்க்கை ஊரும்!

மூழ்கிய 'டோறா'வின் திணிவாய்
மனம் தாழ்ந்து கனக்கும்!

கால் கிலோ கோதுமை கிடைத்தால்
உள்ளத்தில் ஒரு கிலோ
வீரம் பிறக்கும்!

உதயத்தின் உச்சத்தில் ஒலிக்கும்
உன்னத வார்த்தைகளாய்
ஆங்காங்கே 'போரம்மா' காது கிழிக்கும்.

வீதியில் பூக்கும்
சீருடை ரோஜாக்கள்
பெண்மையின் அடையாளங்களை
மூடிமறைத்து முறுவலிக்கும்!

கந்தக நெடியில் குளித்த
மரங்கள்
சவுக்குமரச் சாலைகள்!

சல்லடையாக்கப்பட்ட
புல்வெளிகள்!

நிலவை மட்டும்
உரசிப் பறக்கலாம்
உலோகப் பறவைகள்!

இன்னும்
......

எல்லாம் இழந்தும்
ஏதோ ஒன்று இழக்காத வாழ்க்கை!

**ஆரணி**

## நிலா காயுது

நீரோடையில் மீன் நீந்துது
வான் வீதியில் நிலா காயுது
மலர் சோலையில் வண்டாடுது
மழைகண்டுதான் மயில் ஆடுது
அடி கண்மணியே உன்னை எண்ணி
என் மனம் இங்கே திண்டாடுது!

கார்த்திகை மாசத்திலே
கடைசி தேதியிலே
கடிதம் ஒன்று போட்டு வைத்தாய்
கண்ணா என்றும் மன்னா என்றும்
கண்ணே நீ அதிலே கவிதைகளை
தூவி வைத்தாய்!

கவிதைகளை பூவாக்கி
காதலையே நூலாக்கி
மாலை ஒன்று கட்டி வைத்தேன்!
அதில் உன் நாமத்தையும் ஒட்டி வைத்தேன்!
கட்டிவைத்த மாலை கருகிவிடும் முன்னே
வந்து விடுவேன் நானே வாசமலர் தேனே...!

**ஷியாமா ஸாஹிர்-தர்கா நகர்**

## என் தாமரை மூஞ்சிக்காரிக்கு...

கிளிக்குஞ்சு நீ சொகமா?
மணிக்கணக்கா மடலெழுத
மச்சானுக்கேது நேரம்...?
தாமரைப் பூ மூஞ்சிக்காரி!
சாமரம்தான் ஒம் பார்வை.

ராத்திரியில் ஒன் நெனப்பு
சிக்குதடி தொண்டைக்குள்ள
கதவு நில மேல வந்து
சாஞ்சி நிற்கும் ஒய்யாரம்
சாமத்திலும் கிள்ளுதடி!

தக்காளிதான் ஒம் பார்வை..!
கடுந் தேன்தான் ஒன் உதடு..!
கருங் குழவி கொட்டியதாய்
கடுக்குதடி உன் பிரிவு!

ஒன் நெனப்பில் உருகி நானும்
மெழுகுவர்த்தி போலானேன்!
ஓடி வந்து பார்ப்பதற்கும்
ஒரு வழியும் இல்லயடி

பொல்லாத உன்னூரார்
பொடிவைத்து பேசுவது
பொறுக்குதில்ல என் மனசு!
ஜேம்பழ உதட்டுக்காரி
விருப்பத்த சொல்லிவிடு!

இங்கிருக்கும் என் உசிரு
மெல்ல மெல்ல சாகிறது
அங்கிருந்து ஒருவரியில்
மடலெழுதிப் போடுபுள்ள!

**கன்னியா**

## எதுவும் செய்யாதே



நீ....
சிரிக்காதே...
உன் கன்னக்குழிக்குள்
நான் காணாமல் போகின்றேன்!

நீ
கண்ணசைக்காதே...
நான் கவிதை
எழுத முடியாது
கலங்கிப் போவேன்!

கோபம் கொள்ளாதே...
சூரிய கதிர்கள்
களைவை இழக்கின்றன!

நீ
இரவில் வராதே...
நிலவை திருடிவிட்டோம்
என்று
நினைத்து விடுவார்கள்!

நீ
நடை பயிலாதே..!
படம் போட்டு
பரதக்கலை படிப்பார்கள்!

மறந்தும் கதைத்து விடாதே...
பேசும் கிளி என்று
பிடித்து வைத்து
விடுவார்கள்!

பெண்ணே...!
என் இதயத்திற்குள்ளேயே
இரு...
நான் கவிப் பூக்களால்
அர்ச்சிப்பேன்!

**ஜெயந்தி ஜெய்சங்கர்-கொழும்பு-13**

## வெந்து கிடத்தல்

எந்த
நியாயங்களுக்காக
நீ...
என்னை காயப்படுத்தினாய்?

உன் ஆன்மாவை
இருட்டாக்கிய போதுதான்
வார்த்தைகள் கூட
வறுமையானதே...!

நீ இல்லாத வெறுமைகளால்
என் ஆத்மா...
அழுது புரண்டது...!

நீ தந்து போன
ஞாபக நெருப்பில்
என் உயிர் பதறிக்கிடப்பதை
பார்த்தாயா...?

உன் எண்ணங்களில்
தாகித்துப் போன
என்...
உடலும்; உயிரும்...
வெந்து வடிகிறது.
உன்...
பிரிவு வெப்பத்தில்....!

**அக்கரையூர்-சாபிறா.ஏ.மஜீத்**

## தேடல்

மாலையின் மங்கிய இருட்டில்
வழமைபோல்
உன்னைத்தேடி ஆட்கள் வந்தார்கள்!
நீயும் வழமையான
அவசரத்துடன் புறப்பட்டாய்!

துடிக்கும் நெஞ்சை
ஒரு கையால் தடவிக் கொண்டு
நடுங்கும் மறுகையால்
மெதுவாக உன் கையைத் தொட்டேன்!

நீயோ
வழமைக்கு மாறாக
முகத்தை விறைப்பற்று வைத்திருந்தாய்..!
புன்சிரிப்புடன் சொன்னாய்...!

"அவர்களும் எங்களைப்போல்தான்
அம்மா! போய் வாறேன்" என்றாய்!

உனக்கு பெரியகாரியம் எதுவுமில்லை
என்ற எண்ணத்தில்
வாசலிலேயே அனுப்பிவிட்டு
அமைதியாக நானும் தூங்கப்போய்விட்டேன்!

விடிந்தது...
வீட்டில் நீ இல்லை..!
நீ வருவாய் என்று
மாலை இருட்டையும்
மங்களமாய் வரவேற்றேன்..!
நீ வரவில்லை!





வீதி வீதியாய் ஓடி
இரகசியமாய் தேடினேன்!
கெஞ்சலாய்..
அழுகையாய்....
ஆத்திரமாய்...
உன் நண்பர்களைக் கேட்டேன்!
"வருவான்" என்றார்கள்!
பனங்கூடலுக்குள் அந்த மண்பிட்டி..
அதில் நடு இரவுவரை காத்திருந்தேன்!
நீ வரவில்லை!

காண்பவரிடம் கேட்டேன்!
நீ வருவாயா?
வருவாய் - வருவாய் என்றார்கள்!
ஆண்டுகள் ஓடி மறைந்தன.

மண்பிட்டி கரைந்துவிட்டது!
என் தடுமாறிய கால்களிடையே
எலும்புத் துண்டுகள் !
இறுதியாக சொன்னார்கள்–
அது உன் எலும்புதான் என்று

ஆனால்...
இன்னும் நான் உன்னைத் தேடிக்கொண்டிருக்கிறேன்
உன்னை மண்ணில் புதைத்தோம் என்று
செய்தவர்கள் சொல்லவில்லை மகனே...!
அதனால் இன்னும்
நான் உன்னைத் தேடிக்கொண்டிருக்கிறேன்–
மகனே நீ வருவாயா?

**மைத்ரேயி**

## நானே வரைகின்றேன்

கண்ணும் கண்ணும்
கொள்ளையடித்தால்
காதல்
என்று
அர்த்தமாம்!
கொள்ளை
கொண்ட காதலை
கண்கள் சந்தித்தால்
என்ன பதில்?
▫▫
சிலையை
வடிக்கும்
சிற்பியை கூட
சித்தனாக்கினால்
செம்படவன் கூட
மீன் வேட்டையை
நிறுத்திட
மாட்டானா?
▫▫
சங்கமமாகாத
இரு
காதல்
கட்சிகள் சங்கமிக்கும் போது
சங்கத்தின்
சாசனத்தை
காப்பது யார்?
▫▫
முட்டைக்கு
முட்டை
குட்டு போட்டால்
குஞ்சுகளின்
தவிப்புக்கு
இடம்
தான்
ஏது?
▫▫
என்
வதனமே
உன் மூச்சுக்களை
முன்னுரையாக்கி
வந்துவிடு
நானே
என் புத்தகத்துக்கு
முடிவுரை
வரைகின்றேன்.

**எட்டியாந்தோட்ட பர்ஹான்**



## நீங்காத நினைவுகள்



உதிக்கின்ற நிலவுக்கும்
ஓய்வுண்டு ஒரு நாளில்;
உதிக்கின்ற நினைவுக்கு
ஒரு நாளும் ஓய்வில்லை!

மணக்கின்ற மலருக்கும்
மறு நாளில் மடிவுண்டு;
மணக்கின்ற உறவுக்கு
மடிவில்லை ஒரு நாளும்!

நிரம்பி விடும் ஏரிக்கும்
நீர் வற்றும் கோடை எனில்;
நிரம்பி விட்ட நினைவுக்கு
நீர் உண்டு இருவிழியில்!

ஆலயத்து கதவுகளும்
அடைபடலாம் சில நேரம்;
ஆ! லயித்த மனக்கதவு
அடை படுவதென் நாளோ!

**யோ. விஜேந்திரன்-மட்/மண்டபத்தடி**

## கத்தரித்த கடி ஜோக்ஸ்

மனைவி: ஷேர்ட்டைக் காணம்னு சமையலறையில் வந்து தேடறீங்களே.....?
கணவர்: புதுசா எதாவது பாத்திரங்கள் இருக்கான்னு பார்க்கிறேன்.



"கையை நீட்டுங்க சந்தனம் தடவுறேன்"
"எதுக்கு?"
"நீங்க லஞ்சம் தந்ததுக்கு அடையாளம். மற்ற ஊழியர்கள் உங்களை தொந்தரவு பண்ண மாட்டாங்க"



"இரவு திருடிட்டு போனவன் தொழிலுக்கு புதுசுன்னு நினைக்கிறேன்"
"எப்படிச் சொல்றீங்க?"
"பீரோவுக்கு முன்னாலே தேங்காய், பூ, பழம், கற்பூரம் எல்லாம் இருக்குதே."



"பொண்ணு குழந்தை மாதிரினு தரகர் சொன்னது உண்மை ஆயிடுச்சு."
"என்னாச்சு?"
"முதல் இரவில் அவளைக் கிள்ளினேன். அவ என்னோட 'கா' விட்டுவிட்டு தனியா படுத்திட்டா"
- - -
"டாக்டர் ஏன் சோகமா இருக்கிறாரு?"
"இருந்த ஒரேயொரு நோயாளியையும் நர்ஸ் கூட்டிக்கிட்டு போயிட்டாங்களாம்."

# இந்த வாரம் உங்கள் பலன்

(20.08.95 முதல் 26.08.95 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| சிம்மம் | - சூரியன், புதன், வெள்ளி |
| கன்னி | - செவ்வாய் |
| துலாம் | - இராகு |
| விருட்சிகம் | - வியாழன் |
| கும்பம் | - சனி |
| மேடம் | - கேது |

★ சந்திரன்-இடபம், மிதுனம், கர்க்கடகம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார். ★

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் நிலை மந்தம், பணவிரயம். | மு.ப. 9 மணி |
| திங்கள்-வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| புதன்- இனசன விரோதம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, பணச் செலவு. | பி.ப. 2 மணி |
| சனி- உயர்ந்த நிலை, பொருள் இலாபம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் விரயம், காரிய சித்தி. | மு.ப. 9 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்-அந்நியர் உதவி, பொருள் வரவு. | காலை 6 மணி |
| புதன்- பயனற்ற செயல், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், உறவினர் உதவி. | காலை 6 மணி |
| வெள்ளி- தொழில் கேடு, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| சனி- பணக்கஷ்டம், மனக்கலக்கம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | காலை 8 மணி |
| திங்கள்- பொருள் வரவு, காரிய சித்தி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், மனப்பயம். | மு.ப. 9 மணி |
| புதன்- அந்நியர் உதவி, தொழில் சிறப்பு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, முயற்சி மேன்மை. | காலை 6 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| சனி- தொழில் சிறப்பு, கௌரவம். | மு.ப. 9 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, பொருள் வரவு.. | பகல் 12 மணி |
| செவ்வாய்- பயனற்ற செயல், கௌரவம். | காலை 8 மணி |
| புதன்- பெரியோர் உதவி, மனக்கலக்கம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- உறவினர் உதவி, மனமகிழ்சி. | காலை 7 மணி |
| வெள்ளி- தேகசுகம் பாதிப்பு, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| சனி- வீண்குறை கேட்டல், மனப்பயம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் விரயம், காரியத்தடை. | காலை 6 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்-பொருள்வரவு, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| புதன்- அந்நியர் நட்பு, கௌரவம். | பகல் 12 மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | மு.ப. 9 மணி |
| வெள்ளி-தொழில் உயர்ச்சி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, மனப்பயம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள் புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் நட்டம், மனக்கலக்கம். | காலை 7 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, கௌரவக் குறைவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- அந்நியர் நட்பு, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| வியாழன்- உறவினர் கலகம், பணச் செலவு. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- பயனற்ற செயல், பெரியோர் உதவி. | பகல் 12 மணி |
| சனி- தொழில் சிறப்பு, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 3

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியானுகூலம். | மு.ப. 9 மணி |
| திங்கள்- காரிய சித்தி, பொருள்வரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்-பெரியோர் உதவி, முயற்சி பலிதம். | காலை 8 மணி |
| புதன்- தொழில்நிலை மந்தம், பணச்செலவு. | பி.ப. 1 மணி |
| வியாழன்-வீண் மனஸ்தாபம், கௌரவக் குறைவு. | காலை 6 மணி |
| வெள்ளி-புதிய முயற்சி, அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம் -8

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- அந்நியர் உதவி, தொழில் விருத்தி. | காலை 7 மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்-உயர்ந்த நிலை, வெளியிட வாழ்க்கை. | மு.ப. 9 மணி |
| புதன்- புதிய முயற்சி, மனக்கலக்கம். | பகல் 12 மணி |
| வியாழன்- இனசன விரோதம், பயனற்ற செயல். | மு.ப. 9 மணி |
| வெள்ளி- அந்நியர் சகவாசம், தொழில் நிலைமந்தம். | மு.ப. 10 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-7

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | மு.ப. 9 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், பயனற்ற செயல். | பி.ப. 2 மணி |
| புதன்- காரிய சித்தி, பொருள் வரவு. | காலை 7 மணி |
| வியாழன்- அந்நியர் நட்பு, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| வெள்ளி-வீண் மனஸ்தாபம், பெரியோர் உதவி. | மு.ப. 9 மணி |
| சனி- எதிர்பார்த்த நன்மை, பணச்செலவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம் -7

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில்நிலை மந்தம், பணச்செலவு. | காலை 6 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, மனக்கவலை. | பி.ப. 1 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், கௌரவம். | காலை 8 மணி |
| வியாழன்- தொழில் கேடு, பணக்கஷ்டம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- காரிய சித்தி, பொருள்வரவு. | பகல் 12 மணி |
| சனி- மனமகிழ்ச்சி, வீண் சந்தேகம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-2

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, மனக்கவலை. | பகல் 12 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, வெளியிட வாழ்க்கை. | காலை 6 மணி |
| செவ்வாய்- இனசன விரோதம், பயனற்ற செயல். | பி.ப. 2 மணி |
| புதன்- அந்நியர் பகை, கௌரவக் குறைவு. | காலை 7 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 6 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |
| சனி- காரிய சித்தி, பணக்கஷ்டம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 1

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)


| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, பணத்தட்டுப்பாடு. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்-வெளியிட வாழ்க்கை, பயனுள்ள செயல். | காலை 7 மணி |
| புதன்- முயற்சி பலிதம், வீண் மனஸ்தாபம். | பகல் 12 மணி |
| வியாழன்- தொழில்நிலை மந்தம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| வெள்ளி- அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| சனி- செலவு மிகுதி, பணக்கஷ்டம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-6


படிப்பகம்

www.padippakam.com





### ஆளும் அறிவுமாய் வளமுறவே

கூடி வாழணும் குழந்தைகளே
கோடி கோடியாய் நலமுறவே!
ஆடிப்பாடணும் குழந்தைகளே
ஆளும் அறிவுமாய் வளமுறவே!

நாளும் ஓங்கிடும் அறிவியலில்
நாமும் ஓங்கவே முனைந்திடுவோம்!
சூழும் போர்களைத் தவிர்த்திடுவோம்
தூய அன்பிலே நனைந்திடுவோம்!

துணிவு கொண்டு தான் உலகினிலே
துயரக் கொடுமைகள் அழித்திடுவோம்
பணிவு கொண்டுதான் உயர்வடைவோம்
பாரில் உயர்ந்து நாம் நிலைத்திடுவோம்!

காணும் பேதமே கழித்திடுவோம்
கனிவாய் ஒற்றுமை கூட்டிடுவோம்
பேணும் நல்வழி வகுத்திடுவோம்
பெருமைச் செயல்களைப் பெருக்கிடுவோம்!

வே. இளந்தமிழன்.

பெரிதினும் பெரிது கேள்
பேய்களுக்கு அஞ்சேல்
பொய்மை இகழ்
போர்த்தொழில் பழகு
மந்திரம் வலிமை
சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறு கதை

# தொழிலே தெய்வம்



கந்தன் என்னும் ஒருவன் இருந்தான். கோரைப் புற்களைக் கொண்டு பாய் முடைந்து, அவைகளை விற்றுப் பிழைப்பு நடத்தி வந்தான். அவன் செய்யும் பாய்கள் நல்ல தரமுடையவையாகவும், சிறப்பாகவும் இருக்கும். அத்துடன் பாயில் பூ வேலைகளையும், பட்சிகளின் உருவங்களையும் வடிவமைப்பதில் கைதேர்ந்திருந்தான். அவனின் கைவண்ணத்தையும், கலை நேர்த்தியையும் அனைவரும் பாராட்டினார்கள்.

அவ்வூரில் பொன்னன் என்னும் ஒருவனும் இருந்தான். அவன் கந்தனைப் போலவே இளைஞன். ஆனால் கந்தனைப் போல் உழைப்பாளி அல்ல. உழைக்காமலே வாழ வேண்டும் என்று எண்ணுபவன்.

கந்தனிடம் பாய் வாங்க வருகின்றவர்கள் அவன் கைவண்ணத்தைப் பாராட்டுவார்கள். அவன் சொல்லுகின்ற விலைக்கே பாயை வாங்குவார்கள்.

அதையெல்லாம் பார்த்துக்கொண்டும், கேட்டுக்கொண்டும் இருப்பான் பொன்னன். அவன் மனதில் போட்டியும், பொறாமையும் எழும். ஒரு முறை பொன்னன், கந்தனிடம் வந்து,

"நீ என்னமோ உலகில் எவரும் முடையாத பாயை முடைந்து விட்டதாக உன்னை 'ஆகா, ஓகோ' என்று புகழ்கிறார்கள். உன்னைவிடத் திறமைசாலிகள் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். இருந்துபார் உன்னைவிட அருமையான, அழகான பாய்களைச் செய்து காட்டுகிறேன்," என்று சொல்லி விட்டுச் சென்றான்.

பொன்னனுக்கு வேறு வேலை ஒன்றும் தெரியாது. இருந்த இடத்திலேயே பாய் முடைந்து விற்றுப் பிழைப்பை நடத்தும் கந்தனைப் போல் தானும் பாய் முடைந்து விற்றுப் பிழைக்கலாம் என்று எண்ணினான். காட்டிற்குச் சென்று கோரைப் புற்களை அறுத்துவந்து பாய் முடைய முற்பட்டான் பொன்னன். கோரைப் புற்களைக் கொண்டு எப்படிப் பாய் முடைய வேண்டும் என்பதை அறியாத அவனால் ஒரு பாய்கூடப் பின்ன முடியவில்லை.

கந்தனால் எப்படிச் சுலபமாக இந்த வேலையைச் செய்ய முடிகிறது என்பதைப் பார்க்க அவனிடம் சென்றான் பொன்னன்.

அப்பொழுது கந்தன் மிகவும் அழகான பாய் ஒன்றை முடைந்து கொண்டிருந்தான். அதைப்பார்த்த பொன்னன்,

"கந்தா! நீ எப்படி இந்த வேலைகளைச் செய்கிறாய்?"

என்று கேட்டான்.

"நான் செய்து கொண்டிருப்பதை நீதான் பார்த்துக்கொண்டு இருக்கிறாயே" என்றான் கந்தன்.

"இது சிரமமான வேலையா?" என்று கேட்டான் பொன்னன்.

"இல்லையே," என்றான் கந்தன்.

"உன்னைப் போல் நானும் செய்ய முடியுமா?" என்றான் பொன்னன்.

"ஓ செய்ய முடியுமே" என்று பதிலளித்தான் கந்தன்.

"செய்து பார்த்தேன்; முடியவில்லை. கோரைப்புற்கள் தான் வீணானது. என்னால் ஒரு பாய்கூட செய்ய முடியாமல் போய்விட்டது." என்றான் பொன்னன்.

"நீ ஏன் இந்தத் தொழிலைச் செய்ய விரும்புகின்றாய் பொன்னா?" என்று கேட்டான் கந்தன்.

"எனக்கு வருமானம் வருவதற்காக இதைச் செய்ய விரும்பினேன். அத்துடன் நீ செய்கிற இந்த வேலைக்கு உழைப்பு அதிகமாகத் தேவையில்லைப் போல் இருந்தது." என்றான் பொன்னன்.

"இத்தொழிலின் மீது அடிப்படையாக உனக்கு ஒரு ஆசையோ, ஆர்வமோ இல்லையா பொன்னா?"

"இல்லை" என்றான் பொன்னன்.

"அப்படி என்றால் இத்தொழிலைக் கற்று நீ வேலை செய்து கொண்டிருக்கும் போது, இதைவிட உழைப்புக் குறைவான வேலை கிடைத்தால் என்ன செய்வாய்?" என்று கேட்டான் கந்தன்.

"இதை அப்படியே விட்டு விட்டு வேறு தொழிலுக்குப் போய்விடுவேன்." என்றான் பொன்னன்.


"அப்படியானால் இந்தத் தொழிலைச் செய்ய முடியாது," என்றான் கந்தன்.

"ஏன்?" என்று கேட்டான் பொன்னன்.

"ஏதாவது ஒரு தொழிலை பணம் சம்பாதிக்க ஒவ்வொருவரும் செய்தாக வேண்டும். ஆனால், எந்தத் தொழிலில் ஈடுபட்டாலும் அந்தத் தொழிலின்மீது ஆர்வமும், விருப்பமும் இருக்க வேண்டும். செய்கிற தொழிலைத் தெய்வமாக மதிக்க வேண்டும். பொறுமையுடன் வஞ்சனையின்றி உழைக்க வேண்டும். நாம் செய்யும் தொழிலில் முன்னேற வேண்டும் என்ற எண்ணமும், அதற்காக அல்லும் பகலும் உழைக்கின்ற மன உறுதியும் வேண்டும். அவ்வாறெல்லாம் இருந்தால் தான் நாம் செய்யும் தொழில் சிறப்பாக இருக்கும். நான்கு பேர்கள் நம்மைப் பாராட்டும்படி நடந்து கொள்ள முடியும்" என்றான் கந்தன்.

அவன் சொன்னவைகள் எல்லாம் உண்மை என்று புரிந்து கொண்ட பொன்னன், எதிலும் முழு மனதுடன் ஈடுபடாததே தன் தோல்விக்குக் காரணம் என்று உணர்ந்தான்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 26.08.1995.
வர்ணம் தீட்டும் போட்டி இல: 104
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 101

பரிசுக்குரியவர்:
ந. சுஜிகரன்
இந்துக்கல்லூரி, வாழைச்சேனை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| செல்வன் ஜே. தினேஸ்<br>பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, கொழும்பு-04. | ஏ. சுந்தியா<br>மாத்தளை. |
| எப். பாத்திமா புஷ்ரா<br>சென். அந்தோனி பாலிகா வித், கொட்டாஞ்சேனை. | எஸ். யோகிதா<br>கொ/கணபதி வித். கொழும்பு. |
| எஸ். சுகந்தி<br>வெள்ளவத்தை. | என். பாத்திமா நஸ்ரியா<br>அல் ஹிலால் மகா வித், மூதூர்-01. |
| எஸ். அர்ஜுனா ஜெயகுமாரன்<br>கொழும்பு இந்துக்கல்லூரி, இரத்மலானை. | எஸ்.எம்.ஏ. பாத்திமா ஹுசைனா<br>மட்/அறபா வித். ஏறாவூர்-03. |
| எம்.எம்.பாத்திமா ஷம்லா<br>ஸாஹிறா மத்திய கல்லூரி, மாவனல்லை. | ஏ.எல். ஜெனஸானா<br>மடவளை பஸார். |

## விடுகதைகளும் விடைகளும்

01. ஆயிரம் கண்ணுள்ள தேவி குளத்தில் மூழ்கி வெயிலில் காய்கிறாள் அது என்ன?

02. மரத்தில் இலை வடிவம் அசைந்தால் கலை வடிவம் அது என்ன?

03. ஆயிரம் பேர் சேர்ந்து கட்டிய வீட்டில் குந்தி இருக்க இடமில்லை அது என்ன?

04. இரவு பகல் மாறிமாறி வருகின்றது ஆனால் இது மாறுவதில்லை அது என்ன?

05. முகமுண்டு கண்ணில்லை உடம்புண்டு கால் இல்லை. அது என்ன?

06. பார்த்தால் இருக்கும் தொட்டால் மறையும் அது என்ன?

07. அது எப்போது வரும் என்று தெரியாது இன்றோ, நாளையோ அது வரும் அது என்ன?

08. காடுண்டு, காட்டில் கறுப்புநிற மரமுண்டு, மரத்தில் கறுப்புநிற ஆளுண்டு அது என்ன?

09. வெயில் காலத்தில் காண்பது கஷ்டம் மழை காலத்தில் காண்பது இலகு அது என்ன?

விடைகள்:
[illegible]

ஜெ.எம். சமீல்-திருமலை.


## வாரம் ஒரு நாடு

### எத்தியோப்பியா



**தலைநகர்** - அடிஸ்அபாபா
**பரப்பளவு** - 12,21,900 சதுர கிலோமீற்றர்.
**மக்கள் தொகை** - 5.13 கோடி.
**மொழி** - அம்ஹாரிக் (ஆட்சி மொழி). கலிங்கா, திக்ரிக்னா மற்றும் 60 சிறிய மொழிகள்.
**எழுத்தறிவு** - 50%
**சமயம்** - கிறிஸ்தவம், இஸ்லாம்.
**தனிநபர் வருமானம்** - 130 டொலர்கள்.
**அமைவிடம்:** வடகிழக்கு ஆபிரிக்க நாடு. இதன் மேற்கே சூடானும்; தெற்கில் கென்யாவும்; கிழக்கிலும், தெற்கிலும் சோமாலியாவும்; வடகிழக்கில் ஜிபூடியும் எல்லைகளாக அமைந்துள்ளன.
**வரலாறு:** 1880 இல் இத்தாலி இதை ஆக்கிரமித்த போதிலும், தனது சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொண்டது. 1936ல் மீண்டும் இத்தாலி கைப்பற்றியது. 1941 இல் பிரிட்டன் இத்தாலியை வெளியேற்றியது. எரித்ரியா மட்டுமே இத்தாலியின் காலனியாகத் தொடர்ந்தது. என்றாலும் 1962 ல் இதுவும் எத்தியோப்பியாவுடன் இணைந்தது. 1931 முதல் ஹெய்லி ஸெலாசி மன்னரின் ஆட்சி. 1974 இல் அவர் இராணுவத்தால் வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து இராணுவ ஆட்சி. 1991ல் ஆட்சிக்கெதிராகப் பெரும் மக்கள் புரட்சி; அதிபர் நாட்டை விட்டு வெளியேறினார். தற்போது ஆறு கட்சிகளின் கூட்டு அரசு செயற்பட்டு வருகிறது.
**பொருளாதாரம்:** 1972 க்குப் பின்பு உண்டான கடும் வறட்சி நாட்டுப் பொருளாதாரத்தைச் சீரழித்தது. இலட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். கோப்பி முக்கிய ஏற்றுமதிப் பொருள். சிறு தொழிற்சாலைகளே உள்ளன. முக்கிய தொழில் விவசாயம் சார்ந்ததாகும்.

## சந்திரன்




* சந்திரன் பூமியைச் சுற்றிவரும் ஓர் உப கோள். ஒரு முறை இது பூமியைச் சுற்றுவதற்கு எடுக்கும் காலம் 27 நாட்கள், 7 மணி 43.25 நிமிடங்களாகும்,

* சந்திரனின் சரி அரைவாசி நிலப்பரப்பு சூரியனை எப்போதும் பார்ப்பதில்லை. ஆகவே அப்பகுதி எப்போதும் ஒளியின்றி நிழலாகவே இருக்கும். இந்த இருண்ட பகுதியை பூமியிலுள்ள நாம் பார்க்க முடியாது. எனினும் செயற்கைக் கோள்கள் இந்த இருண்ட பகுதியைப் படம் பிடித்து பூமிக்கு அனுப்பி வைத்துள்ளன.

* சந்திரன் பூமியின் ஒரு பகுதியாகவே முன்பு இருந்ததாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர். பல கோடி வருடங்களுக்கு முன்னர் பூமியின் மீது பிரமாண்டமான வால் நட்சத்திரம் ஒன்று மோதியபோது உடைந்த ஒரு துண்டுதான் சந்திரனாகும் என்று அவர்கள் நம்புகின்றனர்.

## அதிசயம்! ஆனால் உண்மை!



* பண்டைய கிரேக்கர்கள், நட்சத்திரங்கள் பூமிக்கு மேல் தொங்கும் சர விளக்குகள் என்று நம்பியிருந்தனர்.



* பல நூற்றாண்டுகளாக சூரியனே சந்திரனைச் சுற்றி வருகிறது என்று மக்கள் நம்பியிருந்தனர்.

* முற்காலத்தவர்கள் பூமி தட்டையாக இருக்கிறது என்று நம்பினார்கள். கடலில் செல்லும் கப்பல் ஒரு குறிப்பிட்ட தூரம் சென்றால் பாதாளத்தில் அது விழுந்துவிடும் என்றும் நம்பியிருந்தனர்.

* அண்டவெளித் தூசுகள் பூமியின் மேற்பரப்பில் படிந்துகொண்டிருப்பதால் பூமியின் எடை வருடம் தோறும் கூடிக்கொண்டிருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

சந்தானகிருஷ்ணன் தவிப்பான நிமிஷங்களில் இருந்தார்.

கம்பெனி மனேஜரை போனில் கூப்பிட்டார்.

"விஜயராகவன்"

"எஸ்....ஸார்"

"கம்பெனியில இப்போ கேஷ் எவ்வளவு இருக்கும்?"

"நாளைக்கு 'வேஜ்டே'ன்னு அஞ்சு லட்சம் ட்ராபண்ணி வெச்சிருக்கேன் ஸார்.... ஹெட் ஆபீஸ்ல ஒரு இலட்சம் இருக்கும் ஸார்.."

"மொத்தம் ஆறுலட்சம் உங்க கையில இருக்கு?"

"ஆமா ஸார்...."

"அவ்வளவு பணத்தையும் ஒரு சூட்கேஸ்ல போட்டு இன்னும் அரை மணி நேரத்தில் பங்களாவுக்கு கொண்டுவாங்க..."

"சரி....ஸார்"

"அப்படியே முல்தான் மல்லுக்கு போன்பண்ணி இன்னும் அரைமணி நேரத்துல நாலுலட்சம் கேஷா கிடைக்குமான்னு கேளுங்க...."

"பேங்கல பணம் இருக்கு ஸார்.... நாளைக்கு காலைல நாம்பளே ட்ரா பண்ணிக்கலாம்.... இப்போ அநாவசியமா எதுக்காக முல்தான் மல்கிட்டே போகணும் ஸார்...?"

"நான் சொன்னதை செய்யுங்க விஜயராகவன்"

"எஸ்....ஸார்"

"இன்னும் அரைமணி நேரத்துல எனக்கு ஹாட் கேஷ் டென் லாக்ஸ் வேணும்.... ஏற்பாடு பண்ணிக் கொண்டு வாங்க..."

"கொண்டு வர்றேன் ஸார்..."

ரிஸீவரை வைத்துவிட்டு உட்கார்ந்தார் சந்தானகிருஷ்ணன். ஹால் கடிகாரம் ஏழேகாலைக் காட்டிக் கொண்டு நின்றிருந்தது.

"அய்யா...."

முதுகுக்குப் பின்னால் குரல் கேட்கத் திரும்பினார்.

சமையல் மணி நின்றிருந்தான்.

என்ன என்பதுபோல் பார்த்தார் சந்தானகிருஷ்ணன். அவன் ஓரடி முன்னால் வந்து சொன்னான், "அய்யா... சின்னம்மாவை இன்னும் காணோம்.... டிபன் பண்ணணும்.. அயிட்டம் என்னான்னு சொன்னா ப்ரிபேர் பண்ணிடுவேன்."

அவனுடைய கவலை அவனுக்கு.

நெற்றி வியர்வையை மேல் துண்டால் ஒற்றிக் கொண்டே சந்தான கிருஷ்ணன் அவனை ஏறிட்டார். "அபிநயாவுக்கு ஒண்ணும் ப்ரிபேர் பண்ணாதே... அவ ஒரு கல்யாண ரிசப்ஷனுக்கு போயிருக்கா.... எப்படியும் வர ராத்திரி பத்து மணியாயிடும்....நீ சாப்பிட்டுட்டு கிளம்பு...."

"அய்யா உங்களுக்கு....?"

"எனக்கு ஒண்ணும் வேண்டாம்...."

மணி குழப்பமாய் நகர்ந்தான்.

சந்தானகிருஷ்ணன் மனேஜர் விஜயராகவனுக்காகக் காத்திருக்க ஆரம்பித்து நிமிஷங்களை போக்கிக் கொண்டிருந்தார்.

நேரம் 7.30ஐத் தொட்டபோது- டெலிபோன் கூப்பிட்டது.

வேக வேகமாய்ப் போய் ரிஸீவரை எடுத்தார்.

அதே குரல்.

"என்ன சந்தானகிருஷ்ணன்... கேஷ் அரேஞ்ச் பண்ணிட்டீங்களா.....? இன்னும் அரைமணி நேரந்தான் இருக்கு....."

"நீ கேட்ட பணம் தர்றேன்.. அபிநயாவை ஒண்ணும் பண்ணிடாதே!"

"ஒண்ணும் பண்ணிடமாட்டேன்" சிரித்தது குரல்.

"அபிநயா இப்ப எங்கே இருக்கா.....?"

"அதெல்லாம் உங்களுக்குத் தெரிய வேண்டிய அவசியம் இல்லை சந்தான கிருஷ்ணன். நான் கேட்ட பணம் என் கைக்கு வந்ததும் உங்க மகள் அபிநயா கொஞ்சம் கூட சேதமில்லாமே வந்து சேருவா..."

"அபிநயா உன்கிட்டதான் இருக்கான்னு நான் எப்படி நம்பி பணத்தைத் தர்றது?"

"புத்திசாலித்தனமான கேள்வி... அபிநயாவை பேசச் சொல்றேன்.... கேட்கிறீங்களா சந்தானகிருஷ்ணன்?"

"பேசச் சொல்லு-பேசச் சொல்லு...." பரபரத்தார்.

பதினைந்து விநாடி மௌனம்.

பிறகு ஒரு மெல்லிய விசும்பலோடு அபிநயா குரல் கொடுத்தாள்.

"அ...ப்....பா...."

"பயப்படாதேம்மா.... நான் இப்ப புறப்பட்டு வர்றேன்"

"சந்தானகிருஷ்ணன் பேசப் பேச ஆண் குரல் உள்ளே புகுந்தது. அபிநயாவின் குரலை வெட்டியது.

"இப்ப நம்பறீங்களா சந்தான கிருஷ்ணன்...? அபிநயா என்கிட்டத்தான் இருக்காங்கிறதை!"

"நீ கேட்ட பணத்தை குடுத்துடறேன்! அபிநயா எத்தனை மணிக்கு வீட்டுக்கு வருவா.....? நீ ஏதாவது ஒரு இடத்தைச் சொன்னா நான் காரோடு போய் அவளை பிக்-அப் பண்ணிக்கிறேன்....."

"அந்த சிரமமெல்லாம் உங்களுக்கு வேண்டாம்....சந்தானகிருஷ்ணன். பணம் என் கைக்கு வந்ததும் சரி பார்த்துக்கிட்டு நானே உங்க மகளை பத்திரமா அனுப்பிச்சு வெக்கறேன்.... எப்படியும் ஒன்பது மணிக்குள்ளே அபிநயா வந்துடுவா..."

மறுமுனையில் ரிஸீவர் வைக்கப்பட்டது.

அதே விநாடி

பங்களா வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

சந்தானகிருஷ்ணன் திரும்பிப் பார்த்தார்.

கம்பெனி மனேஜர் விஜயராகவன் ஒரு சூட்கேஸோடு காரினின்றும் இறங்கிக் கொண்டிருந்தார்.

அவரை நோக்கி வேகமாய் போனார்.

"என்ன விஜயராகவன்....! கேஷ் அரேஞ்ச் பண்ணிட்டீங்களா....?"

"பண்ணிட்டேன் ஸார்...."

"முல்தான்மல் கொடுத்தாரா....?"

"அவர்கிட்ட கேஷ் இல்ல ஸார்...வேற இடத்தில அரேஞ்ச் பண்ணிக் கொடுத்தார்..."

"நாளைக்கு காலைல முதல் காரியமா பேங்க்ல கேஷ் ட்ரா பண்ணிக் குடுத்துடுங்க....."

"சரி ஸார்..."

விஜயராகவனிடமிருந்து சூட்கேஸை வாங்கிக் கொண்டார் சந்தானகிருஷ்ணன். "அமௌண்ட் சரியா இருக்கான்னு எண்ணிப் பார்த்துட்டீங்களா....?"

"பார்த்துட்டேன் ஸார்...."




கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்

நேரம் 7.45.

மருதமலை போகும் ரோடு, நட்சத்திரங்களின் சோகையான வெளிச்சத்தில் நிசப்தமாய் படுத்திருந்தது. தொலைவில் மருதமலை, மலைகளுக்கு நடுவே ஒரு வெளிச்ச ஆரமாய்த் தெரிந்தது. ரோட்டின் இரண்டு பக்கங்களிலும் கிலோமீற்றர் கணக்கில் பாறை பரப்புகள் பரவியிருக்க-ஒரு வசதியான பாறைக்குப் பின்னால்-பிஸ்கட் பாக்கெட்டை உடைத்து வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள் சபரியும், அபிநயாவும்.

"உங்கப்பா இப்போ வந்திட்டிருப்பார்....."

"சரியா எட்டு மணிதானே சொன்னீங்க....?"

"ஆமா....."

"பாவம் அப்பா.... அரண்டு போயிருப்பார்....."

"ஒரு மணி நேரம் கழிஞ்சா சந்தோசமாயிடுவார்... பிஸ்கெட்டை எடுத்துக்க அபிநயா... பசிக்குதுன்னு சொன்னே..."

பாக்கெட்டுக்குள் கையை விட்டு ஒரு பிஸ்கெட்டை உருவிக் கொண்டாள் அபிநயா. பார்வை தொலைவில் தெரிந்த ரோட்டுப் பக்கம் ஓடியது.

போக்குவரத்து இல்லாத ரோடு அமைதியாய்த் தெரிந்தது.

எப்போதோ ஒரு சைக்கிள் மட்டும் டைனமோ வெளிச்சத்தோடு தத்தித் தத்திப் போய் மறைந்தது. ரொம்பத் தொலைவில் இருந்த கிராமங்களில் வெளிச்சப் பொட்டுகள் தெரிந்தன.

இருவரும் மௌனமாய் பிஸ்கெட்டுகளைக் கொறித்துக் கொண்டிருக்க-

நேரம் நகர்ந்தது.

7:20.

7:51.

7:52.

"அபி."

"ம்...." ரோட்டின் மேலிருந்த பார்வையை விலக்கிக் கொள்ளாமல் 'உம்' கொட்டினாள் அபிநயா.

"ஒரு வேளை....உங்கப்பா போலீஸோடு வந்துட்டா நீதான் நிலைமையைச் சமாளிக்கணும்."

"அதுக்கெல்லாம் அவசியமே வராது."

7:54

7:55.

"அஞ்சு நிமிஷந்தான் இருக்கு."

காத்திருந்தார்கள்.

"கார் எந்த நிமிஷமும் வரலாம்..."

"இன்னும் கொஞ்சம் தள்ளி உட்கார்ந்துக்க அபி..... ரோட்டோட ஃபுல் வ்யூவும் துல்லியமா தெரியும்..."

7:56

7:57

திடீரென்று அபிநயா மெலிதாய் சந்தோஷக் கத்து கத்தினாள்.

"சபரி....கார் வருது..."

ஹெட்லைட்களினின்றும் பீறிட்ட வெளிச்சப்பட்டைகள் ரோட்டை அடையாளம் காட்ட கார் வேகத்தோடு வந்து கொண்டிருந்தது.

"உங்கப்பா கார்தானா அது...?"

"இருட்டுல சரியா தெரியலை... அப்பாவோட கார் மாதிரிதான் தெரியுது..."

"ஏகப்பட்ட வேகத்துல வர்றார்..."

இருவரும் காரையே பார்த்துக் கொண்டிருக்க - அது கொஞ்சம் கொஞ்சமாய் வேகம் குறைந்து அந்தச் சின்னப் பாலத்துக்கு அருகே வந்ததும் நின்றது.

காரின் ஹெட்லைட்டுகள் அணைக்கப்பட- யாரோ நிழலுருவாய் பெட்டியோடு இறங்கினார்கள். டார்ச் வெளிச்சத்தோடு நடந்து பாலத்துக்குக் கீழே போனார்கள். சில விநாடிகள் கழித்து மேலே வரும்போது சூட்கேஸ் 'ஆப்சென்ட்' ஆகியிருந்தது.

"அப்பாதான்" என்றாள் அபிநயா.

கார் ரிவர்ஸில் திரும்பி வந்த வழியே போக ஆரம்பித்தது.

"அபி! சொன்னபடியே செய்யறார் உங்கப்பா!"

"சபரி.."

"ம்..."

"நீங்க போய் சூட்கேஸ் எடுத்துட்டு வந்துடுங்க...."

"இப்பவேவா....?"

"ம்..."

சிவப்பு விளக்குகளோடு போய்க் கொண்டிருந்த காரையே பார்த்தான் சபரி.

"பத்திரம் சபரி..."

அபிநயா கிசுகிசுப்பாய் கத்தினாள்.

சபரி இருட்டில் கையசைத்துக் கொண்டே நடந்தான்.

அபிநயா பாறையில் இடம்மாறி உட்கார்ந்து- இருட்டில் லேசான அசைவுகளோடு நடந்து போகும் சபரியையே உன்னிப்பாய் பார்த்து கொண்டிருந்தாள்.

ஐம்பது சதவீத திகிலும், ஐம்பது சதவீத சந்தோஷமும் சரிசமமாய் கலந்து ரத்தத்தில் ஓடின. ..அபிநயா சுலபமாய் மூச்சு விட்டாள்.

இந்த நிமிஷம் வரைக்கும் எல்லாமே துல்லியமாய்- சரியாய் நடந்திருக்கிறது. பாவம் அப்பாதான் துடித்துப் போயிருப்பார்.

'ஸாரி...டாடி.....!'

உதட்டுக்குள் முனகி-நெஞ்சில் கைவைத்து மானசீகமாய் சந்தான கிருஷ்ணனிடம் மன்னிப்புக் கேட்டாள் அபிநயா.

**(தொடர்ந்து வரும்)**

இருவாரம் மட்டும்

## கரைந்து விட்ட கொலைக் கருவி



பேனா நண்பர் அரங்கம்



பெயர்: பி. இஸ்டான்லி
வயது: 26
முகவரி: 284/6, கேகாலை வீதி, பொல்கஹவலை.
பொழுதுபோக்கு: பாடல் கேட்டல், ஓவியம் வரைதல், பத்திரிகை.



பெயர்: எம். நிஸாம்டீன்
வயது: 20
முகவரி: அரசினர் வைத்தியசாலை, முதூர்-01.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், முத்திரை சேகரித்தல், நண்பர் தொடர்பு.



பெயர்: என். சிறீதரன்
வயது: 26
முகவரி: P.O.BOX-368 AL KHAFJI-31971 SAUDI ARABIA
பொழுதுபோக்கு: வானொலி தொலைக்காட்சி, பத்திரிகை.



பெயர்: வை. சாஹிரா
முகவரி: C/O P.O.BOX-3346 CODE-NO. 32034 MAWAILY, KUWAIT.
பொழுதுபோக்கு: தொலைக்காட்சி பார்த்தல்.



பெயர்: எஸ். செல்வி
வயது: 18
முகவரி: 27/17, கூளாவடிக் கொலனி 1ம் குறுக்குத் தெரு, மட்டக்களப்பு.
பொழுதுபோக்கு: வழமையானவை.



பெயர்: எச். முஹமட் நஸில்
வயது: 20
முகவரி: P.O.Box: -34037 ADELIYA, FREE KUWAIT.
பொழுதுபோக்கு: சினிமா, பத்திரிகை.

பெயர்: எஸ்.சண்முகநாதன்
வயது: 21
முகவரி: 181, 185, செட்டியார் வீதி கொழும்பு -11.
பொ.போ: பத்திரிகை, கதைப்புத்தகம், வானொலி.

பெயர்: எல். ஜவாஹிர்
வயது: 17
முகவரி: 64/ஏ, இஹலயு வியன் குளம் மரதன் கடவளை.
பொ.போ: வானொலி, பத்திரிகை.

பெயர்: கெங்கனா
வயது: 22
முகவரி: 70, RTE DES ACACIAS, 1227 CAROUGE, SWITZERLAND.
பொழுதுபோக்கு: புத்தகம், டி.வி., விளையாட்டு.

பெயர்: எம். இப்திகார்
வயது: 24
முகவரி: 91, சென்ட்மேரீஸ் ரோட், மட்டக்குளி,கொழும்பு-15.
பொ.போ: தொலைக்காட்சி, பேனாநட்பு.

பெயர்: கே. இராஜசேகரன்
வயது: 29
முகவரி: போமண்ட் கீழ்ப்பிரிவு, புப்புரஸ்ஸ.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, புத்தகம், நண்பர் தொடர்பு.

பெயர்: எம். ஹுஸைன் கான்
வயது: 18
முகவரி: 201, ஹிஜ்ரா மாவத்தை, மல்லவபிட்டிய, குருநாகல்.
பொ.போ: டீ.வி., பத்திரிகை.



படிப்பகம்

www.padippakam.com

# 38

> உலகில் தலை சிறந்த ஒரே நாவல், ஒரேயொரு நாவல் 'தாய்'!
>
> நேரு நோய்ப் படுக்கையில் இருந்தபோது அவரது துணைவி கமலா நேருவிடம் உரத்து வாசிக்குமாறு கேட்ட நாவல் 'தாய்'.
>
> அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி உட்பட பல தலைவர்கள் பலமுறை விரும்பி வாசித்து மனதில் குறித்த ஒரே நாவல் 'தாய்'
>
> உலகப் புகழ் நாவலை தமிழில் மொழி பெயர்த்து உணர்ச்சிமிகு நடையில் தந்து கொண்டிருப்பவர் ரகுநாதன்.

"இதுதானம்மா வாழ்க்கை! ஜனங்கள் ஒருவருக்கொருவர் எப்படி எதிரும் புதிருமாய் நிற்கிறார்கள் என்பதைப் பார்த்தாயா? நீ உன் விருப்பத்துக்கு விரோதமாக ஒருவனை அடித்து வீழ்த்திவிடுகிறாய். ஆனால் தாக்கப்படுவது யார்? உனக்கு இருக்கும் உரிமைகளைவிட எந்த அளவிலும் அதிக உரிமையற்ற ஓர் அப்பாவிப் பிராணியையா தாக்குவது? இந்தச் சந்தர்ப்பத்தில் அவன் உன்னைவிட அதிஷ்டக் குறைவான பிறவி; காரணம்- அவன் ஒரு முட்டாள். பொலிஸ், அரசியல் பொலிஸ், ஒற்றர்கள் எல்லோரும் நமது எதிரிகள். ஆனால் அவர்களும் நம்மைப் போன்ற மனிதர்கள்தானே. நம்மைப்போலவே, இரத்தம் உறிஞ்சப்படும் வர்க்கம் தானே. அவர்களையும் மனிதர்களாகக் கருதுவதில்லை. உலகம் அப்படி இருக்கிறது. ஒரே மாதிரி இருக்கிறது! ஆனால் அந்த முதலாளிகளோ ஜனங்களை ஒருவருக்கெதிராக ஒருவரை மூட்டிவிடுகிறார்கள். பயத்தினாலும், அறிவின்மையாலும் ஜனங்களின் கண்களைக் குருடாக்கி, கையையும் காலையும் தளையிட்டுக் கட்டி, மக்களைக் கசக்கிப் பிழிந்து இரத்தத்தை உறிஞ்சித் தீர்க்கிறார்கள். மக்களை ஒருவருக்கொருவர் உதைக்கவும், நசுக்கவும் தூண்டிவிடுகிறார்கள்; அவர்கள் மக்களை துப்பாக்கிகளாகவும், குண்டாந்தடிகளாகவும், கற்களாகவும் உருமாற்றி, 'பார்! இது தானடா அரசு!' என்று கூறுகிறார்கள்"

அவன் தன் தாயருகே சென்றான்; பிறகு பேசினான்:

"இது மாகா பாவம், அம்மா! இலட்சோபஇலட்ச மக்களை கொன்று குவிக்கும் பஞ்சமாபாதகப் படுகொலை! மனித இதயங்களைக் கொன்று தள்ளும் கோரக் கொலை.... நான் சொல்வது புரிகிறதா, அம்மா? அவர்கள், இதயங்களைக் கொல்லும் ஈவிரக்கமற்ற கொலைகாரர்கள்! அவர்களுக்கும் நமக்கும் உள்ள வித்தியாசம் தெரிகிறதா? நாம்

# தாய்

ஒருவனைத் தாக்கினால், அதை எண்ணி வருந்துகிறோம். வெட்கப்படுகிறோம்; நாம் அனைவருமே அப்படிப்பட்ட செயலை அருவருத்து வெறுத்துத் தள்ளுகிறோம். ஆனால் அவர்களோ ஆயிரக் கணக்கான மக்களை அமைதியாக, ஈவிரக்கமற்று, ஈர நெஞ்சமற்று, வேதனையற்று–சொல்லப்போனால் பரிபூரணமான இதய திருப்தியோடு–கொன்று தள்ளுகிறார்கள்! அவர்கள் ஜனங்களை கசக்கிப் பிழிந்து உயிரைப் பருகுவதற்குரிய ஒரே காரணம் என்ன தெரியுமா? தங்களது தங்கத்தையும், வெள்ளியையும் சொத்து சுகங்களையும் பாதுகாப்பதற்காக, நம்மீது அவர்கள் செலுத்தும் அதிகாரத்தை–ஆட்சியை நிலைக்க வைக்கும் சகல சட்டதிட்டங்களையும் பாதுகாத்துப் போற்றி வளர்ப்பதற்காகவேதான். அம்மா, நீ இதைக் கொஞ்சம் யோசித்துப் பார், மக்கள் குலத்தை கொன்று குவிப்பதும் மக்கள் குலத்தின் இதயங்களை சின்னாபின்னப்படுத்துவதுமான காரியத்தை அவர்கள் எதற்காகச் செய்கிறார்கள்? தங்கள் இனத்தையோ தங்கள் உயிரையோ பாதுகாப்பதற்கான தற்காப்பு முயற்சியல்ல அது! ஆனால், தங்கள் உடைமைகளை பாதுகாப்பதற்காகத்தான் அவர்கள் இப்படிப்பட்ட கோரக்கொலையில் ஈடுபடுகிறார்கள். தங்கள் இதயத்துக்குள்ளே இருப்பதை அவர்கள் பாதுகாக்க விரும்பவில்லை. இதயத்துக்கு வெளியேயுள்ள பொருள்களைத்தான் அவர்கள் காப்பாற்ற எண்ணுகிறார்கள்..."

அவன் அவளது கரங்களை எடுத்து, அவற்றை அழுத்திப் பிடித்தவாறு பேசினான்:

"நீ மட்டும் இந்தச் செய்கையிலுள்ள கசப்பையெல்லாம் உணர்ந்துவிட்டால், இந்தச் செய்கையின் வெட்கரகமான கேவல நிலையை உணர்ந்துவிட்டால், நாங்கள் எந்த சத்தியத்துக்காகப் போராடிக் கொண்டிருக்கிறோம் என்பதை இலகுவில் புரிந்து கொள்வாய். அந்தச் சத்தியம் எவ்வளவு மகத்தானது, புனிதமானது, அருமையானது என்பதையும் நீ கண்டுகொள்வாய்!"

தாய் உணர்ச்சி வசப்பட்டு எழுந்தாள். தனது



இதயத்தையும் தன் மகனது இதயத்தையும் ஒன்றாக்கி ஒரே ஜோதியாக, பிரகாசமான ஏக ஜோதிப் பிழம்பாக ஆக்கிவிட வேண்டும் என்ற ஆசை அவள் மனத்தில் நிறைந்து நின்றது.

"கொஞ்சம் பொறு பாவெல்" என்று சிரமத்தொடு முனகினாள் அவள். "என்னால் அதை உணர முடியும்.... கொஞ்சம் பொறுத்திரு!"

□□

வாசல் புறத்தில் யாரோ - திடீரென வருவது கேட்டது. அவர்கள் இருவரும் திடுக்கிட்டு எழுந்து ஒருவரையொருவர் திருகத் திருகப் பார்த்துக் கொண்டனர்.

கதவை மெதுவாகத் திறந்து கொண்டு உள்ளே வந்தான் ரீபின்.

"வந்துவிட்டேன்!" என்று புன்னகையோடு தலைநிமிர்ந்து சொன்னான் ரீபின்; "அங்கும் இங்கும் எங்கும் போனான் தாமஸ்; ஆடியோடித் திரும்பி வந்தான் தாமஸ்!"

அவன் ஒரு கம்பளிக் கோட்டு போட்டிருந்தான். அதன் மீது தார் எண்ணெய் படிந்திருந்தது. காலிலே ஒரு ஜோடி கட்டைப் பாதரட்சைகள்; தலையிலே ஒரு கம்பளித் தொப்பி. அவனது இடைவாரிலே இரண்டு கையுறைகள் தொங்கிக் கொண்டிருந்தன.

"உடல் நலம் எப்படி? பாவெல், உன்னை விடுதலை பண்ணி விட்டார்களா? ரொம்ப நல்லது. என்ன பெலகேயா நீலவ்னா சௌக்கியமாயிருக்கிறாயா?" அவன் தன் வெள்ளைப் பல்லெல்லாம் தெரிய இளித்துச் சிரித்தான். அவனது குரல் முன்னைவிடக் கனிந்திருந்தது. அவனது முகத்தில் அளவுக்கு மீறி தாடிவளர்ந்து மண்டியிருந்தது.

அவனைப் பார்த்ததில் தாய்க்கு சந்தோஷம். அவனது கறுத்துப் போன அகன்ற கையைப் பற்றிப் பிடிப்பதற்காக அவள் அவன் அருகே சென்றாள்.

"அம்மாடி!" என்று ஆழ்ந்த பெருமூச்சு விட்டாள் அவள். அப்படிப் பெருமூச்சு விடும்போது, தார் எண்ணெயின் காரநெடி அவளது சுவாசத்தில் நிரம்பிக் கமறியது. "உன்னைப் பார்த்ததில் எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி தெரியுமா?"

பாவெல் புன்னகை புரிந்தான். ரீபினைக் கூர்ந்து பார்த்தான்.

"நல்ல முஜீக்!"

பிறகு ரீபின் தன் மேலாடையைக் களைய முனைந்தான்.

"ஆமாம் நான் பழையபடியும் முஜீக் ஆகிறேன். நீங்களெல்லாம் கனவான்களாகிக் கொண்டிருக்கிறீர்கள். நான் மட்டும் எதிர்மாறான திசையில் போய்க் கொண்டிருக்கிறேன்!"

அவன் தன் பலநிறச் சட்டையை ஒழுங்குபடுத்தியவாறு அறைக்குள் நடந்தான்; சுற்றுமுற்றும் பார்த்தான்.

"புத்தகங்களைத் தவிர, இங்கு வேறு ஒன்றையும் காணோம். சரி, எனக்கு நீ எல்லா விவரத்தையும் சொல்லு."

அவன் தன் கால்களை அகட்டிப் போட்டவாறு உட்கார்ந்து முழங்கால்களை கைகளால் கட்டிக் கொண்டு, தனது கரிய கண்களால் பாவெலையே பார்த்தவாறு அவன் சொல்லப்போகும் பதிலை எதிர்நோக்கிப் புன்னகை செய்தபடி இருந்தான்.

"எல்லாம் நன்றாய்த்தானிருக்கிறது." என்றான் பாவெல்.

"உழுகிறோம், விதைக்கிறோம், கதிர்கண்டு களிக்கிறோம்; வடிக்கிறோம் பீரை, தூங்கிக் கழிக்கிறோம் நாளை–அப்படியா?" என்று கூறிச் சிரித்தான் ரீபின்.

"சரி. நீங்கள் எப்படிக் காலத்தைப் போக்குகிறீர்கள், மிகயீல் இவானவிச்?" என்று அவனுக்கு எதிராக உட்கார்ந்தான் பாவெல்.

"நான் ஒழுங்காகத்தான் காலம் தள்ளுகிறேன். எகில்தேயவோ என்னும் ஊரில் வசிக்கிறேன். அந்த ஊரைப்பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறாயா? நல்ல ஊர்; சின்னப் பட்டணம். வருஷத்திலே இரண்டு சந்தை கூடும். சுமார் இரண்டாயிரம் பேர் வசிக்கிறார்கள்.

## மக்சீம் கார்க்கி

எல்லோரும் மோசமான ஜனங்கள். அவர்களுக்கு சொந்தத்தில் நிலம் கிடையாது. எல்லாம் குத்தகை நிலம்தான், செழிப்பானதல்ல; அட்டைபோன்ற ஒரு பண்ணைக்காரனிடம் நானும் வேலைக்குச் சேர்ந்திருக்கிறேன். பிணத்தை மொய்க்கும் ஈக்கள் போல அவர்கள் அங்கு ஏராளம். நிலக்கரியை எரித்து தார் எண்ணெய் வடிக்கிறோம். இங்கே சம்பாதித்ததில் அங்கே கால்வாசிதான் சம்பாத்தியம். வேலையோ இரண்டு மடங்கு கஷ்டம்! ஹூம்! எங்களை உறிஞ்சித் தீர்க்கிறானே நிலச் சுவான்தார்– அவனிடம் நாங்கள் ஏழுபேர் வேலை பார்க்கிறோம். அவர்கள் எல்லாரும் நல்லவர்கள், இள வட்டங்கள். என்னைத் தவிர மற்றவரெல்லாம் உள்ளூர் ஆட்கள். எல்லோருக்கும் எழுதப்படிக்கத் தெரியும். அவர்களில் ஒருவன் பெயர் எபீம். அவன் கொஞ்சம் தலைக்கனம் பிடித்த பயல், அவனோடு மாரடிப்பது எப்படி என்பது பெரிய பிரச்சனை!"

"உங்கள் வேலையெல்லாம் எப்படி? அவர்களோடு நமது கொள்கையை நீங்கள் விவாதிப்பதுண்டா?" என்று ஆர்வத்தோடு கேட்டான் பாவெல்.

"நான் ஒன்றும் பேசாமல் சும்மா இருக்கவில்லை. ஆமாம். நீயும் தெரிந்துகொள். நீ கொடுத்த பிரசுரங்கள் –முப்பத்திநாலா?–அத்தனையும் என் வசம் இருக்கின்றன. ஆனால், நான் பிரச்சாரம் செய்வதெல்லாம் பைபிளைத்தான். பைபிளிலும் எத்தனையோ நல்ல விஷயங்கள் இருக்கின்றன. பெரிய புத்தகம்; மேலும் அரசாங்கச் சார்புள்ள புத்தகம். பாதிரி சைனாடின் அங்கீகாரம் பெற்ற புத்தகம். அதில் யாரும் இலகுவில் நம்பிக்கை கொண்டு விடுவார்கள்."

அவன் சிரித்துக் கொண்டே பாவெலை நோக்கி கண்களைச் சிமிட்டினான்.

"ஆனால், அதுமட்டும் போதாது. நான் உன்னிடம் புத்தகங்கள் வாங்கிக் கொண்டு போகத்தான் வந்தேன். என்னோடு எபீமும் வந்திருக்கிறான். அவர்கள் எங்களை ஒரு வண்டி எண்ணெயைக் கொண்டு போகச் சொன்னார்கள். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு உன் வீட்டுக்கு பக்கமாக வந்தோம்; வந்து சேர்ந்தோம். சரி, எபீம் வருவதற்குள் நீ எனக்குப் புத்தகங்களை எடுத்துக் கொடு. அவனுக்கு இந்த விஷயமெல்லாம் ரொம்பத் தெரியக் கூடாது."

தாய் ரீபினையே பார்த்தாள். அவனது ஆடையணிகளின் மாறுதல்களைத் தவிர வேறு ஏதோ முறையிலும் கூட அவன் மாறிப்போயிருப்பது போல் அவளுக்குத் தோன்றியது. அவனது பாவனைகூட முன்னை மாதிரி அழுத்தமுடையதாக இல்லை. கண்களில் ஏதோ கள்ளத்தனம் நடமாடியது, முன்னைப் போல் அவை விரிந்து நோக்கவில்லை.

"அம்மா, போய் அந்தப் புத்தகங்ளை வாங்கி வருகிறீர்களா? அங்குள்ளவர்களுக்கு எந்தப் புத்தகங்கள் என்பது தெரியும். நாட்டுப் புறத்துக்கு அனுப்ப வேண்டிய புத்தகங்கள் என்று மட்டும் சொன்னால் போதும்" என்று சொன்னான் பாவெல்.

"அதற்கென்ன? தேநீர் கொதித்து முடிந்தவுடன் உடனே போகிறேன்" என்றாள் தாய்.

"என்ன பெலகேயா நீலவ்னா, இந்த விவகாரத்தில் நீயும் கலந்து விட்டாயா?" என்று கேட்டுச் சிரித்தான் ரீபின்; "ஹூம். அங்குள்ள ஜனங்களில் எத்தனையோ பேருக்கு புத்தகங்கள் தேவை. படிக்க வேண்டும் என்ற ஆர்வம். உள்ளூரில் ஓர் உபாத்தியாயர் இருக்கிறார். இது அவருடைய வேலை. ரொம்ப நல்லவர். அவரும் தேவாலய குருக்கள் வழியில் வந்தவர் என்று சொல்லிக்கொள்கிறார்கள். சுமார் ஏழு கிலோமீட்டர் தூரத்துக்கு அப்பால் ஓர் உபாத்தியாயினியும் இருக்கிறாள். ஆனால் அவர்கள் தடைசெய்யப்பட்ட புத்தகங்களைத் தொடுவதில்லை. வேலை போய்விடும் என்ற பயம். ஆனால், எனக்கு அந்தத் தடை பண்ணப்பட்ட புத்தகங்கள் தான் தேவை. கொஞ்சம் காரசாரமான புத்தகங்கள் தான் நல்லது. நான் அவற்றைப் பையப் பைய அவர்கள் மத்தியில் பரப்பிவிடுவேன். பொலிஸ்காரரோ, தேவாலயக் குருக்களோ அந்தப் புத்தகங்களைக் காண நேர்ந்தால், என்னைக் குற்றம் கூறுவார்களா? அந்த உபாத்தியாயர்கள் பாடுதான் ஆபத்து. அதற்குள் நான் சமயம் பார்த்து ஒதுங்கியிருந்து விடுவேன்."

அவன் தனது புத்திசாலித்தனத்தை எண்ணித் தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டான்.

"கரடி போலப் பாவனை, குள்ள நரியைப் போல வாழ்க்கை" என்ற நினைத்தாள் தாய்.

"இந்த மாதிரிச் சட்டவிரோதமான புத்தகங்களைப் பரப்பியதாக உபாத்தியாயர்கள் மீது சந்தேகப்பட்டால்; அவர்களைச் சிறையில் போடுவார்கள் என்று எண்ணுகிறீர்களா?" என்று கேட்டான் பாவெல்.

"நிச்சயமாய்ப் போடத்தான் போடுவார்கள். அதனால் என்ன?" என்றான் ரீபின்.

(தொடர்ந்து வரும்)

---

## "கண்ணாளனே..."

### ஷர்மிளா இஸ்மாயில் -கண்டி

வழமைக்கு மாறான அமைதி அவள் முகத்தில். ஆனால் அவனோ அதை உணரவில்லை.

ஜோக் சொல்லிச் சிரித்தான். வளவளவென்று கதைத்தான்.

அவள் மௌனம் உணர்ந்த கணங்களில் திகைத்தான்.

"ஏன்...? என்ன ஒரு மாதிரியா?...." கேள்விகளைத் தொடுத்தான்.

அப்போதும் மௌனங்காத்தாள்.

"சொல்லி விடு வெள்ளி நிலவே....சொல்ல வந்த சேதிகளையே..." பாடினான்.

அவள் கண்களில் வழமைக்கு மாறான ஏதோவோர் அன்னிய உணர்வு. அது அவனை உறுத்தியதும் சீரியஸானான். "சொல்"

அவள் தடுமாறினாள். ஆகாயத்தை வெறித்தாள். சிறிது வியர்த்தது. செடியின் தளிர் கிள்ளி வீசினாள்.

"வ....வந்து...எ..எனக்கு கல்யாணம் நிச்சயமாயிடுச்சு...." வார்த்தைகளை முறித்தாள். அவன் வாய்திறக்க முயற்சிக்க அவள் தடுத்தாள்.

"அவசரப்படாதீங்க! என்னால எதுவும் செய்ய முடியல. வீட்டுல அத்தன பேரின் எதிர்ப்புக்கு மத்தியில நான் பலவீனமாயிட்டேன். என்னால எதிர்க்க முடியல. மன்னிச்சிடுங்க. நான் சரின்னு சொல்லிட்டேன்."

கொதிப்பான்; குமுறுவான்; உணர்ச்சிப் பிழம்பாய்த் தகிப்பான் என எதிர்பார்த்தவாறு அவன் முகம் பார்த்து பயந்தாள்.

இப்போது அவன் மௌனங்காத்தான். அவள் இன்னும் பயந்தாள்.

"நாம சந்திச்சிருக்கக் கூடாதில்லையா?" சம்பந்தமில்லாமல் கேட்டான். யோசித்தான். "சரின்னு சொல்லிட்டியா?" தீர்க்கமானான்.

பின் சிரித்தான். அலட்சியம், ஏளனம், வெறுப்பு, விரக்தி எல்லாமே கலந்த சிரிப்பு. "ஓ...லண்டன் மாப்பிள்ளை....கார்..பங்களா....சரிம்மா. நீ கைகழுவினா நான் என்னவோ தேவதாஸும் நானும் ஒரு ஜாதி



பாடிகிட்டு திரிவேன்னு.... இல்ல தற்கொலை பண்ணிக்குவேன்னு....இல்ல கலங்கியழுது காலமெல்லாம் கண்ணீர்ல கழிப்பேன்னு எதிர்பார்த்தியா?...இல்ல நான் உன்ன காதலிச்சது வெறும் பொழுது போக்குக்காக வேண்டி..... பொழுதும் ஜாலியாய் போயிடுச்சு. இப்ப நீயும் போகப்போறே. எனக்கொண்ணும் நஷ்டம் இல்ல... கஷ்டமும் கவலையும் இல்ல. வாழ்க! வரட்டுமா?" திரும்பிப் பாராது நடந்தான்.

அவளோ திகைப்பின் விளிம்பில். அவனது வார்த்தைகள் இதயத்தை சுட்டெரித்து கண்களை கலங்க வைத்தன. இவனா? இப்படியா?

'உனக்குக் கல்யாணம்ணு நீ சொன்ன கணங்களில் என்னில் ஏற்பட்ட வேதனை, கலக்கம், சோகம்....இதுல பாதியளவாவது நான் உன்னை வெறும் பொழுது போக்குக்காக காதலிச்சேன் என்ற வார்த்தைகளைக் கேட்டதும் உன்னில் ஏற்படும். அது போதும் எனக்கு' சராசரி மனிதனாய் நடந்தான்.

---

## தண்டனை

### கே. வின்சன்ட்



அன்று இறுதி நாள் திருவிழா. ஆலயத்தில் கூட்டம் நிரம்பி வழிந்தது. சன நெருக்கடிக்கு மத்தியில் நசுங்கியவாறு எம் பெருமானை வணங்கி விட்டு வீதிக்கு வந்தேன். கோயில் வீதி தூள் பறந்து கொண்டிருந்தது. சிறுவர் பட்டாளம் கும்பல் கும்பலாக விளையாடிக் கொண்டிருந்தார்கள். எல்லோர் கைகளிலும் விளையாட்டுத் துப்பாக்கி! அதைக் கொண்டு ஒருவரை ஒருவர் 'சூட்' பண்ணி ஓடி ஆடி விளையாடுவதைப் பார்க்கும் வேளையில் எனக்கு தம்பி நீதனின் ஞாபகம் வந்தது. அது போல் ஒன்றை வாங்கிக் கொண்டு போய் அவனுக்கு கொடுக்க வேண்டும் போல் இருந்தது.

மறுகணம் கடைக்குச் சென்று 'சொட்'கண்ணை கையிலெடுத்து அதற்கான விலையைக் கேட்டேன். 40 ரூபாவுக்கு கொடுப்பதாக கடைக்காரர் கூறியது காதில் விழுந்தது. ஆனால் மனம் என்னவோ பொக்கட்டிலிருந்து பணத்தை எடுக்க மறுத்தது. 'இதை எடுப்பதா? இல்லை கொடுப்பதா?' என்று நான் யோசிச்சுக் கொண்டிருக்கையில் "பக்"கென்று 'கரண்ட' தடைப் பட்டதும் கடைகளில் ஒளி பரப்பிக் கொண்டிருந்த மின் விளக்குகள் கண்களை மூடிக் கொண்டன. ஒரே இருள் மயம்! 'இந்த இருட்டில் என்னை கடைக்காரர் எங்கே கவனிக்கப் போகின்றார். இது நல்ல தருணம்' என நினைத்து மெதுவாக அவ்விடத்தை விட்டு நழுவிக் கொண்டேன்.

'அப்பாடா 40 ரூபாய் மிச்சம்! இனி ஒரு ஐஸ் கிரீம் குடிக்க வேணும்" என நினைத்தபடி பொக்கட்டுக்குள் 'கை' விட்டேன். சுர்ர் என்றது எனக்கு! பயம் பற்றிக் கொள்ள ஷேர்ட் பொக்கட்டையும் ட்ரவுசர் பொக்கட்டையும் மாறி மாறி ஆராய்ந்தேன். "கற்பூரம் வாங்கிவிட்டு ட்ரவுசர் பொக்கட்டில்தானே மணிப்பேசை வைத்தேன். நன்றாக நினைவிருக்கிறது. ஆனா.... ஆனா... இப்ப எப்படி காணாமல் போனது... அதுக்குள்ள 300 ரூபா இருந்தது... காசு போனால் போகட்டும்... ஆனா... ஐடென்டிட்டி காட் இல்லாமல் ... இனி எப்படி நான்...? எண்ட கடவுளே இந்த நெருக்கத்துக்குள்ள எப்படித் தேடிக் கண்டு பிடிக்கிறது?' தலை சுற்றத் தொடங்கியது.



படிப்பகம்

www.padippakam.com

# சந்தேகம்



## கோணேஸ்வரன்

தினமுரசுக்குச் சிறுகதை எழுதிப்போட்டேன். வெளியாகி இருந்தது.

சந்தோசத்தில் தலை கால் புரியவில்லை.

கடைக்காரச் சாமியார் தெய்வமாகத் தெரிந்தார். என் பெயர் அச்சிடப்பட்ட பத்திரிகையை விற்றுக் கொண்டிருக்கிறார் அல்லவா?

வழமைக்கு மாறாக கடைக்காரச் சாமியார் பவ்வியமாகச் சிரித்தபடி பத்திரிகையை நீட்டியது போலிருந்தது எனக்கு. ஒரு வேளை சிறுகதையை படித்திருப்பாரோ? இந்த மனுசனுக்கு இதுக்கெல்லாம் எங்க நேரம்? எண்டாலும் பெரிய எழுத்தில் சிறுகதைக்கு நடுவில் மேலும் கீழும் கோடுபோட்டு என்ர பேர் வந்திருக்கிறதைப் பார்த்திருப்பார் போலக்கிடக்கு.

கடைக்காரரைப் பார்த்தேன். ம்...ஹூம்....என் பெயரைப் பார்த்த மாதிரி கூடத் தெரியவில்லை. மனுசன் தோளில கிடந்த துண்டை எடுத்து மேசையை அப்படியும் இப்படியும் தட்டிக் கொண்டிருந்தார்.

அறுபது வயது இருக்கும் ஒரு கிழம். "தம்பி தினமுரசு தாரும்.." வாங்கிய மூச்சிலேயே கடை வாசலில் நின்றபடி பத்திரிகையில் எதற்குள்ளோ ஆழ்ந்து போய்விட்டது. எனது சிறுகதையைப் படிக்கிறாரோ.... எட்டிப் பார்த்தேன். கிழவன் சரியான ஜொள்ளுப் பேர்வழி போலக்கிடக்கு. அதிரடி அய்யாத்துரைக்குள்ள எதையோ துழாவிக்கொண்டிருந்தது.

அடடா....! இந்த இளைஞன்.... இவன் என்ர சிறுகதையைத்தான் பார்க்கிறான் போல கிடக்கு. கடை வாசலிலேயே பத்திரிகைக்குள் தலையைப் புதைத்தபடி எதையோ தேடிக் கொண்டிருந்தான். மெதுவாக எட்டிப் பார்த்தேன். என்ன ஜென்மம்.....? நடுப்பக்கத்தில் ஒரு படத்தை ஆராய்ந்து கொண்டிருந்தான்.

ஏன் என்ர சிறுகதை உங்கட கண்ணில் படவில்லையோ.....? கேட்க வேண்டும் போலிருந்தது. ஆஜானுபாகுவான என் தோற்றம் சத்தியா சலூன் கண்ணாடியில் தெரிந்தது. அடக்கிக் கொண்டேன்.

சுகுமார் அப்பா சிரித்தார். அவரிடம் பத்திரிகையைக் கொடுத்து கதையைப் படிக்கச் சொல்லலாமா...? வேண்டாம் கிழவன் பிழையாக நினைக்கும்.

சைக்கிளை மிதித்து அரசடிப்பக்கமாகத் திரும்பினேன். முகிலண்ணா வந்தார். சரியான ஆள்; கலாரசிகர்; நாடக வித்தகர்....எழுதாமல் கவிதை சொல்ல வல்லவர்.

"தம்பி என்ன.....தினமுரசே...?"

"ஓமண்ண.......இந்தாருங்கோ.....பாருங்கோ"

"வீட்டில பெடியன் எடுத்திருப்பான்...எதுக்கும் தாவன்... என்ன போட்டிருக்கு...?

கேள்வி தேனாய் இனித்தது.

"அண்ண....என்ர சிறுகதை வந்திருக்கு" வெட்கத்தை விட்டு இவரிடம் சொல்வதில் என்ன வெட்கம்?

முகிலண்ணா நிமிர்ந்து பார்த்துத் தன் மொட்டையைத் தடவிக் கொண்டார். 'காசு கீசு கொடுத்துப் போடுவிச்சியோ...' அவர் கேட்கவில்லை. கேட்டது போலிருந்தது எனக்கு.

"எங்க பாப்பம் கதையை..."

அவசரமாகக் காட்டினேன்

ஒரே மூச்சில் படித்தார். என்னுடைய முதல் வாசகர் அல்லவா அவர்...! அடக்க ஒடுக்கமாக நின்றேன்.

செய்திகள்....எக்ஸ்ரே ரிப்போர்ட்..இவற்றையும் புரட்டினார். எரிச்சலாக இருந்தது எனக்கு.

"தம்பி ....உவன் என்ர அண்ணை போல எழுதி இருக்கிறார்...!

அண்ணை என்று கவனமாகச் சொன்னது என்ர நண்பரை- அவருடைய தம்பியைத்தான். தனக்கு அவன் அடங்கிறதில்ல என்ற கோபம் அவருக்கு.

"ஏன் அண்ணா?"

"இல்ல.... அவன்ர கவிதையில தேவையில்லாமல் பெண்டுகளை வர்ணிப்பான். அது போலத்தான் நீயும் வேணுமெண்டல்லோ வர்ணிச்சிருக்கிறாய்....? எண்டாலும் நல்லா இருக்கு.

'கம்பன் வர்ணிச்சா...கண்ணதாசன் வர்ணிச்சா.... வாயைப் பிளப்பியள், என் நண்பன் வர்ணிச்சா...நான் வர்ணிச்சா பொறுக்க முடியல்ல. அப்படித்தானே!' பார்வையால் கேட்டுக் கொண்டேன். வார்த்தையாலல்ல.

"அண்ணா, நீங்கள் பெரிய கலைஞர். நீங்கள் நல்லதென்று சொன்னால் அது போதும்."

பத்திரிகையை வாங்கிக் கொண்டு பறந்தேன். பின்நேரம் அவன் நவசோதிராசாவுக்கு காட்ட வேணும். ஓமோம் இவன் முகிலண்ணயின்ர தம்பிக்குக் காட்ட வேண்டும். இவங்கள் ரெண்டு பேருக்கும் நினைப்பு; தாங்கள் பெரிய எழுத்தாளர்கள் எண்டு. நானும் பெரிய எழுத்தாளன் தானே! தினமுரசில என்ர சிறுகதை வந்திருக்கெண்டால் அது லேசுப்பட்ட விசயமா..?

வீட்டுக்குள் நுழைந்தேன். என் தர்மபத்தினி தொலைக்காட்சியில் தொலைந்து கொண்டிருந்தாள். நான் வந்ததை அவள் கணக்கெடுக்கவில்லை. கல்யாணப் பரிசு தங்கவேல் எண்டு என்னை நினைத்துக் கொண்டாளா?

பத்திரிகையை விட்டெறிந்தேன். "பாரடி.....அத்தானின் கதை வந்திருக்கு...."

"உங்கட கதையா....? "பத்திரிகையிலா....? அதுவும் தினமுரசிலா......?"

அப்படி என்ன அலட்சியம் அவளுக்கு? என் திறமையைப் புரிந்து கொள்ளாத ஜென்மம்....

பத்திரிகையை விரித்துக் கதை வந்த பக்கத்தைக் கொடுத்தேன். பார்த்தாள்.

"ஓமப்பா...."

"என்ன...ஓமப்பா....? உனக்கு என்னில ஒரு அலட்சியம். அப்பிடித்தானே.....?"

ஒரு மாதிரிப் பார்த்தாள்... "அப்ப நாலைஞ்சு இரவுகள் நித்திரை முழிச்சி ஒரு நீம் பேப்பரை வீணடிக்கிறது இதுக்குத் தானோ.....?"

கையை ஓங்கிக் கொண்டு போனேன். "எந்த நேரத்தில என்ன கதைக்க வேண்டும் மென்பதை முதலில் பழகு...."

இனிமேல் இவளிட கண்ணில் படாமல் தான் கதை எழுத வேணும். பேப்பர் வீணாக்கினால் என்ன? இவளின்ர அப்பன் வீட்டுக் காசா....?

என்ர கதைப் பக்கத்தை விட்டு விட்டு மகாபாரதத்தைத் துழாவினாள்.

"பிறகு மகாபாரதத்தைப் படி.. முதலில் தேத்தண்ணி போடு..."

என்ர கதையைப் படிக்காதவளுக்கு என்ன மகாபாரதம்.....? தேநீரைக் கலக்கிக் கொண்டிருந்தவள் ஓரக் கண்ணால்

### "இந்த வயசில இப்படி ஒரு வர்ணிப்பு வரவே வராது. அவள் ஆர் எண்டு எனக்கு தெரிய வேணும்"

பார்த்தாள்." என்ன கோபமா?

"என்ர கதையை விட உனக்கு மகாபாரதம் முக்கியமா...?" சிரித்தாள். கலக்கிய தேநீரை அப்படியே வைத்தாள். தினமுரசை எடுத்தாள்.

என் கதையைப் படித்தாள்...கலக்கிய தேநீரை எடுத்து மடக்கென்று குடித்தாள்.

"எனக்குத் தேத்தண்ணி...?"

"உங்களுக்குத் தேத்தண்ணியா வேணும்? இனி இந்த வீட்டில சோறு கூடக் கிடையாது."

"ஏன்....என்ன நடந்தது? உனக்கென்ன விசரே....?"

"ஓ..விசர்தான்"

"விளக்கமாகச் சொல்வடி.. அப்பத்தான் புரியும்!"

"என்னை வரிச்சித்தடி எண்டு சொல்லிப் போட்டு யாரை வர்ணிச்சு இருக்கிறீங்க? கொஞ்ச நாளா நித்திரையும் இல்லாம இரவிரவா முழுசி முழுசிக் கிடந்தது இவளின்ர நினைப்பில தானோ...?

"அடியே....இது கற்பனை..."

"இது கற்பனையில்ல அனுபவம்...இந்த வயசில இப்படி ஒரு வர்ணிப்பு வரவே வராது. அவள் ஆர் எண்டு எனக்குத் தெரிய வேணும். அது வரைக்கும் இந்தக் கையால சோறு போட மாட்டேன்....." உள்ளே பாத்திரங்கள் உருளும் சப்தம்.

"போதும் போதுமடி...புதுக்குவத்து வெள்ளாமை....." பக்கத்து வீட்டுக் கிழவி நேரகாலம் தெரியாமல் உரத்துப் பாடிக்கொண்டிருந்தாள்.

# அண்ணனுக்கோர் அஞ்சல்

## மாத்தளை—ஆர்.பாலகிருஷ்ணன்



'அன்புக்கோர் அண்ணனு'க்கு!

உங்கள் அன்புத்'தங்கை' 'ராதா' வரையும் 'பாசமலர்' என்னவெனில்...'நலம் நலமறிய ஆவல்'.

இங்கு 'அன்னையும் பிதாவும்' மட்டுமல்ல நம் 'அன்பு சகோதரர்கள்' 'சின்னத்தம்பி பெரியதம்பி' அனைவரும் 'கந்தன் கருணை'யால் இனிய நலம்.

அண்ணா! நம்மைக் 'கண்கள்' போல் காத்து வளர்த்து ஆளாக்கிய நமது 'கண்கண்ட தெய்வமான' 'அம்மா'வின் 'தூய உள்ளம்' புண்படும்படி 'நான்' என்றுமே நடந்துகொள்ளமாட்டேன். 'இது சத்தியம்'.!

மேலும் என் பள்ளிச் சிநேகிதி 'இளவரசி'யை உனக்குத் தெரியுந் தானே? அதாவது 'இரத்தினபுரி இளவரசி' யைத்தான் சொல்கிறேன். அவள் வீடு சென்று ஒருவாரம் தங்கியிருந்தேன். 'அந்த ஏழு நாட்களும்' சந்தோஷமாகக்கழிந்தது. அதனால் தான் உனக்கு மடல் வரைய தாமதமாகிவிட்டது. எனவே குறையேதும் கொள்ளவேண்டாமென உன்னிடம் 'மன்னிப்பு' கேட்டுக்கொள்கிறேன்.

நிற்க, என்னைப் 'பெண்' பார்க்க சென்றவாரம் 'மாப்பிள்ளை' வீட்டார் வந்திருந்தார்கள். 'மாப்பிள்ளை'யின் முஞ்சே சரியில்லை. பெயர் 'ராஜா'வாம். ஆனால் 'போக்கிரிராசா' என அவன் முகமே சொல்லியது. அவனது அப்பனோ 'பணம்' கறப்பதில் 'வில்லாதி வில்லன்' போலும். ஐந்து லட்சம் ரூபா ரொக்கமும் நாலு வேலி நிலமும் 'சீர்வரிசை'யாகக் கேட்டான். நான் இந்தத் 'திருமணம்' வேண்டாமென ஒரேயடியாக மறுத்துவிட்டேன்.

அது போகட்டும்! 'என் அண்ணன்' மனம் கவர்ந்த 'உத்தமி'யான அந்த 'அமராவதி' எனக்கு 'அன்புக்கோர் அண்ணி'யாகும் திருநாளைத்தான் நானும் தினந்தினம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். 'நீ' என்னைப் பற்றிக் கவலைப்படாமல் 'அண்ணி' கழுத்தில் 'திருமாங்கல்யம்' பூட்டி 'மூன்று முடிச்சு'ப் போட உடன் ஏற்பாடு செய். 'ஆதிபராசக்தி'யின் 'திருவருளால்' 'நல்லதே நடக்கும்'.

உன் 'தோழன்' 'மிஸ்டர் பாரத்'தான் எனக்குத் 'துணை'வனாக வரவேண்டுமென 'பிராப்தம்' இருந்தால் அந்த விதியை யாரால் மாற்ற முடியும்? அந்த விதியின் விளையாட்டையும் பொறுத்திருந்து பார்ப்போம்.

இங்கு நம்வீட்டு 'வாட்ச்மேன் வடிவேலு', 'பூந்தோட்டக்காவல்காரன்' 'பழநி', சமையல்காரி 'வள்ளி', முன்வீட்டு 'டீச்சரம்மா', பக்கத்துவீட்டு 'சாந்தி', 'பாபு' அனைவரும் உன் நலம் கேட்டதாகக் கூறினார்கள்.

வேறு விடயமில்லை. மற்றவை உன் மடல் கண்டு தொடரும்! உடன் பதில்!!

'நன்றி'

இப்படிக்கு
'என்றும் அன்புடன்', உன் 'உயிர்த்தங்கை'
'செல்வி. 'ராதா' 'பாண்டியன்'

# ரேடியோ

சுவர் மணிக்கூடு மாலை ஆறு மணியென்பதைக் காட்டிநின்றது. செய்தி கேட்பதற்காக றேடியோவை திறந்தார் அப்பா. வழமையாக அம்பாறை மத்திய அலை வரிசையூடாக ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகள் தெளிவாக இருப்பதன் காரணத்தால் அதனையே கேட்டு வந்த அவர் அந்நிலையம் தற்போது மூடப்பட்டிருப்பதால் சிற்றலை வரிசையில் செய்தி கேட்டுக் கொண்டிருந்தார். சிற்றலை வரிசையிலும் ஒரே இரைச்சலாக இருந்தது. எதையோ முணு முணுத்தபடி செய்தியைக்



## எஸ். நாகராஜன்

கேட்டுக் கொண்டிருந்தார் அப்பா. அந்த நேரம் பார்த்து வேறோர் நிலையத்திலிருந்து வந்த நிகழ்ச்சி புகுந்து கொண்டது. பல தடவைகள் இவ்வாறான தொல்லைகளுக்கு அப்பா ஆளானாரோ என்னவோ றேடியோவைத் தூக்கி ஒரேயடியாக நிலத்தில் அடித்துவிட்டு 'இனி இந்த றேடியோவும் வேணாம் இவனுகளர செய்தியும் வேணாம்.' என்றபடி சால்வையைத் தூக்கித் தோளில் போட்டபடி வீதிப்பக்கமாக நடந்தார்.

எங்களுக்கெல்லாம் ஒரே கவலை எவ்வளவோ காலமாகப் பாதுகாத்து வந்த அந்த றேடியோவை அப்பா திடீர் என்று உடைத்துவிட்டாரே என்று. றேடியோ உடைந்த நேரம் தொட்டு வீட்டிலிருந்த ஒருவரின் முகத்திலும் சந்தோசமில்லை. இனிச் சினிமாப் பாட்டு எப்படிக் கேட்ப தென்று தங்கச்சி கவலைப்பட்டுக் கொண்டிருந்தாள். நாடகம் கேட்க இனி எங்கே போவதென்று அம்மா உடைந்த றேடியோவின் ஸ்பீக்கர் துண்டையும் கையில் வைத்தபடி கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். எல்லோரையும்விடத் தம்பிக்குத்தான் மிகவும் கவலை. தம்பி ஓர் புது எழுத்தாளன். றேடியோவுக்கு கதை, கவிதை, கட்டுரை என்றெல்லாம் எழுதி அனுப்பிவிட்டு அது ஒலிபரப்பாகுமா என்று வானொலிக்கு அருகில் காத்துக் கொண்டிருப்பான். இவர்களையெல்லாம் எப்படி ஆறுதல் படுத்தி சமாதானப்படுத்துவதென்று தெரியாமல் யோசித்துக் கொண்டிருந்த நான் விடியும் வரை காத்திருந்தேன்.

மறுநாள் காலையில் கல்முனைக்குச் சென்று புது றேடியோவொன்றுடன் வந்த நான் "அந்த றேடியோ பழைய றேடியோ என்றதால பிழை இருந்திருக்கலாம். இது புது றேடியோ இதில எந்தப் பிழையும் இருக்காது. நல்லா மாதிரிப் பாடும்' என்று பெரும் அடி-அடித்தபடி றேடியோவைத் திறந்தேன். தமிழ்ச் சேவை அலைவரிசைகளில் அதே பல்லவிதான். எனக்கும் அந்தப் புது றேடியோவைத் தூக்கி உடைக்க வேண்டும் போலத்தான் இருந்தது. இருந்தும் ஏனைய சேவை நிகழ்ச்சிகளும் இவ்வாறுதான் இருக்கின்றதாவெனப் பார்த்த போது அவை மிகவும் துல்லியமாக இருந்தன. பிழை யாரிடம்?

# தெரியாத சங்கதிகள்

## திருமலை—சுந்தா

அந்த 'சென்றிக்கு' 25 மீற்றருக்கு முன்பாக 'நிறுத்துக....அனுமதி கிடைத்ததும் வரவும்.....' என்ற எனக்கு பிடித்தமான தமிழ் வசனம் என்னை வரவேற்றதால்....மிகவும் அவதியாக ஹொண்டா 200 இல் வந்த நான் ஆறுதலான சந்தோஷத்தில் நின்றேன்.

தெருவின் முன் பக்கமாக இருந்து 'சென்றி பொயின்ரைக்' கடந்து மூன்று லொறிகளும்; இரண்டு மினி வேன்களும்; ஒரு மாட்டு வண்டிலும் ஐந்தாறு சைக்கிள்களும் வந்தன.

நாலைந்து தெரிந்த முகங்கள் பற்களை காட்டின. சில முகங்கள் தலை ஆட்டின. நாலைந்து கைகளும் உயர்ந்து பதிந்தன.

எனது மோட்டார் சைக்கிளுக்குப் பின்னால் சில வாகனங்கள் நின்று கொண்டிருந்தன. ஆள் அரவம் இல்லை.

வாகன ஒழுங்குக்கு பொறுப்பாக நின்ற இராணுவ வீரர் கையினை உயர்த்தி எங்களை வருமாறு அழைத்தார். எனது மோட்டார் சைக்கிள் சென்றிக்குள் புகுந்து மெதுவாக ஓடத் தொடங்கியது.

எனக்கு அவர்களை பார்க்க பயமாக இருந்தது.

கொஞ்ச நேரத்துக்கு முந்தி பற்களை காட்டித்தானே செம்மையாக வாங்கிக் கட்டிக் கொண்டிருந்தேன்.

நான் என்ன ரோசம் இல்லாதவனா?

நானும் அவர்களை பார்க்காத மாதிரி என் வித்தைகளை மோட்டார் சைக்கிளுக்கு செய்து கொண்டிருந்தேன். என்ன செய்வது?



என் கஷ்ட நேரம். ஸ்ராட் தான் வரமாட்டேன் என்றதே!

அந்த இரண்டு இராணுவ வீரர்கள் என்னருகில் வந்தார்கள். "என்ன பிரச்சனை... உதவி செய்ய வேண்டுமா....?" என மிகவும் ஆறுதலாக கேட்டார்கள்.

நான் தலையை நிலத்தில் தொங்க போட்டுக்கொண்டே.... எனக்குத் தெரிந்த சிங்களத்தில் பதிலைச் சொன்னேன்.

"கொஞ்சம் சந்தோஷமாக முகத்தை நிமிர்த்தி....எங்களையும் மனிசராய் நினைத்து பதிலைச் சொல்லும்.... பேய்; பிசாசுகளோட கதைக்கிற மாதிரி கதைக்கிறாயே...! உதவ வந்த எங்களுக்கு ஒரு மரியாதைக்காவது ஒரு சிரிப்பு..."

நான் பயந்து: பயந்தே தலையினை நிமிர்த்தினேன்.

"எங்களுக்கும் உங்கட பொடியன்களுக்கும் சண்டை சண்டைதான். சண்டை எப்பவும் இல்லை. சமாதானமும் வரும். அதுக்கு நீங்க எங்களோட வித்தியாசமாக நடக்கக்கூடாது. இருக்கிறது கொஞ்ச காலம். இதுக்குள்ள சண்டை பிடிச்சு மண்டையை போட வேணுமா.....?"

அந்த இராணுவ வீரர்கள் இருவரும் மாறி மாறி....தங்கள் மொழியில் பேசிக் கொண்டிருந்தார்கள்.

என்னிடம் ஏற்பட்ட அந்த பயம்.... இப்போது மாறி அவர்களைப் பார்க்கத் தூண்டியது. பற்களுக்கு உடனடியாக சிரிப்பை வரவழைக்க கட்டளை போட்டேன்.

'அந்த சென்றியில் ஆக்களை சோதிக்கிறவர்கள் நான் சிரித்ததுக்கு இந்தா: அந்தா என்று ஏறிப்பாய்ந்து விழுந்தார்கள். ஆனால் நீங்களோ....மனிசன் மாதிரி சிரித்துப் பேசி கதைக்க சொல்லுறீங்க....எனக்கு இது... ஏதுமே புரியவில்லை. எனக்கு இவை தெரியாத சங்கதிகள்......' சொல்ல நினைத்தேன்.

நல்லகாலம் என் சந்தோஷ மிதி....

மோட்டார் சைக்கிளுக்கு 'ஸ்ராட்' வந்து விட்டது.

சென்றிக்கு வெளியே வந்ததும் மோட்டார் சைக்கிளை ஓரமாக நிற்பாட்டச் சொன்னார்கள்.

மோட்டார் சைக்கிளை துருவித் துருவி ஆராய்ந்தார்கள். அடையாள அட்டையை பார்த்தார்கள். நாலு கேள்விகளை கேட்டார்கள். ஏற...இறங்க....பார்த்தார்கள்.

நான் எல்லாவற்றிற்கும் சிரித்தபடியே பதிலை சொல்லிக்கொண்டிருந்தேன். என்மடியில் கனம் இல்லை. பிறகேன் இவர்களுக்கு பயப்பட வேண்டும்?

"என்னடா சிரிக்கிறாய்....பிளேன் விழுத்தின தலைக்கனமோ....." அந்த சென்றி இராணுவ வீரர் சிங்களத்தில் மள....மள... வென்று சொற்களால் குண்டுமாரி பொழிந்து கொண்டிருந்தார்.

அவரின் குண்டுகளினால் தாக்கப்பட்ட நான், மிகவும் மரியாதையுடன் வாயினை இறுக மூடிக் கொண்டேன். முகத்தை 'உம்' மென்று மாற்றலானேன்.

போக அனுமதி கிடைத்தது. மோட்டார் சைக்கிளை தெருவுக்கு உறுட்டி...சீற்றில் அமர்ந்து.... கிக்கை மிதித்தேன்.ஊகும்... என்ன காலமோ 'ஸ்ராட்' வரவில்லை. பெற்றோல் தடைப்படுகிறது என நினைத்து சோக்கை இழுத்து கிக்கை மிதித்தேன். 'ஸ்ராட்' வரவில்லை.

என்ன செய்யலாம்? இருபது மைல்கள் அவசரமாக போக வேண்டிய பயணம். இராணுவ வீரர்களைத் தவிர அந்த சென்றி பொயின்ரில் அப்போது ஆள் அரவம் இல்லை.

தெருவில் வாகன ஒழுங்குக்காக நின்ற இரண்டு இராணுவ வீரர்கள் என்னைப் பார்த்தார்கள்.



படிப்பகம்

# இலக்கிய நயம்






## இழந்தது நான்கு!

தருவது ரசிகன்

**ப**டைகள் புகுந்தன. கோட்டையின் அரண்கள் தகர்ந்தன.

வெற்றிக் களிப்பில் வீரர்கள் கோஷம் வானைப் பிளந்தது.

வெற்றி. வெற்றி. வெற்றி.

எதிரிகள் பணிந்தனர். கோட்டை வீழ்ந்தது. இனி என்ன தேவை.

வெற்றிக் களிப்பு கள்ளாக வெறித்தது. தொட்டுக்கொள்ளவும், இன்பம் துய்க்கவும் பெண்கள் தேவை. விழிகள் தேடின.

கள்வெறியூறும் கனியிதழ் எங்கே? கவிபல புனைய களமதுவாகும் கட்டழகெங்கே? வீரர்கள் தேடினர். வீடுகள் எங்கும் பாவையர் நடுங்கிப் பதுங்கிக் கொண்டனர்.

ஆடல் அரங்குகள் நிரம்பிவழிந்தன.

பீப்பாய்கள் நிரம்பிய கள்மதுவெல்லாம் காலியாகிப் போயின.

"தொட்டால் சுகம். தொடர்ந்தால் இதம். அறியலாம் நயம். வாழ்வே பரவசம். திரை மூடிய மாங்கனி, தெவிட்டாத தேன்கனி. வா நீ, ஏன் தாமதம்?"

விலை மகளிர் கடை விரித்தனர். கடை கொள்ளாமல் வீரர்கள் குவிந்தனர்.

"கொஞ்சும் இடை உன்னிடம் கெஞ்ச வேண்டும். காளையே அதுதான் உன்கலை."

விலை மகளிர் போதை ஏற்றினர். கரும்புக் கொல்லையில் மத யானைகள் மெய்மறந்தன.

"பெண் மேனியே ஒரு களம். பதுங்கலாம். பாயலாம். பசிக்கு அமுது அருந்தலாம். ஐம்புலன்களும் மயக்க ரசிக்கலாம். ஆறு இதுவென்று நீந்திக் குளிக்கலாம். ராகம் இதுவென்று மீட்டி மகிழலாம். பளிங்கு மேனியில் நழுவிப் பார்க்கலாம். அனைத்தும் முடிந்தபின் தருவதை வாங்குவோம்."

கூவி விற்றனர் உடலை. தாவியணைத்தனர் வீரர்.

இரவுக்கும் முடிவுண்டு. இன்ப பொழுதுக்கு முடிவில்லை. இனிய உறவுக்கு தடையில்லை. தேன் அள்ளிக் குடித்தனர். வான் இடிந்துபோனாலும் தெரியாத உலகுக்குள் சென்றனர்.

விலை மகளிர் போதவில்லை. 'வேரில் பழுத்த பலா', இளம் பூங்கொடியில் பூத்த புதிய மலர் தேவை என்று இல்லக் கதவுகளை இடிக்கத் தொடங்கினர்.

□□

"**ம**ன்னா இது கொடுமை. படை எடுக்க மட்டுமே தாங்கள் கொடுத்தீர் அனுமதி! பாவையரைச் சிறைப்பிடிக்க யார் கொடுத்தார் அனுமதி?"

அமைச்சர் சீறினார்.

"புரிகிறது அமைச்சரே! கட்டுப்பாடாய் நடப்பார்கள் என்று தான் போர் முரசு கொட்டிச் செல்ல அனுமதித்தேன். கெட்டுப்போய் இப்படிக் குட்டிச்சுவராய் மாறுவார்கள் என்று நான் நினைத்தேனா?"

என்றான் மன்னன் முகத்திலாடிய மனக்கவலையோடு!

"பசுக்கன்று தன் மைந்தன் தேர்க்காலில் பட்டுச்செத்தது என்று அவன் சிரசறுத்தான் ஒரு மன்னன். வாடியது முல்லைக் கொடி என்று தன் தேர் கொடுத்து சிறப்புற்றான் மற்றொரு மன்னன். ஆனால் நீரோ....வெறிகொண்ட உன் படைகள் மாசு மருவற்ற மாதர்களை விளையாடும் களமாக்கி, வேட்டை மிருகங்களாய் உருவேறி ஆடும்போது, என்செய்வேன், ஏது செய்வேன் என்று தலை குனிந்து செயலறுந்து நிற்பதுதான் தர்மமாமோ?"

அமைச்சரின் வார்த்தைகளில் தீப்பிழம்புகள். மன்னவன் நெஞ்சு தீயில் விழுந்து பஞ்சானது.

"ஐயோ! அமைச்சரே!! தரம்கெட்ட தளபதி, மறம் கெட்ட படைகள். கரம் விட்டுப்போய்விட்டது கடிவாளம்! வெற்றி என்னும் வடம்பிடித்து வருவார்கள் என்றிருந்தேன்; தடம்மாறி வீனத்தனம் என்னும் விஷம் கொட்டிக் கொண்டிருக்கிறார்களே!"

மன்னன் குரல் தழுதழுத்தது.

"நீயே தலைவன், நீயே தூற்றுகிறாய் நின் படைகளை! தலைவனின் நம்பிக்கையை இழந்த படை தும்பிக்கை இழந்த யானைக்கு சமன். நாளை உன் சேனை செருக்களத்தில் அருந்தப்போவது வெற்றியென்னும் தேனையல்ல, விஷக்கள்ளை!"

அமைச்சர் அகன்றார்.

□□

**நி**ரம்பிய போதையில் ஆடல் அரங்கினுள், கள்ளுக்குள் விழுந்த வண்டுகளாய் கிடந்தனர் வீரர்கள்.

பொது மகளிரின் மேலாடைகள் நழுவ, போர்க்களத்து வீரர்களின் இதயங்களும் நழுவிக்கொண்டிருந்தன.

கண்டது பாதி, காணாத மீதி! காண வேண்டும் என்ற ஆவல் களிவெறியூட்டியது.

வெளியே ஆடல் அரங்கம் நாட்டை இழந்த படையால் முற்றுகையிடப் பட்டுக்கொண்டிருந்தது.

முற்றுகையறியும் பக்குவமற்று, பாவையர் மேனியில் கனிகளின் பதம் அறிந்து கொண்டிருந்தனர் வீரர்கள்.

"தா...தா உன்னைத் தா"

என்றனர் வீரர்கள்.

"வா....வா உனக்குத்தான். வாசமலர் உனக்குத்தான்; தா தா பொன்னைத்தா. கொள்ளையிட்ட பொருளைத்தா"

என்றனர் காரியமே கண்ணாக இருந்த பொது மகளிர்.

முற்றுகை வெளியே இறுகிக்கொண்டிருந்தது.

அனைத்து ஆடல் அரங்குகளும், பொது மகளிர் இல்லங்களும் முற்றுகை வியூகத்திற்குள் சிக்கிக்கொண்டிருந்தன.

"சிற்றிடை செய்ததோ பாவம், கரம் பட்டுச் சிவந்ததென்ன கோலம்?"

"வாள் பிடித்த காளைக்கு வந்ததொரு வேகம். அதனாலே ஆனதிந்த செங்காயம்!"

குழைந்தனர், பெற்றனர், கொடுத்தனர்.

இப்போது வீரர்கள் முன் உருவிய வாள்களுடன் நின்றனர் நாட்டை இழந்த படை வீரர்கள்.

இப்போது இழந்த நாடு மீண்டும் அவர்கள் வசம்.

போருக்கு வந்து, பாவையர் விழி வாளுக்கு பணிந்து, கள்ளூறும் இன்பக் கேணியில் வீழ்ந்தவர் வெற்றியை தொலைத்தனர்.

விசாரணை மன்றம் கூடியது. வதைபட்ட பெண்கள் முதலில் உதை கொடுக்க வேண்டும். அதன் பின்னரே இவர்களை சிறையிட வேண்டும்!"

மன்றம் தீர்மானித்தது.

□□

**ப**டையெடுத்து தோல்விகண்ட நாட்டிலும் மன்னனின் சபை கூடியது.

"பார்த்தீரோ மன்னவா, பக்கத்து நாட்டிலே நம் படைபடும் பாட்டை!"

"இங்கிருந்து சென்றபோது வீரர்களாய்த்தானே சென்றனர். வீரத்தையெல்லாம் எங்கே தொலைத்தனர்?"

உபதளபதி வினாதொடுத்தார். மன்னன் அமைச்சரை நோக்கினான். 'அமைச்சரே அதற்குப் பதில் சொல்லும்' என்ற பொருள் அதில் இருந்தது.

அமைச்சர் பதில் சொன்னார்.

"நமது படை நான்கு படைகளை இழந்துவிட்டது. நாலும் இழந்த படையை எதிரிப்படை குறிவைத்து வென்றுவிட்டது!"

உபசேனாதிபதிக்குப் புரியவில்லை.

"அது என்ன அமைச்சரே நாலு படை"

"சொல்கிறேன், தலைவனின் நம்பிக்கை, வீரம், மானம், வியத்தகு ஒழுக்கம். இவைதான் அந்த நான்கு படைகள்!"

சபை மௌனித்தது.

தோல்வி ஏன் என்று கிரகித்தது.

அமைச்சர் சொன்ன கருத்தை திருவள்ளுவரும் 'படைமாட்சி' என்ற பொருளில் பசுமரத்தாணிபோல பதிய வைத்திருக்கிறார்.

**"மறமானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்**
**என நான்கே ஏமம் படைக்கு"**

குறள்-766.அதிகாரம்-77.

## குறுக்கெழுத்துப் போட்டி இல-114

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | ■ | 3 | ■ |
| | ■ | 4 | | | | |
| 5 | | | | ■ | | ■ |
| | ■ | | ■ | 6 | | 7 |
| ■ | 8 | ■ | 9 | | | |
| 10 | | | ■ | | ■ | |
| ■ | 11 | | | | ■ | |

### இடமிருந்து வலம்

01. இது தன்னைச் சுடும் என்பார்கள்.
04. எமது சூழல் இவ்வாறு இருந்தால் தொற்றுநோய்கள் பரவாது.
05. ஒருவரைப் பற்றி உயர்வாகப் பேச இதனுடன் ஒப்பிடுவார்கள்.
09. சில உணவுப் பொருட்களைச் செய்யும்போது சுவைக்காக இந்தப் பருப்பையும் சேர்ப்பார்கள்.
10. சிறிய மலைகள் இப்படி அழைக்கப்படும்.
11. கண்ணிற்கு மேல் இருக்கும்.

### மேலிருந்து கீழ்

01. வித்தை பயின்றால் குருவுக்கு அளிக்க வேண்டிய காணிக்கை
02. மகாபாரதத்தில் வரும் ஒரு பாத்திரம்.
03. இரண்டாம் உலகப்போரில் ஜப்பானில் அணுகுண்டு வீசப்பட்ட பின்னரே ஜப்பான் இதற்கு இடங்கொடுக்க வேண்டியதாயிற்று.
06. புலவர்களின் ஆக்கங்களில் இது சிறப்பாக மிளிரும்.
07. அசோகவனத்தில் சிறைவைக்கப்பட்ட சீதைக்கு உற்ற துணையாய் நின்றவள்.
08. இந்துக்கள் விரதம் என்பார்கள்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 26.08.1995இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-114
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-112ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 செ | ல் | வ | ம் | ■ | 2 க | ளை |
| ங் | ■ | 3 ய | ன் | ன | ல் | ■ |
| 4 கோ | 5 வி | ல் | ■ | 6 ப | லூ | ன் |
| ல் | சு | ■ | 7 க | வ | ரி | ■ |
| ■ | வா | ■ | டி | ழ | ■ | 8 அ |
| 9 நி | ச | ப் | த | ம் | ■ | ட் |
| 10 சி | ம் | ம | ம் | ■ | 11 கோ | டை |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 112இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்:**

1. திருமதி. ஆர். சுஜாதா, கொழும்பு-6.
2. கே. சதீஸ்குமார், வவுனியா.
3. எம். அஹ்ஸன், சாய்ந்தமருது-05.
4. செல்வி. எல். சகானா, மாத்தளை.
5. செல்வி. சுதாராணி, திருகோணமலை.
6. வி. சஞ்சய் குமார், வத்தளை.
7. எஸ்.ஏ. அமீன், களுத்துறை.
8. செல்வி.ஆர். அக்ஸலா, கொஸ்லாந்தை.
9. எம். கவிதா, மட்டக்களப்பு.
10. திருமதி. சக்கீலா வஹாப்தீன், கல்பிட்டி.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.






## சிந்தியா பதில்கள்

இனப்பிரச்சனைக்கான அரசின் 'தீர்வுத் திட்டம்' அர்த்தமுள்ளதாகுமா?

ஏ.எச்.ஜெனீஸ் முஹம்மத்-அக்குறணை.

தீர்வு யோசனைதானே சொல்லப்பட்டிருக்கிறது. தீர்வு எதுவென்று இறுதியாகட்டும்-கருத்துச் சொல்லலாம்.

□□

ரஜினிகாந்த் தற்போது என்ன முடிவில் இருக்கிறார்?

மா.ரவிச்சந்திரன்-செங்கலடி.

திருப்பதி தேவஸ்தானத்தில் நடந்த விழாவில் ஆந்திர முதல்வர் என்.டி.ராமராவும், ரஜினிகாந்த் அரசியலுக்கு வரவேண்டும் என்று அழைப்பு விடுத்திருக்கிறார். "அடுத்து எனக்கு எந்தப்பதவி கிடைக்குமோ என்பது ஆண்டவன் விட்ட வழி" என்று ரஜினி அங்கு பேசியிருப்பதுதான் லேட்டஸ்ட் புதிர். செல்வியை ரொம்பத்தான் குழப்புகிறார் ரஜினி.

□□

யுத்தத்தால் இலங்கையின் பொருளாதாரம் எந்தளவு பாதித்துள்ளது?

எம்.ஐ.நிவாஸ்-அக்கரைப்பற்று-06.

ஒரு ரூபாய் முத்திரை ஒட்டியிருக்கிறீர்கள் அல்லவா? 83 இல் முத்திரை என்ன விலை? ஏறுமுகமாக வேண்டியதெல்லாம் இறங்குமுகமாக இருக்கிறது. இறங்குமுகமாக வேண்டியதெல்லாம் ஏறுமுகமாக இருக்கிறது. பொருளாதாரம் ஆறுமுகமும் பன்னிருகைகளுமாக வெளிநாடுகளை நோக்கி நிற்கிறது.

□□

கூட்டணியினர் அரசின் தீர்வு யோசனைகளை வரவேற்றிருப்பது பற்றி?

கே.சங்கரப்பிள்ளை-திருக்கோணமலை.

ஆச்சரியமேயல்ல. இனப்பிரச்சனை தீர்வு முயற்சிகள் ஒரு தொடர்கதை மாதிரி. அதன் ஒவ்வொரு அத்தியாயத்தையும் புரட்டிப்பாருங்கள், கூட்டணியினர் எதையுமே வரவேற்கத் தவறியதேயில்லை என்று தெரியும். எதிர்ப்புத் தெரிவித்தால்தான் ஆச்சரியம்.

□□

டியர் சிந்தியா! எந்தப் பெண்ணிலும் இல்லாத ஒன்று-அது என்ன?

க.சுதர்சன்-செங்கலடி.

பயங்கரமான மீசை.

□□

'அசுரன்' படம் பார்த்தீர்களா? தூள் தானே?

ஏ.மகேந்திரன்-நுவரெலியா.

தூள்தான்- செல்வமணியின் கையிலிருந்த பணம்!

□□

தொலைக்காட்சி விவாதங்களில் கலந்து கொள்ளலாமே! அழைத்தால் செல்வீர்களா?

சி.பானுதேவி-மஸ்கெலியா.

விவாதமா? அது எங்கே நடக்கிறது? கருத்துச் சுதந்திரம், கலந்துரையாடல் என்ற பெயர்களில் கரு(ச்)த்துச் சிதைவல்லவா நடந்துகொண்டிருக்கிறது!

□□

விஜயகாந்த் படம் 'காந்தி பிறந்த மண்' எப்படி இருக்கிறது?

ம. கேதீஸ்-வத்தளை.

காந்தி என்ற பெயரைக் கேட்டுவிட்டு சாதுவான விஜயகாந்தை தேடிப்பார்த்தால், ம்ஹூம்.... மனிதர் அடிக்கு அடி, கடிக்கு கடி என்று தூள் கிளப்புகிறார். நவகாந்தி இப்படித்தான் இருந்தாக வேண்டுமோ?!

□□

செவாலியே திலகத்திற்கு இவ்வாண்டும் தாதா சாகிப் பால்கே விருது கிடைக்கவில்லையே?

பி.ராஜா-பொகவந்தலாவ.

நீங்கள், நான், நம்மைப்போல பல கோடி இரசிகர்கள், இரசிகைகள் இப்படி ஒரு கேள்வியை கேட்டுக்கொண்டிருக்கிறார்களே, இதைவிடவா பெரிய விருது வேண்டும் சிவாஜிக்கு?

□□

சிந்தியா! இறைவன் மனிதனைப் படைக்காவிட்டால்...?

எம்.ஏ.எம்.பாஜித்-கல்பிட்டி

அவனைப் பற்றி சொல்ல ஆளே இருந்திருக்காது.

□□

தலைநகரில் பிணங்கள் மிதப்பது பற்றி?

ஏ.செல்வின்-குருநாகல்.

எரியும் நெருப்புக்கு எண்ணெய் வார்க்கும் புத்திசாலித்தனமற்ற கோழைத்தனம்.

□□

சின்ன விஷயங்களுக்கெல்லாம் அடிக்கடி கோபப்படுகிறவர்களை என்ன செய்யலாம்?

ஜனனி மதுரலிங்கம்-கொட்டாஞ்சேனை.

கோபப்படவேண்டிய பெரிய பெரிய விஷயங்கள் எல்லாம் இருப்பதை சுட்டிக் காட்டலாம்.



படிப்பகம்

www.padippakam.com

# மகாபாரதம்

அங்கம் 90

இவ்வாரம் (20.08.95 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரீ.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

**காலத்தின் குரல்:**

குருச்சேத்திரமுனையில் கர்ணன் பலியானதனால்
தருமத்தின் தலைமகனை தரணியதுமிழந்ததின்று!
கதிரவனின் ஒருமகனாய் கர்ணனவனுதித்தாலும்
விதியவனை சதிசெய்து வேறுவழி விரட்டியது!
வெங்கொடுமைச் சாக்காடு வீரர்களை விழுங்கியது;
கங்கை மகன் பீஷ்மரையும் கணைப்படுக்கை வீழ்த்தியது
நிகரிலாதொரு மைந்தன் நீழ்துயிலில் வீழ்தல் கண்டு
பகலவனும் தனதொளியை படுவானில் மறைத்து நின்றான்!

**—காட்சி தொடக்கம்—**

குருச்சேத்திரம்-கர்ணனின் சடலத்தைச் சுற்றி கவுரவர்கள் நிற்கின்றனர். அஸ்வத்தாமன் கர்ணனின் தலையினைப் பொறுக்கி உடலோடு பொருத்துகிறான். சகுனி, கிருபாச்சாரியார், மதுரா மன்னர் சல்லியன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

**சகுனி:** *(அழுதவண்ணம்)* ஓ ராதேயா! நீ உண்மையில் ஒரு மாவீரன்தான்! நான் உன்னுடன் துரியோதனனுக்காகவே நெருங்கிப் பழக நேர்ந்தது. ஏனோ என் மனம் உன்னைப் பற்றி சற்றுக் குறைவாகவே எண்ணியிருந்தது. ஆனால் ராதேயா! தேரோட்டி மகனே! அங்கத்துக்கதிபனே! நீ இன்று உன் சாவை அணைத்துக் கொண்டு பெருமை தேடிவிட்டாய்! மாவீரனே! தானத்தில் சிறந்தவனே! காந்தார நாட்டு மன்னனின் இறுதி மரியாதையை ஏற்றுக்கொள்!

**—காட்சி மாற்றம்—**

துரியோதனனின் பாசறை-காயங்களுக்கு மருத்துவர்கள் மருந்து தடவிக் கொண்டிருக்கும் போது சல்லிய மன்னர் வருகிறார்.

**துரி:** மதுரா மன்னரே! தங்களுடைய மகுடம் எங்கே?

**சல்லி:** துக்கத்தில் பங்கேற்கவரும் எனக்கு மகுடம் அணிவது சரியெனத் தோன்றவில்லை!

**துரி:** மதுரா மன்னரே! ராதேயனை தனியாகவிட்டு விட்டு, வேறு யார் இறந்த துக்கத்தைப் பகிர்ந்து கொள்ள வந்தீர்கள்? தேர்ச்சாரதியின்றி என் நண்பன் எவ்வாறு போரிடப் போகிறான்? அந்த வாசுதேவ கிருஷ்ணனுக்கு நிகரான எவரையாவது தங்களிடத்தில் ராதேயனுக்கு உதவியாக அமர்த்திவிட்டு வந்தீர்களா?

**சல்லி:** இளவரசரே! தேரில் சவாரி செய்வதற்கு எவருமில்லாதபோது சாரதி என்ன செய்ய முடியும்?

**துரி:** *(அதிர்ச்சியடைந்தவனாக-அழுத வண்ணம்)* இல்லை! இருக்காது...! நீங்கள் கூறுவது உண்மையல்ல என்று கூறுங்கள்! மதுரா மன்னரே! இத்தகைய பொய் வதந்திகளைக் கூறுவதில் பாண்டவர்கள் தேர்ந்தவர்கள்! அஸ்வத்தாமன் இறந்ததாக பொய் கூறித்தானே துரோணாச்சாரியாரின் முடிவுக்கு அடிகோலினார்கள்! எனது நண்பன் உயிருடன் தான் இருக்கிறான் என்பதைக் கூறுங்கள்!

**சல்லி:** காந்தாரி மைந்தனே! தேர்ச்சாரதியாக இருந்தும் எமது தலைமைத் தளபதியைப் பாதுகாக்க என்னால் முடியாமற்போய் விட்டது. மன்னியுங்கள்! கர்ணனின் வீரத்துக்கும் அர்ச்சுனனின் கோழைத் தனத்துக்கும் நானே சாட்சி! எத்தனையோ வீரர்களைப் பெற்றமையினால் பாரதநாடு பெருமை அடைந்திருக்கலாம். ஆனால் கர்ணனைப் போன்றோர் ஒரே தடவைதான் அவதரிக்க முடியும்!

துரியோதனன் தொடர்ந்து அழுகிறான். அவன் தோளில் தட்டி சல்லியன் சமாதானப்படுத்துகிறான்.

**துரி:** என் நண்பனைப் பிரிந்து நான் எவ்வாறு உயிர் தரிக்கப்போகிறேன்? எனது 99 சகோதரர்களை இழந்தும் நான் துன்பப்படவில்லை! ஆனால் நண்பனே! உன் பிரிவை நான் எவ்வாறு தாங்கப்போகிறேன்..? ஆனால் என் நண்பனைக் கொன்றமைக்கு பாண்டவர்களை நான் சும்மாவிடப் போவதில்லை!

துரியோதனன் தனது காயத்திலிருந்து வடியும் இரத்தத்தை விரலில் எடுத்து சல்லியன் நெற்றியில் திலகமிடுகிறான்.

**துரி:** தங்களை உடனடியாகப் படைத் தலைமைத் தளபதியாக நியமிக்கிறேன். துரதிஷ்டவசமாக தங்கள் அணியில் இணைந்து போரிட இன்று என்னால் முடியாது. எனது நண்பனை நினைத்து துக்கப்படுவதற்கு இன்றைய நாள் எனக்கு அவசியம்!

**காட்சி மாற்றம்**

படைத்தளபதி சல்லியன் யுதிஷ்டிரருடன் பொருதுகிறார். வில், வாள், பின்னர் ஈட்டி எறிந்து போரிடுகின்றனர். மற்றொருபுறம் சகுனி சகாதேவனுடன் பொருதிய வண்ணம் பாண்டவர் அணியை துவம்சம் செய்கிறான். பயங்கரமாகச் சப்தமிடுகிறான்.

**சகுனி:** சகாதேவா! என் மருமகனே! எங்கே பாண்டவரில் ஏனையோர் ஓய்வெடுக்கச் சென்று விட்டனரோ?


**சகா:** காந்தார மன்னரே! இது சூதாடு மண்டபமல்ல- போர்க்களம்! பகடைக்கு இங்கு இடமில்லை- படைக்கலங்கள் தான் மோத வேண்டும்!

**சகுனி:** மருமகனே! போர்க்களமாயினும் சூதாட்டமேடையாயினும் தந்திரம், சூழ்ச்சி இரண்டுக்கும் தேவைதான்!

சகாதேவனுடைய தேரை சகுனி உடைக்கிறான். சகாதேவன் கீழே விழுகிறான். சகாதேவன் எறிந்த ஈட்டி சகுனியின் தேரை உடைக்க சகுனியும் கீழே விழுகிறான்.

**சகா:** பொய்க்கும் ஏமாற்றுக்கும் இருப்பிடமானவனே! இதோ பன்னிரெண்டு....!

-சகுனி சாய்கிறான். சகாதேவனும் காயமடைகிறான், திடீரென எழுந்த சகுனி வாளை உருவிக்கொண்டு சகாதேவனைத் தாக்க வரும்போது சகாதேவனின் வாள் சகுனியின் உடலில் பாய்ச்சப்படுகிறது. மடிகிறான் சகுனி.



மற்றொருபுறத்தில் யுதிஷ்டிரர் சல்லியனை வீழ்த்துகிறார்.

**—காட்சி மாற்றம்—**

பீஷ்மரின் அம்புப்படுக்கை அருகே துரியோதனன் வருகிறான்.

**துரி:** *(அழுதவண்ணம்)* பிதாமகரே! நான் தனித்து விடப்பட்டு விட்டேன். என் நண்பன் ராதேயனை இழந்து விட்டேன்...!

பீஷ்மருடைய கண்களிலும் கண்ணீர் பெருகுகிறது

**பீஷ்ம:** ஒரு சத்திரியன் இவ்வாறு அழுவது பொருந்தாது. இப்படி என் முகத்துக்கு அருகே வா...!

**துரி:** என் தம்பிமாரோ துச்சாதனனோ இறந்தபோது நான் அழவில்லை பிதாமகரே! ஆனால் நண்பன் ராதேயனைப் பறிகொடுத்ததுடன் நான் சகலவற்றையும் இழந்துவிட்டேன்!

**பீஷ்ம:** மகனே! ராதேயனுக்கு இந்த உலகு தந்த ஒரே பரிசுதான் அவனுடைய இறப்பு! அவனை ராதேயன் என்று அழைப்பது தவறு! அவன் குந்தேயன்-ஆமாம் குந்தியின் மகன்!

**துரி:** *(அதிர்ச்சியடைந்தவனாக)* குந்தி மைந்தனா?

**பீஷ்ம:** கர்ணனுக்கு தன் தாய் குந்தி என்பது எப்போதோ தெரிந்திருந்தும் அவன் உன்னைச் சார்ந்து நின்று உனக்காகவே உயிர்விட்டான் மகனே!

**துரி:** பிதாமகரே! கர்ணன் குந்தி சித்தியின் மகனா? பாண்டவர்களின் சகோதரனா? அது தெரிந்திருந்தும் என் அணி சேர்ந்து நின்று எனக்காகவே உயிர்விட்டானா?

**பீஷ்ம:** ஆமாம்! இதுதான் உண்மை மகனே! ராதேயன் என்று அழைக்கப்பட்ட கர்ணன் உண்மையில் குந்தியின் மூத்த புதல்வன்! அத்தகைய வீரனுக்காக எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்!

**—காட்சி மாற்றம்—**

போர்முனையில் கர்ணனின் சடலம், மண்ணில் புதைந்து விட்ட தேரின் அருகே கிடக்கிறது. ஏனைய சடலங்களை வீரர்கள் பொறுக்கி எடுக்கின்றனர். குந்தி கர்ணனின் சடலத்தை அடையாளம் கண்டு அருகே வந்து அழுகிறாள். கிருஷ்ணருடன் அவ்விடம் வந்த பாண்டவர்கள் குந்தி அழுவதைக் கண்டு திகைக்கின்றனர்.

**யுதிஷ்:** அம்மா! எமது பிரதான எதிரியின் அருகிலிருந்து தாங்கள் ஏன் அழுகிறீர்கள்?

**கிருஷ்:** மூத்தண்ணா! அவர் அழட்டும்! வாருங்கள் நாம் போவோம்!

**யுதிஷ்:** இல்லை! இந்த நிலையில் அம்மாவை விட்டுச் செல்லலாகாது, அம்மா! அங்கத்துக்கரசன் கர்ணனின் உடலை வைத்துக்கொண்டு தாங்கள் ஏன் அழவேண்டும்?

**குந்தி:** *(கண்ணீரைத் துடைத்துக் கொண்டு)* இதோ கண்ணீரைத் துடைத்துக் கொண்டேன்! போதுமா? போய் இறந்து கிடக்கும் போர் வீரர்களுக்கான இறுதிக் கிரியைகளைச் செய்யுங்கள்! போங்கள்! *(மீண்டும் அழுகிறார்)*

**அர்ச்:** தாயே! இந்த தேரோட்டி மகனுக்காக தாங்கள் ஏன் அழ வேண்டும்? காரணத்தைக் கூறுங்கள் அம்மா!

**குந்தி:** நான் உண்மையைக் கூறினால் உங்களுக்கு பேரதிர்ச்சியாக இருக்கும் மகனே! உங்கள் வில் தோளிலிருந்து கீழே விழுந்து விடும்! என்னைக் கண்ணீர் வடிக்க விட்டு அப்பால் சென்று விடுங்கள்! கண்ணீரை நான் அடக்கி வைத்தால் அது தேங்கி இந்த உலகத்தையே மூழ்கடித்துவிடும்!

**யுதிஷ்:** வாசுதேவா! தாங்களாவது அம்மாவை அமைதியடையச் சொல்லலாகாதா? எதிரியான ராதேயன் இறந்தமைக்காக இவர் ஏன் துயரடைய வேண்டும்?

**குந்தி:** இவன் ராதேயனல்ல - குந்தேயன்!

எல்லோரும் அதிர்ச்சியடைகிறார்கள்.

**யுதிஷ்:** என்ன குந்தேயனா....? தங்கள் மகனா தாயே?

**குந்தி:** ஆமாம்! கர்ணன் என் சொந்த மகன்! உங்கள் மூத்த சகோதரன்!

**அர்ச்:** என்னம்மா சொல்கிறீர்கள்? இவர் எங்கள் அண்ணாவா?

குந்தி தலை அசைக்க, கிருஷ்ணரும் ஆமோதித்து தலை அசைக்கிறார்.

**யுதிஷ்:** இத்தகைய ஒரு முக்கியமான சம்பவத்தை எங்களிடமிருந்து தாங்கள் இதுகாலவரை மறைத்திருந்தீர்களா அம்மா? இல்லை! இதனை நம்பவே முடியாது தாயே!

**குந்தி:** ஆமாம்! மறைத்துத்தான் வைத்திருந்தேன்! அந்தக் கொடுமைக்காக ஒவ்வொரு நாளும் நான் செத்துப் பிழைத்தேனடா மக்காள்! தேரோட்டி மகன் என்று என் மகன் கர்ணனை ஒவ்வொரு முறையும் எவராவது வசை கூறும்போது எனது இருதயத்தை பல ஈட்டிகள் ஒன்றாகக் குத்திப் பிளப்பது போன்ற வேதனையை அடைந்தேன்! வேதனையின் விளிம்பில் துயருற்ற போதும் எவரிடமும் உண்மையைக் கூறமுடியாதவளாகத் துடித்தேன்!

**யுதிஷ்:** தாயே! தாங்கள் மறைத்த இந்த உண்மையினால் தான் இந்தப் போர் நிகழ்ந்து எண்ணற்ற உயிர்களைப் பலி வாங்கியது. தங்களுடைய ஆதரவற்ற நிலையினால் பாரத சமுதாயமே பெரும் பேரிழப்புக்களைச் சந்திக்க நேர்ந்தது. போர்க்களத்தில் ஏற்பட்ட ஒவ்வொரு உயிரிழப்புக்கும் தாங்களே பொறுப்பாளி! எங்கள் மூத்த சகோதரனைக் கொன்ற கொலைகாரர்களாக எங்களை ஆக்கியதும், தாங்கள் உண்மையை மறைத்த கொடுமைச் செயலல்லவா தாயே? இதனால் பெண்கள் சமுதாயம் எந்தவொரு இரகசியத்தையும் நீண்ட நாட்கள் கட்டிக் காக்க முடியாமற் போகட்டும் என்று சபிக்கிறேன்.

**—காட்சி மாற்றம்—**

காந்தாரியின் கூடாரம்-துரியோதனன் தாயைப் பார்க்க வருகிறான்.

**துரி:** தாயே! சமாதானத்துக்கும் எனக்கும் இடையில் 17 நாட்களாக நடைபெற்ற பெரும் போரும் எண்ணற்ற உயிரிழப்புக்களும் உள்ளனவே! எனது அன்புக்குரிய ராதேயன் மற்றும் துச்சாதனன் ஆகியோர் உயிருடன் திரும்பினால் அல்லது பிதாமகர் அம்புப் படுக்கையிலிருந்து எழுந்து வந்தால் சமாதானம் பேசுவதற்கு தூண்டுதல் ஏற்படக்கூடும்! அவை எவ்வகையில் சாத்தியமில்லையோ, இவ்வேளையில் சமாதானம் பேசப்போவதும் சாத்தியமில்லை. அம்மா! துரியோதனன் ஒரு கோழை என்று வருங்கால சமூகம் என்னைத் தூற்ற நான் இடம் தரமாட்டேன்! ஆகவே தொடர்ந்து போரிடுவதைத்தவிர எனக்கு வேறு வழி கிடையாது தாயே! அதோ அந்தச் சந்திரன் அஸ்தமிக்கும் இந்த வேளையிலாவது எனக்கு வெற்றிகிட்ட வாழ்த்த மாட்டீர்களா?

**காந்தா:** இல்லை மகனே! எனது இத்தனை புதல்வர்களை இழந்த போதிலும் வெற்றிக்கான வாழ்த்தினை நான் உனக்குத் தரமாட்டேன்! இருப்பினும் சிவபக்தையான நான் உன்னை எவருமே வெல்ல முடியாத வரத்தினைஉனக்குத் தரமுடியும்! கங்கை சென்று நீராடிவிட்டு நேராக- பிறந்த மேனியனாக என்னிடம் வா!

**துரி:** நிர்வாணமாகவா தாயே?

**காந்தா:** நான் உன் தாயல்லவா? என்னிடம் என்ன வெட்கம்? வினாக்களை விடுத்து சொன்னபடி செய்!

***

காந்தாரி அழுது கொண்டிருக்கும்போது கிருஷ்ணர் வருகிறார்.

**கிருஷ்:** வணக்கம் தாயே!

**காந்தா:** கிரிதாரி...! ஓ மதுசூதனா! வாரும் *(கோபமாக)* இன்று உன்னை தேவகி மைந்தனே என்று அழைக்கத் தோன்றுகிறது!

**கிருஷ்:** என்னை எந்தப் பெயர் சொல்லி அழைத்தாலும் நான் ஏற்றுக்கொள்வேன் தாயே!

**காந்தா:** தேவகி மைந்தனே! 17 நாட்களுக்கு முன்னர் எனக்கு 100 பிள்ளைகள் இருந்தனர். இன்று உயிருடன் ஒரேயொருவன்தான் இருக்கிறான். இறந்துகிடக்கும் என் பிள்ளைகளின் அடையாளங்களை நீ அறிந்திருப்பாய்!

**கிருஷ்:** ஆமாம்! அதே வேளையில், இறந்து கிடப்பவர்களுள் தாங்கள் அடையாளம் காணாத ஒரு வீரனின் சடலமும் கிடந்தது. தங்களுக்குத் தெரிந்திருக்கும்! அவன்தான் குந்தியின் மூத்த புதல்வன்!

**காந்தா:** யார் யுதிஷ்டிரனைச் சொல்கிறாயா?

**கிருஷ்:** இல்லை அத்தை! யுதிஷ்டிரன் குந்தியின் மூத்த மகன் அல்ல....! ராதேயன் என்ற பெயரில் உலாவினானே! அவன்தான் குந்தியின் மூத்த மகன்! ஆகவே, எனது அத்தை குந்தியும் இறந்த வீரர்களுள் ஒருவனாக தன் மகனையும் அர்ப்பணித்து தன் பங்கினைச் செலுத்தியிருக்கிறார்.

**காந்தா:** என்ன அவன் குந்தியின் மகனா?

**கிருஷ்:** ஆமாம்! என்னுடைய அத்தையின் மகன் ஒருவனும் துரியோதனனுடைய அணியில் சேர்ந்து அவனுடைய சொந்தச் சகோதரர்களுக்கு எதிராக போர் புரிந்து, துரியோதனனுக்காகவே தன் உயிரை மாய்த்தான்! தான் குந்தியின் மகன்- பாண்டவர்களின் மூத்த அண்ணன் என்று உண்மை தெரிந்தும் எதிரணியில் நின்று போரிட்டு மாண்டான். ஆகவே இறந்தவர்களைக் கணக்கெடுப்பதை நிறுத்திவிடுங்கள்.!

**காந்தா:** நீயும் ஒரு தாய் என்ற நிலையிலிருந்தால் தான் தாயின் வேதனை உனக்குத் தெரியும். துவாரகை சென்று உன் தாயிடம் கேட்டுப்பார். குழந்தைகளைப் பறிகொடுத்த தாய் தன் துயரத்தைக் கூறுவாள். குழந்தையை வயிற்றில் சுமப்பதையும், பெற்றெடுக்கும் போது ஏற்படும் வேதனையையும் விட குழந்தையைப் பிரிவது மிகப் பெரிய துன்பம்! இதனாலேதான் நான் உன்னை இன்று சபிக்கப்போகிறேன்! வாசுதேவகிருஷ்ணா! இந்த யுத்தத்துக்கு நீயே சூத்திரதாரி! நீ மனம் வைத்திருந்தால் இந்த யுத்தத்தை தவிர்த்திருக்கலாம்!

**கிருஷ்:** நான் தடுத்திருக்கலாம் என்பது உண்மைதான் தாயே! ஆனால் இந்த யுத்தம் அவசியமானது!

**காந்தா:** *(கோபமாக)* யசோதையின் புதல்வனே! நான் கூறுவதைக்கவனி! சிவபக்தையான நான் இன்று உன்னைச் சபிக்கிறேன்! எனது குடும்பம் வாரிசின்றி அழிந்ததுபோல உன் யாதவகுலமும் அழியக்கடவது!

கிருஷ்ணர் அதிர்ச்சியடைகிறார்.

**கிருஷ்:** நான் போகுமுன்னர் தங்கள் தாழ் பணிந்து ஆசி பெற்றுச்செல்ல எண்ணியிருந்தேன். ஆனால் இப்போது தாங்கள் எனக்கு ஆசி வழங்கும் இக்கட்டில் துன்புற வேண்டாம். ஆகவே எனக்கு விடை தாருங்கள்!

கிருஷ்ணன் சென்றதும் காந்தாரி அழுகிறாள்.

**—காட்சி மாற்றம்—**

கங்கையில் துரியோதனன் குளித்துவிட்டுத் திரும்புகிறான். அவன் நிர்வாணமாக வருவதை கிருஷ்ணன் கண்டுவிடுகிறார்.

**கிருஷ்:** *(பலமாகச் சிரித்த வண்ணம்)* இளவரசர் துரியோதனனா.....? இந்தக் கோலத்திலா? உமது உடைகளை எங்கே பறிகொடுத்தீர்? உமது தாயாரிடம் போகிறீரா? இந்தக் கோலத்திலா அம்மாவிடம் போவது....?

**துரி:** அம்மாதான் இவ்வாறு வரும்படி கூறினார்!

**கிருஷ்:** அவள் உன்னைப் பெற்று வளர்த்தவள்! குழந்தையாக இருக்கும் போது தூக்கி எடுத்து மடிமீது வைத்துத் தாலாட்டியிருப்பாள்! இப்போது நீ முழு மனிதனல்லவா? தாயிடம், வளர்ந்துவிட்ட தனயன், பிறந்த மேனியனாகப் போவது பாரதநாட்டுப் பண்புக்கு ஒவ்வாததாயிற்றே! *(மீண்டும் பலமாகச் சிரித்த வண்ணம்)* போ...போ. தாயார் காத்துக்கொண்டிருப்பார்கள்!

துரியோதனன் குழப்பமடைகிறான். வாழை இலையை எடுத்து இடையைச் சுற்றிய வண்ணம் காந்தாரியின் கூடாரம் செல்கிறான்.

***

**துரி:** அம்மா! கங்கையில் நீராடிவிட்டு வந்திருக்கிறேன்!

**காந்தா:** வா மகனே! என் முன் நில் ! என் கண்களை மறைத்திருக்கும் துணியினை அவிழ்க்கப் போகிறேன்! உன் தம்பிமாரை நான் பார்க்கவில்லை! *(மகிழ்ச்சியாக)* இன்று உன்னை நான் பார்க்கப்போகிறேன்!

காந்தாரி தன் கண்களை மூடியிருந்த துணியை அவிழ்க்கிறார். கண்களிலிருந்து விசித்திரமான சக்தி துரியோதனனின் உடலைத் தாக்குகிறது. அவனுடைய இடையில் செருகப்பட்டுள்ள இலையைக் கண்டு துன்புறுகிறார்.

**காந்தா:** என்ன செய்து விட்டாய் மகனே? *(அழுகிறார்-கண்களை மீண்டும் மூடிக்கட்டிவிடுகிறார்)* என் கண்களால் பார்க்க முடியாத பகுதிகள் பலம் இழந்துவிடும். எஞ்சிய பகுதிகள் மிகவும் பலம் பொருந்தியதாக அமையும்! உன்னுடைய பெரியோர்கள் கூறுவதைக் கேட்டு நடந்திருப்பாயானால் நீ எவராலும் வெல்லப்பட முடியாத உறுதியினைப் பெற்றிருப்பாய்!

**துரி:** இந்த வாழை இலையை அவிழ்த்துவிடட்டுமா அம்மா?

**காந்தா:** நான் மந்திரவாதியல்ல மகனே! அந்த ஒரே ஒரு பார்வையில் இறைவன் மீதிருந்த முழு பக்தியையும் என் கணவன் மீதிருக்கும் பக்தியையும் என் குழந்தைகள் மீதுள்ள பாசத்தையும் இணைத்திருந்தேன்!

**துரி:** கவலையை விடுங்கள் அம்மா! நாளை பீமனுடன் கதாயுதப் போர் புரியப் போகிறேன். கதாயுதச்சமரில் இடைக்குக்கீழ் தாக்குவது மரபல்ல. நாளை அவனுக்கு நான் கொடுக்கும் அடியில் அவன் சாவினை அணைப்பான்! பின்னர் யுத்த முடிவு எவ்வாறிருப்பினும் கவலையில்லை!

**காந்தா:** நான் மீண்டும் சொல்கிறேன்! இப்பொழுதாவது அவர்களுடன் சமாதானமாகப் போகப்பார்!

**துரி:** இல்லைத்தாயே! அவர்களுக்கும் எனக்குமிடையே எம்மவர் சிந்திய இரத்தம் ஆழமான கடலாகக் கிடக்கிறது. இதில் சமாதானத்தின் குரலைக் கேட்பது முடியாத காரியம்! நான் இதுவரை அரசனாகவே வாழ்ந்து பழக்கப்பட்டு விட்டேன். அரசனாகவே மடிய விரும்புகிறேன்! எவருக்காவது கீழ்ப்படிந்து வாழ நான் இனிமேல் விரும்ப மாட்டேன். இனிமேல் தங்களிடம் வெற்றிக்கான ஆசியையும் கோரமாட் டேன்! நான் ஒரு சுத்த வீரனாக மடிவதற்காவது ஆசி வழங்குங்கள்! நான் இறக்கும் பாணி இறைவனையே மகிழ்விக்கும்! நான் வீரனாகவே மடிந்தேன் என்று கேள்விப்படும் தாங்கள் நிச்சயமாகத் தங்கள் கைகளை உயர்த்திப் பெருமையுடன் போற்று வீர்கள்.

(தொடர்ந்து வரும்.)

எம்.ரீ.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்ற மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

அருள் ஜுவலர்ஸ்
ARUL JUWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
436331
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

## நாயழகா? நாக்கழகா?



மனிதரில் இரட்டையர், கட்டிட இரட்டைகள் பற்றியெல்லாம் முன்பு கண்டோம். களிப்புற்றோம்.

படத்தில் இருப்பது நன்றியுள்ள நாய் இரட்டையர். கமராவுக்கு முன் கூச்சமே படாமல் ஒரே விதமாகப் போஸ் கொடுக்கச் சொன்னால் நீங்கள் வெட்கப்பட்டுச் சிணுங்குவீர்கள். இவர்கள் எப்படி கச்சிதமாகப் போஸ் கொடுத்திருக்கிறார்கள் பாருங்கள். நாக்கும் அழகுதான். அதையும் நளினமாக உபயோகப்படுத்தலாம். அடக்க வேண்டிய நேரத்தில் அடக்க வேண்டும். சுழற்ற வேண்டிய நேரத்தில் சுழற்ற வேண்டும்.

இப்போது உங்களிடம் ஒரு முக்கியமான கேள்வி; படத்தில் நாயழகா, அவை காட்டும் நாக்கழகா?

அம்மன் ஜுவல்
AMMAN JUWEL
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
332033
29 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

காதோடு இரகசியம் பேசி வம்பு விதைக்கும் மனிதரின் குணம் நாயாருக்கும் தொற்றிக் கொண்டதோ தெரியவில்லை. மகா வம்பான கிசு-கிசுவோ? கண்ணடித்துச் சிரிக்கிறாரே இரகசியம் கேட்ட நாயார்.

## யாருக்கும் சொல்லாதே!

வாரமலர் தினமுரசு







மனிதரில் மட்டும்தான் அழகு, அசத்தல் குணவிசேஷங்கள் இருக்கிறதா என்ன. 'நாய்' என்று இளக்காரமாகப் பேசுவோர் பலர் உண்டு. 'நாய் என்றால் இளக்காரமல்ல என்று 'முரசு' வாசகர்கள் அறிவார்கள். அதாகப்பட்டது; விதம் விதமாக நாய்கள், அவற்றின் கில்லாடித்தனங்கள் பற்றி 'முரசு' வெளியிட்ட தகவல்கள் அ.. அ.. அதிகம். இவ்வாரமும் நாய்-குரங்கு ஸ்பெசல்.

## ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு



அத்தி பூத்தது போலமிக அரிதான வெண் கொரில்லாக் குரங்கு தான் இது. 'அல்பினோ கொரில்லா' இனத்தைச் சேர்ந்தது.

அழகற்று இருந்தால் 'குரங்கு மாதிரி இருக்கிறாய்' என்று சொல்பவர்கள் இந்த வெண் கொரில்லாவைப் பார்த்தால் தங்கள் கருத்தை மாற்றிக் கொள்வார்கள். குரங்கழகன் போட்டி வைத்தால் நிச்சயம் முதல் பரிசு இதற்குத்தான்.

ஸ்பெயின் நாட்டின் தலைநகரான பாசிலோனா மிருகக் காட்சி சாலையில் ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு என்று பாதுகாக்கப்பட்டு வருகிறது.

வெண்தாடியோடு கண்களை இடுக்கிக் கொண்டு குரங்கார் சிரிக்கும் அழகைக் காண உங்கள் ஒரு ஜோடிக் கண்கள் போதாது; குறைந்த பட்சம் ஒரு கோடிக் கண்கள் தேவைப்படலாம்.

பிரபல பணக்காரர்கள் பலர் இதனை அள்ளிக் கொண்டு போய் ராஜா மாதிரி வைத்துக் கொள்ள ஒற்றைக் காலில் நிற்கிறார்கள். 'தரமாட்டோம்; மிருகக்காட்சி சாலைக்கு அழகு வெண் கொரில்லாவின் புன்னகை!' என்று சொல்லி விட்டார்கள்.

ஒரு சுவாரசியமான சங்கதி; மிஸ்டர் வெண் கொரில்லாவுக்கு பெண் ரசிகைகள் தொகை எக்கச்சக்கமாம். வெண் கொரில்லாவும் பெண்களைக் கண்டால் கொஞ்சம் அதிகமாகவே வழிவதாகத் தகவல். ஏனென்று ஆராயவேண்டிய சமாச்சாரம் தான்.

## ஒன்று கொடு போதும்



மீனுக்கும் ரொம்பக் குறும்பு. கிள்ளிப்பார்க்க நினைக்கிறது பாருங்கள். அட்டகாசமான இந்தப் புகைப்படம் அமோக விற்பனையாகி விட்டதாம்.

புகைப்படத்தை வாங்கிவந்த நங்கை ஒருத்திக்கு வேடிக்கை காட்ட ஆசை. தானும் ஒரு முத்த ஒத்திகை செய்வதுபோல போஸ் கொடுத்தாள். கலக்கலாக வந்துவிட்டது போஸ். உடனே அதையும் பெரிய புகைப்படமாக்கி விற்பனைக்கு விட்டார்கள். நல்ல கிராக்கி. முத்த விற்பனை! எதை எதையெல்லாம் வெளிநாட்டில் ரசிக்கிறார்கள் பாருங்கள்! நாங்களும் அப்படியா? சே...ச்....சே...!

## உடையழகா? உருவழகா?



உடையலங்காரப் போட்டிகள் தனிரகம். உலக அழகிகளையே தூக்கிச் சாப்பிடுமளவுக்கு கட்டான உடல் அழகிகள் வித விதமான ஆடைகளில் தோன்றி வியக்கவைப்பார்கள். படத்தில் அழகி அணிந்திருப்பது என்றுமே சோடைபோகாத ஆடை. பாரிசில் சமீபத்தில் நடந்த ஆடையலங்காரப் போட்டியில் முதல் பரிசைத் தட்டிக்கொண்டது இது. அணிந்திருக்கும் ஆடையால் அழகிக்கு அழகா, அல்லது அழகியின் மேனியின் கட்டான வனப்பு ஆடைக்கு அழகா? ஆயிரம் பொன் பரிசுக்குரிய கேள்வி தானோ இதுவும்.

டீ யோ வீ து வ ரு த